Registered as a News Paper in Sri lanka

விலை : ரூபா 10 .00

தினப்பதிப்பு
# தினமுரசு
THINAMURASU

அற்புதன் அச்சகம்
அனைத்து விதமான Printing வேலைகளையும்
உயர்தரத்துடனும்
குறைந்த செலவுடனும்
குறித்த நேரத்தில் பெற்றுக்கொள்ளலாம்.
T.P:- 021 222 3628
Fax:- 021 222 1811
373, பிரதான வீதி,
பஸ்ரியன் சந்தி,
யாழ்ப்பாணம்.

முரசு – 05 திருவள்ளுவர் ஆண்டு 2045 மார்கழி 08 செவ்வாய்க்கிழமை (23.12.2014) பக்கங்கள் 20 ஓசை – 084

## வடக்கில் படைக்குறைப்பு மைத்திரியின் இரகசிய ஒப்பந்தம்

### அமைச்சர் திஸ்ஸ தகவல்



(கொழும்பு)

வடக்கில் படைக்குறைப்பை மேற்கொள்வது தொடர்பாக மைத்திரி இரகசிய ஒப்பந்தம் செய்துகொண்டுள்ளதாக சுகாதார அமைச்சர் திஸ்ஸ அத்தநாயக்க தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

பொது வேட்பாளர் மைத்திரிபால சிறிசேன சர்வதேச சக்திகளுக்கு தேவையானவற்றை செய்து கொண்டிருப்பதாகவும் அவர் இந்து பத்திரிகைக்கு வழங்கிய செவ்வி மிகவும் ஆபத்தானதெனவும் சுகாதார அமைச்சர் திஸ்ஸ அத்தநாயக்க தெரிவித்துள்ளார்.

யுத்தக் குற்றம் குறித்து உள்நாட்டு விசாரணைக்கு இணக்கம் தெரிவித்துள்ளமை 19 ஆம் பக்கம் பார்க்க

## புகையிலை நிறுவனத்திடம் மைத்திரி இலஞ்சம் பெற்றார்

### அம்பலப்படுத்துகிறார் மகிந்த



(கொழும்பு)

முன்னாள் சுகாதார அமைச்சர் மைத்திரிபால சிறிசேன புகையிலை நிறுவனத்திடம் பணத்தை பெற்றுக்கொண்டு நன்றி தெரிவித்து அனுப்பிய கடிதம் சம்பந்தமான அறிக்கை தன்னிடம் இருப்பதாகவும் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

பதுளை - ஹாலி எல பிரதேசத்தில் நடைபெற்ற பொதுக் கூட்டம் ஒன்றில் உரையாற்றும் போதே அவர் இதனைக் கூறியுள்ளார்.

மகிந்த சிந்தனை மூலம் மதுவுக்கு முற்றுப்புள்ளி வைக்க இன்றைய அரசாங்கம் நடவடிக்கை எடுத்தது.

பஸ்களில் புகைத்தல், பொது இடங்களில் 19 ஆம் பக்கம் பார்க்க

# மைத்திரியின் பக்கம் தாவினார் றிசாத் பதியுதீன்



(கொழும்பு)

**அகில இலங்கை மக்கள் காங்கிரஸ், மைத்திரிபால சிறிசேன தலைமையிலான பொது எதிரணியின் பக்கம் சாய்ந்துள்ளது.**

**ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு அரசாங்கத்தில் இதுவரை அங்கம் வகித்த அமைச்சர் றிசாத் பதியுதீன் தலைமையிலான மேற்படி அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் அரசாங்கத்திலிருந்து தற்போது விலகியுள்ளது.**

ஜனாதிபதித் தேர்தலில் எதிரணிகளின் போது வேட்பாளரான மைத்திரிபால சிறிசேனவிற்கு தமது ஆதரவை வழங்க அந்தக் கட்சி நேற்று தீர்மானித்துள்ளது.

அமைச்சர் றிசாத் பதியுதீன், அக்கட்சியின் சார்பில் அண்மையில் நாடாளுமன்ற உறுப்பினராக பதவியேற்ற அமீர் அலி சகிதம் எதிர்க்கட்சித் தலைவரின் அலுவலகத்தில் நேற்று நடைபெற்ற பத்திரிகையாளர் சந்திப்பில் கலந்துகொண்டார்.

இந்தச் சந்திப்பில் எதிரணிகளின் பொது வேட்பாளர் மைத்திரிபால 19 ஆம் பக்கம் பார்க்க

### அம்பாந்தோட்டை நகர முதல்வர் கைது

(கொழும்பு)

அம்பாந்தோட்டையில் வைத்து ஐக்கிய தேசியக் கட்சியின் உறுப்பினர்களை தாக்கினார் என்ற குற்றச்சாட்டின் பேரில், அம்பாந்தோட்டை மாநகரசபை முதல்வர் எராஜ் பெர்ணான்டோவை பொலிஸார் நேற்று கைது செய்துள்ளனர்.

இவரை நாளை அம்பாந்தோட்டை நீதவான் நீதிமன்ற நீதவான் முன்னிலையில் ஆஜர் படுத்தவுள்ளதாக பொலிஸ் 19 ஆம் பக்கம் பார்க்க

## கழிவகற்றல் வலையமைப்பு யாழ். நகரில் அடுத்த மாதம் ஆரம்பம்

(யாழ். நிருபர்)

தேசிய நீர்வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு சபையினால் யாழ். - கிளிநொச்சி நீர்வழங்கல் மற்றும் கழிவகற்றல் திட்டத்தினூடாக யாழ். மாநகரசபை பிரதேசத்தில் கழிவகற்றல் வலையமைப்பானது அமைக்கப்படவிருக்கிறது.

இத்திட்டத்தின் நிர்மாணம் 2015 ஜனவரி மாதம் தொடக்கம் 2017 ஜனவரி மாதம் வரை இடம்பெறுமென எதிர்பார்க்கப்படுகிறது.

தற்போது யாழ். மாநகரசபை பிரதேசத்தில் 120,000 மக்கள் வசிக்கிறார்கள். இப்பிரதேசத்தில் சரியான முறையில் கழிவகற்றல் இடம்பெறாமையால் நீர், வளி, நிலம் என்பன மாசடைகிறது. நீர் சார்ந்த நோய்கள் பரவும் அபாயம் உள்ளது. மனித மற்றும் தொழிற்சாலை கழிவுகள் என்பன 19 ஆம் பக்கம் பார்க்க

## மனைவி மீது கத்திவெட்டு; கணவன் பொலிஸாரிடம் சரண்

(யாழ்ப்பாணம்)

யாழ். போதனா மருத்துவமனையின் பெண் சிற்றூழியர் ஒருவர் யாழ். நகரில் துரத்தி துரத்தி அவரது கணவனால் வெட்டப்பட்டு படுகாயமடைந்துள்ளார்.

இச்சம்பவம் நேற்றுக் காலை 6.30 மணியளவில் யாழ். நகர வீதியில் இடம்பெற்றுள்ளது.

இச்சம்பவத்தில் புங்குடுதீவு முதலாம் வட்டாரத்தைச் சேர்ந்த எ.நிசாந்தி (வயது - 28) என்ற இரு குழந்தைகளின் தாயே படுகாயமடைந்துள்ளார். சம்பவம் குறித்து மேலும் தெரியவருவதாவது,

குடும்பத் தகராறினால் கடந்த 6 வருடங்களாக கணவனை பிரிந்து 19 ஆம் பக்கம் பார்க்க


## வான்பாய்கிறது இரணைமடு

இரணைமடுக்குளத்தின் பாதுகாப்பு நிலைமைகளை நாடாளுமன்ற உறுப்பினர் சந்திரகுமார் நேற்று மாலை பார்வையிட்டார். குளத்தின் பாது காப்பு கருதி 11 வான்கதவுகளும் நேற்று மாலை திறக்கப்பட்டன.

நீர் வரத்து அதிகரித்ததன் காரணமாக இரணைமடுக்குளத்தின் வான் கதவுகள் நேற்று திறக்கப்பட்டன. இதனைத் தொடர்ந்து குளத்தின் பாதுகாப்பு நிலைமைகள் குறித்து நாடாளுமன்ற உறுப்பினரும் குழுக்களின் பிரதித்தலைவருமான மு.சந்திரகுமார் நேரில் சென்று பார்வையிட்டார். நேற்று மாலை 6.00 மணியளவில் குளத்தின் 11 வான்கதவுகளும் திறக்கப்பட்டது.

வடமாகாணத்தின் பாரிய நீர்ப்பாசனக் குளமாகிய இரணைமடுக் குளத்திற்கான நீர்வரத்து அதிகரித்ததன் காரணமாக நேற்றுக் காலை 8.30 மணியளவில் இக்குளத்தினது 11 வான் கதவுகளில் ஐந்து கதவுகள் ஆறு அங்குலம்வரை திறக்கப்பட்டன.

இதன்போது குளத்தின் நீர்மட்டம் 31 அடி ஏழு அங்குலமாக காணப்பட்டதுடன் குளத்தின் கொள்ளளவு 91 ஆயிரம் ஏக்கர் அடியாகவும் நீர் உள்வரும் அளவு செக்கனுக்கு 7182.28 கன அடியாகவும் நீர் வெளிச் 19 ஆம் பக்கம் பார்க்க



# தச்சன்தோப்பில் விபத்து; இரு சில்லு உழவியந்திரம் சேதம்

## சாரதி படுகாயம்




(யாழ்ப்பாணம்)

தச்சந்தோப்பு ஆலடிப் பகுதியில் நேற்று முன்தினம் மாலை இடம்பெற்ற வாகன விபத்தில் இரு சில்லு உழவு இயந்திரம் சேதமடைந்துள்ளதுடன், அதன் சாரதி காயமடைந்துள்ளார்.

நேற்று முன்தினம் 6.00 மணியளவில் மன்னார்ப் பகுதியில் இருந்து வந்த வாகனம் ஒன்று வேகக்கட்டுப்பாட்டை இழந்து வீதியோரம் தரித்து நின்ற இரு சில்லு உழவு இயந்திரத்துடன் மோதி சுக்கு நூறாகியதுடன், எதிரே வந்த இலங்கை போக்குவரத்துச் சபையின் யாழ். சாலைக்குச் சொந்தமான கோயிலாக்கண்டிக்குச் சென்ற பேருந்தையும் மோதியதுடன், நெல் வயலுக்குள் வீழ்ந்து விபத்துக்குள்ளாகியுள்ளது.

இதில் உழவு இயந்திரச் சாரதி சிறு காயத்திற்கு இலக்கானார். வாகனச் சாரதி சாவகச்சேரி பொலிஸாரினால் கைது செய்யப்பட்டதுடன், பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டுள்ளார். (இ)





கிளிநொச்சி திருநகர் வடக்கு பகுதியில் மழை வெள்ளம் காரணமாக நேற்று 35 குடும்பங்கள் இடம்பெயர்ந்துள்ளன. கிளிநொச்சி, பனை தென்னை வள கூட்டுறவுச் சங்கத்தினர் தமது உழவியந்திரத்தின் மூலம் இவர்களை ஏற்றிச்சென்று கிராம அபிவிருத்திச் சங்க கட்டடத்தில் தங்க வைத்துள்ளனர். (81)

# தொழில்நுட்ப மாற்றுப் பயிற்சிநெறி

(யாழ்ப்பாணம்)

LED மின் குமிழ் உற்பத்தியாக்கல் பயிற்சி நெறியை, சிறப்புத் தேர்ச்சி பெற்ற வளவியலாளரால் யாழ்ப்பாணத்தில் நடாத்துவதற்கு இலங்கை கைத்தொழில் அபிவிருத்திச் சபையின் யாழ்.மாவட்ட அலுவலகம் ஒழுங்குகளை மேற்கொண்டு வருகிறது.

இப்பயிற்சி நெறிக்கு க.பொ.த.சாதாரண தரத்தில் விஞ்ஞான பாடத்தில் சித்தியடைந்தவர்கள் விரும்பத்தக்கது.

இப்பயிற்சி நெறியில் கலந்துகொள்ள விரும்பும் தொழில் முயற்சியாளர்கள் பதிவு செய்யுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

இலங்கை கைத்தொழில் அபிவிருத்திச் சபை, மாவட்ட அலுவலகம், தேசிய வீடமைப்பு அதிகார சபை கட்டடம், சுண்டுக்குளி, யாழ்ப்பாணம் (தொலைபேசி இல.0212222421) என்ற முகவரியில் பதிவுகளை மேற்கொள்ளலாம்.

## DDTV யின் இன்றைய நிகழ்ச்சிகள்

| TIME | செவ்வாய்க்கிழமை |
|---|---|
| Am 05.00 | ஆலய தரிசனம் (பக்திப் பாடல்கள்) |
| Am 07.00 | காலைக் கதிர் |
| Am 08.00 | நாளிதழ் நேரம் |
| Am 09.00 | SMS Time (Live) |
| Am 09.58 | காலை செய்திகள் |
| Am 10.00 | Hello DD |
| Am 10.30 | தெரிந்தால் சொல்லுங்கள் |
| Am 11.00 | சிரிக்க சிரிக்க |
| PM 12.00 | அதிர்வுகள் |
| PM 12.30 | அதிர்வுகள் |
| PM 01.20 | பாடல்கள் |
| PM 01.30 | திரைப்படம் |
| PM 03.58 | மாலை செய்திகள் |
| PM 04.00 | மழலைகள் |
| PM 05.00 | சிரிக்க சிரிக்க |
| PM 06.00 | நாளிதழ் நேரம் |
| PM 07.00 | அதிர்வுகள் |
| PM 07.30 | அதிர்வுகள் |
| PM 08.00 | பிரதான செய்திகள் |
| PM 08.30 | Hello DD |
| PM 09.00 | திரைப்படம் |
| PM 11.30 | நீங்காத நினைவுகள் |

# நவாலி, மானிப்பாய் பகுதிகளில் நுளம்புகள் பெருக்கம்

(நவாலி)

நவாலி, மானிப்பாய் பகுதிகளில் நுளம்புகளின் பெருக்கமும், தாக்கமும் மிக வேகமாக அதிகரித்துள்ளது. கடந்த மாத இறுதியில் ஒரு வார காலமாகப் பெய்த மழையின் வெள்ள நீர், நவாலி வேலக்கைப் பிள்ளையார் ஆலய சுற்றாடல் பகுதி, மகேசன் வீதி, நவாலி அரசடிப் பகுதி வெற்றுக் காணிகள் போன்றவற்றில் தொடர்ந்து ஓட முடியாது தேங்கி நிற்பதால் நுளம்பு பெருக்கம் அதிகரித்துள்ளதாக பொதுமக்கள் தெரிவிக்கின்றனர்.

வெள்ளநீர் ஓடமுடியாதவாறு நவாலி பகுதி மகேசன் வீதி, வடிகால்கள், அரசடிப் பகுதியில் உள்ள நீர் வடிகால், வாய்க்கால்கள் காணப்படுவதால் நீர் தேங்கி நிற்பதாக தெரிவிக்கப்படுகின்றது.

இதேவேளை, இப்பகுதிகளில் நுளம்புகளின் தாக்கம் அதிகரித்துள்ளதாக பொதுமக்கள் தெரிவிக்கின்றனர்.

நவாலி அரசடிப் பகுதியில் வெற்றுக்காணிகள், குடியிருப்பு வளவுகள் சிலவும் புல்பூண்டுகள் வளர்ந்து காணப்படுவதாகவும் சம்பந்தப்பட்ட தரப்புகள் இவ் விடயத்தில் கவனமெடுத்த நுளம்புத் தாக்கத்தைக் கட்டுப்படுத்த வேண்டும் எனப் பொது மக்கள் தெரிவிக்கின்றனர். (66)

## தேர்த்திருவிழா

(கட்டுவன்)

கட்டுவன் கரண்டக்குளம் ஸ்ரீ ஜயப்பன் கோவில் தேர்த் திருவிழா இன்று காலை 9.00 மணிக்கு வசந்த மண்டப பூஜையைத் தொடர்ந்து நடைபெறும்.

நாளை புதன்கிழமை காலை 9.00 மணிக்கு தீர்த்தோற்சவமும், திருவூஞ்சலும் அதைத் தொடர்ந்து கொடியிறக்கமும் இடம்பெறும்

## நாடக ஆற்றுகை

(யாழ்ப்பாணம்)

யாழ்.பல்கலைக்கழக கலைப்பீட நுண்கலைத்துறை மாணவர்களது பங்களிப்புடன் நாளை மாலை 3.00 மணியளவில் பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் 'நினைவின் கனவு' எனும் சமூக நாடக ஆற்றுகை நிகழ்த்தப்படவுள்ளது.

## வரவு-செலவுத் திட்டம் பொதுமக்கள் பார்வைக்கு

(வேலணை)

1987ஆம் ஆண்டின் 15ஆம் இலக்க பிரதேச சபைகள் கட்டளைச் சட்டத்தின் 168 ஆம் பிரிவிற்கிணங்க வேலணை பிரதேச சபையின் 2015 ஆம் ஆண்டுக்கான வரவு-செலவுத் திட்டம் தயாரிக்கப்பட்டு இன்று முதல் எதிர்வரும் 31 ஆம் திகதி வரை அலுவலக நேரத்தில் தலைமை அலுவலகத்தில் பார்வைக்கு வைக்கப்பட்டிருக்கும் என வேலணைப் பிரதேச சபையின் தவிசாளர் சி.சிவராசா அறிவித்துள்ளார்.

## சிறு விளம்பரம்

### டயானா பிளாஸ்ரிக் றீசைக்கிள் (மீள்சுழற்சி)

அனைத்து வகையான கழிவு பிளாஸ்ரிக், பொலித்தீன், என்பன விலைக்கு வாங்கப்படும். ரூபா 30 தொடக்கம் ரூபா 70 வரை.

இல.108, பலாலி வீதி,
யாழ்ப்பாணம்.
(இலுப்பையடிச் சந்தி அருகாமை)
021 222 8680,
077 592 5088.
(C3800)

## மக்கள் வங்கி அறிவித்தல்

மக்கள் வங்கியின் பின்வரும் கிளைகளிலும் சேவை நிலையங்களிலும் 31.12.2013 வரையும் அடகுவைத்து மீட்கப்படாத நகைகள் 14.02.2015 தொடக்கம் காலை 8.30 மணிக்கு மக்கள் வங்கி, யாழ்.பிராந்திய தலைமையகத்தில் வைத்து பகிரங்க ஏலத்தில் விற்கப்படும்.

| கிளைகள் | சேவை நிலையம் |
|---|---|
| யாழ்.ஸ்ரான்லி வீதி | நாவலர் வீதி |
| | மானிப்பாய் |
| காங்கேசன்துறை | மல்லாகம் |
| யாழ்.பிரதான வீதி | உரும்பிராய் |
| ஊர்காவற்றுறை | -- |
| நெல்லியடி | -- |
| அச்சுவேலி | புத்தூர் |
| சங்கானை | பண்டத்தரிப்பு |
| சுன்னாகம் | கோப்பாய் |
| | அளவெட்டி |
| சாவகச்சேரி | கொடிகாமம் |
| | கைதடி |
| வல்வெட்டித்துறை | உடுப்பிட்டி |
| யாழ்.பல்கலைக்கழகம் | திருநெல்வேலி |
| | கல்வியங்காடு |
| யாழ்.கன்னாதிட்டி | இணுவில் |
| பருத்தித்துறை | புலோலி |

அறிவித்தலின்றி திகதியை ஒத்திப் போடுவதற்கும் ஏலம் விடப்படும் இடத்தினை மாற்றுவதற்கும் உரிமை வங்கிக்கு உள்ளது.

பிராந்திய முகாமையாளர்,
மக்கள் வங்கி,
பிராந்திய தலைமையகம்,
கன்னாதிட்டி வீதி.
யாழ்ப்பாணம்.
(C3479)

# நீலாஞ்சேனை பிரதான வீதியை செப்பனிடும் பணியில் மன்னார் பொலிஸார்

(மன்னார்)

மன்னார் பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட நீலாஞ்சேனை கிராமத்திற்கு செல்லும் பிரதான பாதை பல வருடங்களாக போக்குவரத்து செய்ய முடியாத நிலையில் காணப்படுகின்றமையினால் அக்கிராம மக்களின் கோரிக்கைக்கு அமைவாக குறித்த வீதியை செப்பனிடும் பணியில் மன்னார் பொலிஸார் கடந்த வியாழக்கிழமை முதல் ஈடுபட்டு வருகின்றனர்.

குறித்த வீதியை செப்பனிட்டுத் தருமாறு அக்கிராம மக்கள் மன்னார் பிரதேச சபை, அரசாங்க அதிபர், பிரதேச செயலாளர், அரசியல் வாதிகள் ஆகியோரிடம் தொடர்ந்தும் கோரிக்கை விடுத்தனர்.

ஆனால் எந்த அதிகாரிகளும் குறித்த வீதியை புனரமைத்துக் கொடுக்கவில்லை. யுத்தத்தினால் இடம் பெயர்ந்து மீண்டும் மீள் குடியேறி பல வருடங்களைக் கடக்கின்ற நிலையில் எவ்வித அடிப்படை வசதிகளும் இன்றி அக்கிராம மக்கள் குறித்த வீதியினால் பயணம் செய்து வந்துள்ளனர்.

தற்போது மழைகாலம் என்பதினால் இவ் வீதியில் மழை நீர் தேங்கி குளம் போல் காட்சியளிக்கின்றது.

இந்த நிலையில் குறித்த மக்கள் மன்னார் பொலிஸாரிடம் முன் வைத்த கோரிக்கைக்கு அமைவாக மன்னார் பொலிஸார் வடமாகாண சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகரின் அனுமதியுடன் இவ் வீதியை புனரமைப்புச் செய்வதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்ட நிலையில் மன்னார் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி அஜந்த ரொட்ரிக்கோ தலைமையில் மன்னார் பொலிஸ் நிலையத்தைச் சேர்ந்த பொலிஸார் அக்கிராம மக்கள், சிவில் அமைப்புக்களின் பிரதி நிதிகள் ஆகியோர் இணைந்து இவ் வீதியை புனரமைக்கும் பணியில் ஈடுபட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

# வவுனியாவில் மீள்குடியேறிய மக்கள் தொடர்மழையால் பாதிப்பு




தொடர் மழையால் வவுனியாவில் மீளக்குடியேறிய மக்கள் கடும் பாதிப்புக்குள்ளாகியுள்ளனர்

குறிப்பாக ஓமந்தை, அரசமுறிப்பு, அரசங்குளம், வேப்பங்குளம், இளமருதங்குளம் மாளிகை, சேமமடு, வினாயகபுரம் போன்ற கிராமங்களில் மக்கள் மீளக்குடியேறிய நிலையில் அவர்களுக்கு வீட்டுத்திட்டம் வழங்கப்படாமையால் மண்குடிசையமைத்து வாழ்ந்து வந்த மக்களே மண் சுவர்கள் இடிந்து விழுந்து பாதிப்புக்குள்ளாகியுள்ளனர்

வவுனியாவில் பெய்து வரும் மழை காரணமாகவவுனியா மாவட்டத் தில் இதுவரையில் 510 குடும்பங்களைச் சேர்ந்த 1943 பேர் பாதிக்கப்பட்டுள்ளதாக மாவட்ட அனர்த்த முகாமைத்துவப் பணிப்பாளர் ரி.என்.சூரியராஜா தெரிவித்துள்ளார்.

(70)

# விதை நெல்லுக்கான காசோலை வவுனியா விவசாயிகளுக்கு வழங்கல்



(யாழ்ப்பாணம்)

நெடுங்கேணி கமநல சேவை நிலையத்தினால் தெரிவு செய்யப்பட்ட 2664 விவசாயிகளுக்கு வவுனியா வடக்கு நெடுங் கேணி பிரதேச செயலகத்தினால் விதை நெல்லுக்கான காசோலை வழங் கப்பட்டுள்ளது.

நெடுங்கேணி பிரதேச செயலாளர் க.பரந்தாமன் இவ் விவசாயிகளுக்கு விதை நெல்லுக்கான 24 மில்லியன் ரூபா பெறுமதியான காசோலையை வழங்கியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

(40)

# எங்களின் எதிரி யார்?




கல்வியை உயிர் நாடியாக கொண்டவர்கள் நாங்கள்.

உரிமையை உயிர் மூச்சாக போற்றுகின்றவர்கள் நாங்கள்.

கல்வியில் தரப்படுத்தல் வந்தபோது அதையே போராட்டத்திற்கான பிரதான காரணமாக்கியவர்கள்.

அதைப்போல, உரிமைக்காக பல்லாயிரக்கணக்கான உயிர்களை இழந்தவர்கள்.

ஆனால், எங்களது கல்வி பற்றிய பார்வை என்ன?

எங்களுடைய உரிமை பற்றிய விளக்கம் என்ன?

கல்வியை வியாபாரமாக்கியவர்கள் நாங்கள்.

படித்து பட்டம் பெற்று, உத்தியோகம் கிடைத்தவுடன் சீதனம் வாங்குவதற்காக கல்வியை பயன்படுத்துகிறோம். அல்லது சமூகத்தில் பதவி வழியாக அதிகாரம் செலுத்த முனைகின்றோம்.

இதற்காகவே, எங்களுக்கு கல்வி தேவைப்படுகிறது.

மாறாக, அறிவைப் பெருக்கி அந்த அறிவின் மூலம் மக்களுக்கு பயனுடைய விடயங்களை செய்வதற்கு எமது கல்வி உதவவில்லை.

எங்களுடைய உயர் கல்வி நிறுவனமான பல்கலைக்கழகங்கள் மக்களோடு இணைந்தவையாக இல்லை.

பதிலாக அவை மக்கள் மீது அதிகாரம் செலுத்துதல், மக்களை தவறான வழியில் இட்டுச் செல்லவுமே முனைகின்றன.

பல்கலைக்கழகங்களில் பல்வேறு துறைகளில் உயர் கல்வி துறைசார்ந்து கற்பிக்கப்படுகின்றது.

ஆனால், இதில் எத்தனை துறைசார் நிபுணர்கள் உருவாகியிருக்கிறார்கள். அல்லது எத்தனை பேர் குறித்து துறைசார்ந்து சமூகத்தில் தொழிற்படுகின்றார்கள்? அல்லது குறித்த துறைகளின் மேம்பாட்டிற்காக இவற்றில் எத்தனை பேர் தமது துறைசார் அறிவை செலுத்துகிறார்கள்.

அப்படி துறைசார் அறிவைப் பயன்படுத்தியிருந்தால் எமது சமூகத்தில் பல துறைகளிலும் பெரும் முன்னேற்றம் ஏற்பட்டிருக்கும்.

குறிப்பாக, கல்வித்துறையே பெரிய வீழ்ச்சி காணக்கூடியதாக இருக்கும்.

ஒவ்வொரு ஆண்டும் பரீட்சைகளில் எத்தனை பேர் தோற்றுகிறார்கள்? அதில் எத்தனை பேர் சித்தியடைகிறார்கள்? என்று கணக்குப் பார்ப்பது முக்கியமல்ல, கல்வியை ஒரு அறிவு சார்ந்து வாழ்க்கைக்கு உகந்த முறையில் அதை எவ்வாறு பயன்படுத்தலாம் என எத்தனை பேர் சிந்தித்திருக்கிறார்கள்? அல்லது அதை பயன்படுத்துகிறார்கள் என்பதிலேயே கல்வி அறிவு தங்கியுள்ளது.

அப்படிப் பார்த்தால் எமது நிலை பூச்சியம்தான்.

கல்வியை சுய தேவைக்காக ஒரு கருவியாக நாம் பயன்படுத்தி வருகின்றோம்.

இதனாலேயே எம்மிடையே அறிஞர்கள் உருவாகவில்லை. நிபுணர்களும் உருவாகவில்லை.

இவ்வளவுக்கும் கல்வியை இலவசமாக பெறுகின்ற மக்கள் நாம்.

இலவசமாக கல்வியைப் பெறுகின்ற நாம், அந்தக் கல்வி மக்களுக்கே உரித்தானது என்று உணர்ந்து கொள்ளவில்லை.

மக்களுக்கே உரித்தான கல்வி என்றால் அது மக்களுக்கு உரிமையானது. அந்த உரிமையை சேவையாக வழங்குவது படித்தவர்களின் கடமை. அறிவின் மாண்பு அதுதான்.

ஆனால், இதை மீறும் வகையிலேயே படித்தவர்கள் நடந்துகொள்கின்றார்கள். நிர்வாக மையங்கள், பாடசாலைகள், பல்கலைக்கழகங்கள் எங்குமே இதனை நாங்கள் அவதானிக்கலாம்.

மிகச் சிறிய அல்லது மிகக் குறைந்த எண்ணிக்கையானவர்களே தம் கல்வியை அறிவாக்கி அதனை சேவையாகவும், சமூகத்திற்கான சிந்தனையாகவும் துறைசார் வளர்ச்சிக்கான பங்களிப்பாகவும் வழங்குகின்றனர்.

கல்வியை கண் என்று கருதுகின்ற சமூகத்தின் நிலைமை இதுதான்.

இது குறித்து எந்த வருத்தங்களும் நமக்கு கிடையாது.

அதனால்தான் பிற சமூகங்கள், வளர்ச்சியை நோக்கி சென்றுகொண்டிருக்க, நாமோ நலிவுற்றுக் கிடக்கிறோம்.

ஆனால், இதைப்பற்றி சிந்திக்காமல், எமது எதிரிகளே வீழ்ச்சிக்கு காரணம் என்று சொல்லிக்கொண்டிருக்கிறோம்.

உண்மையில் எங்களுக்கு எதிரிகள் நாங்களே.

எல்லோருமே வெற்றியை விரும்புகின்றனர். ஆனால் ஒரு சிலரே அதற்காக உழைக்கின்றனர் - சிசரோ

தினப்பதிப்பு
தினமுரசு
THINAMURASU

இல:373, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி : 0212223628, கைத்தொலைபேசி : 0777193264
தொலைநகல் : 0212221811, thinamurasu@live.com
Online : www.emurasu.com

## பம்மாத்து அரசியல் எதுவரை?

எப்போதும் வழிகளை மூடிவிட்டுக் கொண்டிருப்பது சுலபம். வழியைத் திறந்துகொள்வதற்குத்தான் அதிக பிரயாசை மேற்கொள்ள வேண்டும். கோயில் கதவைத் திறக்க வைப்பதற்கு நாவுக்கரசர் பத்துப் பாடல்களைப் பாட வேண்டியிருக்கிறது. திருஞானசம்பந்தருக்கோ ஒரு பாடலிலேயே கதவு மூடிவிடுகிறது. இதைப் பற்றி ஆன்மீகப் பேச்சாளர் ஒருவர் சொல்லக் கேட்ட கதை:

மூடிக் கிடந்தது கோயில் கதவு. திறக்கப் பாடுங்கள் என்றதும் திருநாவுக்கரசர் பாடினார். முதல் பாடலுக்கு கதவு திறக்கவில்லை. அடுத்தடுத்துப் பாடிக்கொண்டே இருந்தார். பத்துப் பாடல்களுக்கு பிறகுதான் கதவு திறந்தது. ஆனால் பிறகு கதவை மூடவேண்டும் என்றவுடன், ஞானசம்பந்தர் பாடிய முதல் பாடலுக்கே கதவு மூடியது.

திருநாவுக்கரசருக்கு இதனால் வருத்தமுண்டானது. என்ன இருந்தாலும் சம்பந்தன் ஞானப்பால் குடித்தவனல்லவா, அதனால்தான் முதல் பாடலுக்கே இறைவன் செவிசாய்த்துவிட்டான் என்று மனதுக்குள் சொல்லிக் கொண்டார். ஆனால் அப்பருக்குக் கேட்ட அசரீரி அதனை மறுத்தது. "இல்லை... உனது முதல் பாடலுக்கே கதவு திறந்தால் அடுத்து நீ பாடியிருக்க மாட்டாய். உனது பாடல்களைக் கேட்கும் விருப்பத்தினாலேயே கதவு உடனடியாகத் திறக்கப்படவில்லை" என்று விளக்கம் கிடைத்ததாம்.

அது, இனிய தமிழுக்கு இறைவனும் அடிமை என்று விளக்குவதற்காகச் சொல்லப்படுவது. இங்கு எந்தக் கதவையும் திறக்க விடாமல் ஒவ்வொரு கதவாய் மூடி மூடிக்கொண்டே வருபவர்களைப் பார்த்தால் இவர்கள் தங்களுக்குப் பிடித்தமான அந்தக் கதிரைகளுக்கு அடிமையாகி இருப்பதுதான் இப்படியான முட்டுக்கட்டைகளைத் தொடர்வதற்குக் காரணம் என்பதையே ஒப்புக்கொள்ள வேண்டியிருக்கிறது.

இலங்கை சுதந்திரமடைந்ததற்குப் பின்னரான வரலாற்றில், தமிழ்த் தலைமையாகத் தங்களை முடிசூடிக் கொண்டோர் மூடி வந்த கதவுகளையும், குழப்பி வந்த வாய்ப்புகளையும் திரும்பிப் பார்த்தால், இதைப் புரிந்துகொள்ள முடிகிறது. தமிழ் மக்களின் அமோகமான வாக்குகளைப் பெற்று நீண்டகாலமாகத் தொடர்ந்து பாராளுமன்றம் சென்று வந்துகொண்டிருப்பவர்கள் இந்தத் தமிழரசுத் தலைவர்களும் அவர்களது நீட்சிகளுமே.

அப்படியானால், தமிழ்மக்களின் பிரச்சினை தீராமல் தொடர்வதற்கும், இன்னும் நீங்காமல் இருக்கும் அவர்களது அல்லல்கள் அழிவுகளுக்கும் பதில் சொல்ல வேண்டியவர்கள், இவர்களல்லாமல் வேறு யார்?

ஆனால், காலத்துக்குக் காலம் இவர்கள் வேறு யார் மீதிலாவது பழியை போட்டுக்கொண்டு தாங்கள் பாராளுமன்றம் போய் வந்துகொண்டிருப்பதே வரலாறாக இருக்கிறது.

சிங்கள ஆட்சியாளர்கள் சரிவரவே மாட்டார்கள், அவர்கள் அழிந்தால்தான் தீர்வு வரும் என்பார்கள். பிறகு தமிழர்களுக்குள்ளேயே உள்ள துரோகிகள் ஒழிந்தால்தான் தீர்வு வரும் என்பார்கள்.

இந்த முஸ்லிம்கள் முட்டுக்கட்டை போடுகிறார்களே என்று நம்மைவிட சிறுபான்மையாக இருப்போர் மீதும் வெறுப்பைக் கக்குவார்கள்.

திடீரென்று, ராணுவத்தளபதி பொன்சேகாவை ஜனாதிபதி ஆக்க வாக்குப்போடச் சொல்வார்கள். இப்ப மைத்திரிக்கு வாக்குப் போட்டு மகிந்தவை வீட்டுக்கு அனுப்பினாலும் தமிழர்களுக்கு ஏதோ நடக்கும் என்பதுபோல உணர்த்துவார்கள். என்ன நடக்கும் என்று ஊடகங்கள் புத்திஜீவிகளும் கேட்பதில்லை; மக்களும் கேட்பதில்லை.

இன்னும் பெரிய ஏமாற்றாக, சர்வதேசமும் இந்தியாவும் தான் எதையாவது செய்ய வேண்டும் என்பார்கள். அவர்கள் சொல்வதையும் காதில் போட்டுக்கொள்ளாமல், குழப்பிக் குழப்பிக் கொண்டிருப்பதை மறைக்க வீர வசனங்களைப் பேசி மக்களுக்கு வெறுப்பும் ரோசமும் ஊட்டிக்கொண்டிருப்பார்கள்.

எதுவரை தொடரும் இந்தப் பம்மாத்து அரசியல்?

- ஆசிரியர்

# பொது எதிரணி தேர்தல் விஞ்ஞாபனத்தில் எமக்கான தீர்வு கிடைக்கலாம்

## நம்பிக்கை கொள்ளும் ஹசன்அலி

(கொழும்பு)

இனப்பிரச்சினைக்கு தீர்வு காண்பதில் நாம் தொடர்ச்சியாக பல முயற்சிகளை மேற்கொண்டிருந்த போதிலும் அரசாங்கம் கதவடைத்து விட்டது. அரசாங்கத்தின் செயற்பாடுகள் மீது ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் விரக்தியுடனேயே உள்ளது என தெரிவித்த காங்கிரஸின் பொதுச் செயலாளர் ஹசன் அலி எம்.பி. பொது எதிரணியின் தேர்தல் விஞ்ஞாபனத்தில் எமக்கான தீர்வு கிடைக்கும் என்ற நம்பிக்கை உள்ளது எனவும் குறிப்பிட்டார்.

அரசாங்கத்தினை பிரதிநிதித்துவப்படுத்திய நாம் அரசாங்கத்தின் வெற்றியின் பங்குதாரர்களாக உள்ள போதிலும் எமது முயற்சிகள் பல வெற்றி பெறாத நிலையில் உள்ளன.

இனப்பிரச்சினைக்கான தீர்வு தொடர்பில் நாம் ஆரம்பத்தில் இருந்தே அரசாங்கத்திடம் வலியுறுத்தி வருகின்றோம். முஸ்லிம் மக்களின் பிரச்சினைகள் தொடர்பில் தெரிவுக் குழுவில் பேச முயன்ற போது அரசாங்கத்தின் தெரிவுக் குழுவில் இருந்தே எம்மை நீக்கிவிட்டனர்.

முஸ்லிம் மக்களின் பிரச்சினைகளில் அரசாங்கத்திடம் தீர்வு இல்லை என்பதற்கு சமமான வகையில் எம்மீது அரசாங்கத்தின் செயற்பாடுகள் அமைந்து விட்டன. தற்போதும் நாம் அரசாங்கத்தின் மீது விரக்தியிலேயே உள்ளோம். ஜனாதிபதி முஸ்லிம்களின் பிரச்சினைக்கான தீர்வுக் கதவினை மூடி விட்டார். அவரை நம்பி ஏமாற்றம் மட்டுமே இது வரையில் மிஞ்சியுள்ளது.

எனினும் பொது எதிரணியின் தேர்தல் விஞ்ஞாபனத்தில் சிறுபான்மை மக்களின் பிரச்சினைகளுக்கு தீர்வு எட்டப்பட வாய்ப்புகள் உள்ளதாக தெரிகின்றது. அரசாங்கம் தெரிவுக் குழுவிலேயே எம்மை நீக்கி விட்டுள்ள நிலையில் எமது கொள்கைகள் மற்றும் கருத்துக்கள் மூடப்பட்டு விட்டது.

எனினும் பொது எதிரணி அனைத்து கட்சிகளையும் இணைத்து தமது தேசிய அரசாங்கத்தை முன்னெடுத்து செல்வதாக குறிப்பிட்டிருப்பது வரவேற்கத்தக்க விடயமாக நாம் கருதுகின்றோம்.

பொது எதிரணி தேசிய பிரச்சினைக்கு தீர்வு காணும் வகையிலான நல்லதொரு சமிக்ஞையினை வழங்கியுள்ளது. அதே போல் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தற்போதும் அரசாங்கத்தை பாதுகாக்கவோ அவர்களின் வெற்றியினை உறுதிப்படுத்தவோ செயற்படவில்லை.

நாம் எப்போதும் எமது மக்களை பிரதிநிதித்துவப்படுத்தவே முயற்சித்து வந்துள்ளோம். இப்போதும் கட்சியின் இறுதித் தீர்மானம் கட்சியின் தலைவரினால் மேற்கொள்ளப்படும் என தெரிவித்துள்ளதாக அவரின் முடிவிற்காக காத்திருக்கின்றோம் எனவும் குறிப்பிட்டார்.

# சந்திரிகாவிற்கு எதிரான கருத்து அமைச்சர் எஸ்.பி. பதவி விலக வேண்டும்

## பிறைடே போரம் தெரிவிப்பு

முன்னாள் ஜனாதிபதி சந்திரிக்கா பண்டாரநாயக்கவுக்கு எதிராக சர்ச்சைக்குரிய கருத்தொன்றை வெளியிட்டமை தொடர்பில், அமைச்சர் எஸ்.பி.திஸாநாயக்க உடனடியாக பதவி விலக வேண்டும் என இலங்கை புத்திஜீவிகள் குழுக்களில் ஒன்றான த பிறைடே போரம் (The Friday Forum) தெரிவித்துள்ளது.

"சந்திரிக்கா என்பவர் கீழே தள்ளி மிதித்து, வீதியில் ஓட வைக்கப்பட வேண்டியவர்" என எஸ்.பி.திஸாநாயக்க அண்மையில் குறிப்பிட்டிருந்தார். இதற்கு எதிர்க்கட்சிகள் மற்றும் பெண்கள் அமைப்புக்கள் போன்றன தமது எதிர்ப்பை வெளியிட்டன.

இந்தநிலையில் அமைச்சருக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுப்பது தொடர்பில் பரிசீலனை செய்யுமாறு பிறைடே போரம் சட்டமா அதிபரிடம் வலியுறுத்தியுள்ளது.

# கொக்குவில் பொதுநூலகத்தின் புனரமைப்பு விரைவில் ஆரம்பம்

## நல்லூர் பிரதேச சபை தவிசாளர் தெரிவிப்பு

கொக்குவில் பொது நூலகம் விரைவில் புனரமைப்பு செய்யப்பட்டு அரைகுறையாக இருக்கும் மிகுதிக் கட்டட வேலைகள் ஆரம்பிக்கப்படவுள்ளதாக நல்லூர் பிரதேச சபைத் தவிசாளர் ப.வசந்தகுமார் தெரிவித்துள்ளார்.

2015 ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டத்தில் முன்னுரிமை அளிக்கப்பட்டிருக்கும் வேலைகளில் நூலகக் கட்டடமும் ஒன்று என அறிவிக்கப்பட்டுள்ளது.

இன் நூலகத்தின் ஒரு பகுதி கடந்த ஐந்து வருடங்களுக்கு முன்னர் கட்டுவிப்பதற்கு வேலைகள் ஆரம்பிக்கப்பட்டன. ஆனால் கட்டடம் கட்டப்படுவதும், பின்னர் வேலைகளை ஆரம்பித்த ஒப்பந்தக்காரர்கள் விட்டு விட்டுப் போவதும் வழக்கமாக இருந்தது. இப்படியே பல வருடங்கள் கடந்த நிலையில் நூலகக் கட்டடம் கட்டப்படாமல் அதன் வேலைகள் இழுபட்டுக் கொண்டே போயின இந்த நிலையில் நூலகத்தின் முன்பகுதிக் கட்டட வேலைகள் மீண்டும் ஆரம்பிக்கப்படவுள்ளதாகவும், வரவு செலவுத் திட்டத்தில் அதற்கு முன்னுரிமை கொடுக்கப்பட்டிருப்பதாகவும் நல்லூர் பிரதேச சபை தவிசாளரினால் அறிவிக்கப்பட்டுள்ளது. (137)

# கொழும்பு கம்பன் கழகத்தின் பேச்சு, கவிதைப்போட்டிகள்

கொழும்பு கம்பன் கழகத்தினால் இவ்வாண்டு கம்பன் விழாவை முன்னிட்டு நடாத்தப்படும் அமரர் துரை விஸ்வநாதன் நினைவு பேச்சுப் போட்டிகள் எதிர்வரும் 17 ஆம் திகதியும் அமரர் பொன்.பாலசுந்தரம் நினைவு கவிதைப் போட்டிகள் 18 ஆம் திகதியும் பம்பலப்பிட்டி இந்துக்கல்லூரியில் நடைபெறவுள்ளன. தினமும் காலை 9.30 மணிக்கு போட்டிகள் ஆரம்பமாக உள்ளன.

கீழ்ப்பிரிவில் 14 வயதுக்குட்பட்டோரும், மத்திய பிரிவில் 15 - 19 வயதுக்குட்பட்டோரும், மேற்பிரிவில் 20 - 35 வயதுக்குட்பட்டோரும் கலந்து கொள்ளலாம். சென்றவிழாக்களில் தங்கப்பதக்கப் பரிசில்களைப் பெற்றோர் தவிர்ந்த, பேசும், கவிதை இயற்றும் திறமையுள்ளோர் மேற்படி போட்டிகளில் கலந்து கொள்ளலாம்.

இப்போட்டிக்கான விண்ணப்பங்கள் பத்திரிகைகள் மூலம் முன்னரே கோரப்பட்டிருந்தன. விண்ணப்பித்த போட்டியாளர்களுக்கான அனுமதி அட்டைகள் போட்டியாளர்களின் முகவரிகளுக்கு தனித்தனியாக அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. போட்டியாளர்கள், அவ்வனுமதி அட்டைகளுடன் போட்டி மண்டபத்திற்கு போட்டியாளர்கள், அவ்வனுமதி அட்டைகளுடன் போட்டி மண்டபத்திற்கு சமூகமளிக்கும்படி கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளனர். போட்டிகளுக்கு விண்ணப்பித்தோர் அனுமதி அட்டை கிடைக்கப்பெறாவிடினும் தக்க சான்றுகளுடன் நேரடியாகப் போட்டி மணடபத்திற்கு வருகை தரலாம் எனக கொழும்பு கம்பன் கழகம் அறிவித்துள்ளது.


இதுவரை விண்ணப்பிக்காத போட்டியாளர்கள் சுயமாகத் தயாரிக்கப் பெற்ற விண்ணப்பப் படிவத்தில் தமது முழுப் பெயர், வயது, பிறந்ததிகதி, முகவரி, தொலைபேசி இலக்கம், மாணவராயின் பாடசாலையின் பெயர், இல்ல முகவரி, கலந்து கொள்ளவுள்ள போட்டி முதலிய விபரங்களைக் குறிப்பிட்டு, கல்லூரி அதிபர் அல்லது சமாதான நீதவான் அல்லது கிராம அலுவலர் ஆகியோரிடம் கல்லூரி விபரங்களை உறுதிப்படுத்தி, செயலாளர் கொழும்பு, கம்பன் கழகம் இல.12, இராமகிருஸ்ண கார்டன், கொழும்பு - 6 எனும் முகவரிக்கு ஜனவரி மாதம் 5 ஆம் திகதிக்கு முன்னதாக அனுப்பி வைக்க முடியும் என அறிவிக்கப்படுள்ளது.

# அபிவிருத்தியை நோக்கிய பயணத்துக்கு மக்கள் ஆதரவு வழங்க வேண்டும்

## ஈ.பி.டி.பி. யாழ். மாவட்ட ஒருங்கிணைப்பாளர் ஜெகன் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

இழந்தவற்றை மீட்டுத்தந்து கொண்டிருக்கும் ஒருவருக்கு எமது ஆதரவை தொடர்ந்தும் கொடுப்பதனூடாகத்தான் மேலும அதிகமானவற்றை எமது மக்கள் பெற்றுக்கொள்ளமுடியும். அத்தகைய இலங்கை நாட்டின் தலைவராக அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தேர்ந்தெடுத்திருப்பவர் தான் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ என முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரும் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் யாழ். மாவட்ட ஒருங்கிணைப்பாளருமாகிய கே.வி.குகேந்திரன் (வி.கே.ஜெகன்) தெரிவித்துள்ளார்.



காங்கேசன்துறை தொகுதிக்கான ஜனாதிபதி தேர்தலுக்கான பிரசார கூட்டம் நேற்று முன்தினம் தெல்லிப்பளையில் நடைபெற்றது. இதில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் மேலும் தெரிவித்துள்ளார். அவர் மேலும் கூறியதாவது,

வரவுள்ள தேர்தலில் ஐக்கிய மக்கள் சுதந்திர கூட்டமைப்பின் ஜனாதிபதி வேட்பாளராக போட்டியிடும் தற்போதைய ஜனாதிபதிதான் வரும் அரசியற் பருவ காலத்திற்குமான இந்நாட்டின் ஜனாதிபதியாக வலம்வருவார் என்பதை யாரும் மாற்றிவிட முடியாது. இருந்தும் நாம் அனைவரும் ஒன்றிணைந்து அவரது வெற்றியை உறுதிபெறச்செய்வோமானால் கடந்த காலத்தில் நாம் இழந்துபோன வாழ்வாதாரங்கள் அபிவிருத்திகள் தொடக்கம் எதிர்காலத்துக்கு தேவையான அனைத்தையும் உரிமையுடன் கேட்டு பெற்றுக்கொள்ள முடியும்.

எமது மக்களைப்பொறுத்தளவில் இன்றுகாணும் அனைத்து வசதிகளையும் அமைச்சர் பெற்றுத்தருவதற்கு அடிப்படை காரணமாக இருந்தவர் ஜனாதிபதி மகிந்தராஜபக்ச என்ற உரிமையுடன் ஜனாதிபதியை நாம் அனைவரும் ஆதரித்து வெற்றி கொள்ள செய்யவேண்டும் என்றார்.

இந்தக் கூட்டத்தில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா ஐக்கிய மக்கள் சுதந்திர கூட்டமைப்பின் செயலாளர் சுசில் பிரேம ஜெயந்த ஆகியோருடன் ஈழ மக்கள் ஜனநாயக கட்சியின் முக்கியஸ்தர்கள், சிறிலங்கா சுதந்திரகட்சி அமைப்பாளர் அங்கஜன் ஆகியோரும் பல பொது மக்களும் கலந்து கொண்டனர்.

# வைத்திலிங்கம் கமலநாதன் நவாலியூர் சமூகத்தால் கௌரவிப்பு

பன்முக சேவை, மேடை நாடகம், ட்றம்ஸ் வாத்திய கலை, நகைச்சுவை நடிகர், குறுந் திரைப்பட நடிகர், திரைப்பட நடிகர் போன்ற பல தகைமைகள் பெற்று கலாபூஷணம் விருது பெற்ற நவாலியூர் லயன் வைத்தியலிங்கம் கமலநாதனுக்கு நவாலி கழகம் நேற்று முன்தினம் வாழ்த்துத் தெரிவித்துள்ளது.

நவாலி முதியோர் சங்கத் தலைவர் மா. செல்வராசா மற்றும் முன்னாள் அதிபர் சி. நாகையா (ச.நீ) ஆகிய இணைத் தலைமையில் நேற்று முன்தினம் மூத்த பிரஜைகள் தின விழா வெகுசிறப்பாக நவாலி முருகானந்தா மண்டபத்தில் இடம் பெற்றது.

இதில் சிறப்பு அதிதியாக கலந்து கொண்ட சமூக சேவை அதிகாரி வே. சிவராஜா வைத்திலிங்கம் கமலநாதனுக்கு பொன்னாடை போர்த்தி விருது வழங்கி கௌரவித்தார்.

சிறப்பு அதிதியாக கலந்து கொண்ட நவாலி கிழக்கு கிராம அலுவலர் த. நித்தியானந்தன் மாலையணிவித்து சிறப்பு பரிசில் வழங்கி கௌரவித்தார்.

மானிப்பாய் பிரதேச சபை உறுப்பினர் கு. சிவபாதம் மாலை அணிவித்து கௌரவித்தார். ஹேமலதா ஞாபகார்த்த நிதியத் தலைவர் நினைவு பரிசில் வழங்கி கௌரவித்தார்.

வலி. தென்மேற்கு உதவி பிரதேச செயலர் திருமதி றே. செல்வி குமாரி கலாபூஷண விருது வழங்கி சிறப்புரையாற்றினார்.

முன்னாள் அதிபரும் பிரபல சமூக சேவையாளருமான லயன் சி. நாகையா (ச.நீ.) கலாபூஷணம் விருது பெற்ற வை. கமலநாதனின் பன்முக சேவையைப் பாராட்டி வாழ்த்துப்பா வழங்கி கௌரவித்தார்.

நவாலியூர் மேரி நாயகி வை. கமலநாதனுக்கு வாழ்நாள் சாதனைகளை முன்னிறுத்தி வாழ்த்துப்பா வழங்கினார். இறுதியாக அங்கு திரண்டிருந்த முதியோர்களுக்கு நவாலி கிழக்கு முதியோர் சங்கச் செயலாளர் கழகச் சுடர் செல்லத்துரை மகேந்திரனால் பால்மா பொதி வழங்கப் பட்டது. (92)

# கஜமுக சூரன் போர்

(சாவகச்சேரி)

சாவகச்சேரி நுணாவில் மேற்கு விளைவேலி மருதடி அருள்மிகு வீரகத்தி விநாயகர் ஆலயத்தில் பிள்ளையார் பெருங்கதை ஆரம்பமாகி நடைபெற்று வருகின்றது.

கடந்த 7ஆம் திகதி ஆரம்பமான பெருங்கதைப் படிப்பு எதிர்வரும் 26ஆம் திகதி சூரன் போருடன் நிறைவடையவுள்ளது.

இவ் ஆலயத்தில் தினமும் பிற்பகல் 3 மணிக்கு பெருங்கதை படிப்பும் பூசையும் இடம் பெற்று வருகின்றது.

இதில் எதிர்வரும் 26ஆம் திகதி வெள்ளிக்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு அபிஷேகம் விசேட பூசையைத் தொடர்ந்து பிற்பகல் 3.30 மணிக்கு கஜமுக சூர சங்காரம் என்பன இடம் பெறும்.

தொடர்ந்து 27ஆம் திகதி சனிக்கிழமை காலை 7 மணிக்கு திருவெம்பாவை பூசை ஆரம்பமாகவுள்ளதுடன் அன்றைய தினம் பிற்பகல் 2.00 மணி முதல் விநாயர் கதைப் படிப்பும் விரத பூர்த்தியும் இடம்பெறும்.

இந்த பூசைகளை விளைவேலி பிரதம குரு கலாநிதி சிவஸ்ரீ து.கு. ஜெகதீஸ்வரக் குருக்கள், ஆலய குரு பிரம்மஸ்ரீ சி. சிவகஜகுருக்கள் ஆகியோர் ஆற்றவுள்ளனர். (இ)

# புதிய நிர்வாகத் தெரிவு

(வடமராட்சி)

வடமராட்சி கிழக்கு அம்பன் கமக்கார அமைப்பின் பொதுக் கூட்டம் அம்பன் பொது நோக்கு மண்டபத்தில் வீ. பரமானந்தம் தலைமையில் அண்மையில் நடைபெற்றது.

இங்கு தெரிவு செய்யப்பட்ட நடப்பு வருட நிர்வாகிகள் விபரம் வருமாறு: ஆலோசகராக ஏ. செல்வரத்தினம், தலைவராக கே. கணேசஸ்ரீ, உப தலைவராக எஸ். வரதகுலம், செயலாளராக என். இலங்கைநாதன், உப செயலாளராக ரீ. றஜனிகாந், பொருளாளராக ஜெ. கமலதாஸ், செயற்குழு உறுப்பினர்களாக கே. சண்முகலிங்கம், என். நந்தகுமார், எஸ். உதயகுமார், வி. சுபாகரன், பீ. கண்ணதாசன், கே. இராஜதீபன் ஆகியோர் தெரிவு செய்யப்பட்டனர். (01)

# சமூக சேவைத் திணைக்களத்தால் பின்தங்கிய குடும்பங்களுக்கு உதவி

வடமாகாண சமூக சேவைத் திணைக்களத்தினால் ஒவ்வொரு பிரதேச செயலர் பிரிவு ரீதியாக வறுமைக்கோட்டின் கீழ் வாழும் குடும்பங்கள், மாற்று வலுடையோர், நோயாளர்கள் ஆகியோருக்கு பல்வேறு உதவிகள் வழங்கப்பட்டு வருகிறது.

அந்த வகையில் கரவெட்டிப் பிரதேச செயலக சமூக சேவை பிரிவுக்கு இந்த வருடத்தில் பல்வேறுபட்ட உதவிகள் வழங்கப் பட்டுள்ளன. அத்துடன் அடுத்த வருடத்தில் இவ்வுதவிகள் பெறவுள்ள குறிப்பிட்டவர்கள் இதற்கு விண்ணப்பிக்க முடியும் என கரவெட்டி பிரதேச செயலர் அறிவித்துள்ளார்.

இதன்படி 60 வயதிற்கு மேற்பட்டவர்களுக்கு பல சேவைகளில் முன்னுரிமை வழங்குவதற்காக முதியோர் அடையாள அட்டை வழங்கப்படுகின்றது. இரண்டு முத்திரை வடிவிலான புகைப்படம், வயதை உறுதிப் படுத்தும் அத்தாட்சிப் பத்திரத்துடன் சமூக சேவை பகுதிக்கு சமூகமளிக்க வேண்டும். கரவெட்டி பிரதேச செயலக சமூக சேவை பகுதியால் 1146 பேருக்கும் இது வரையில் வழங்கப் பட்டுள்ளது.

முதியோர் நலனை உறுதிப் படுத்துவதற்காக கிராம அலுவலர் பிரிவு ரீதியாக முதியோர் சங்கங்கள் உருவாக்கப்பட்டு வருகின்றன. பிரதேச மட்ட முதியோர் சங்கம் 2014இல் உருவாக்கப்பட்டுள்ளது.

தியாகி அறக்கொடை நிதியத்தின் ஊடாக முதியோர் சங்க உறுப்பினர்கள் மற்றும் முதியவர்களுக்கு மருத்துவ சிகிச்சை வழங்கப்பட்டுள்ளது. இவ் வைத்திய சிகிச்சையை தியாகி அறக்கொடை நிறுவனம் நேரடியாக முதியவர்களுக்கு போக்குவரத்து வசதிகளை செய்து கொடுத்து வைதத்திய நிபுணர்களினால் மருத்துவ வசதி அளிக்கப்படுகின்றது.

புற்றுநோய், காசநோய், தொழுநோய், தலசீமியா, சிறுநீரகப் பாதிப்பு போன்ற நோய்கள் உள்ளவர்களுக்கு கொடுப்பனவுகள் வழங்கப்படுகின்றன. இந்நோய்களினால் பாதிக்கப்பட்டவர்கள் மருத்துவ அத்தாட்சிப் பத்திரத்துடன் விண்ணப்பிக்கலாம் என அறிவிக்கப்பட்டுள்ளது. (18)

# ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி முல்லை அலுவலகம் திறந்து வைப்பு



முல்லைத்தீவில் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் அலுவலகம் வைபவ ரீதியாக முன்னணியின் செயலாளரினால் திறந்து வைக்கப்பட்டுள்ளது.

முல்லை மாவட்ட ஜனாதிபதி இணைப்பாளர் ச. கனகரத்தினம் ஐக்கிய மக்கள் சுதந்திரக் முன்னணியின் முல்லை மாவட்ட தேர்தல் இணைப்பாளர் றங்கதுரை ஆகியோரின் ஒழுங்குபடுத்தலில் இவ் அலுவலகம் கடந்த சனிக்கிழமை ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் செயலாளரும் சுற்றாடல் தொழிற்றுறை அமைச்சருமான சுசில் பிறேம ஜெயந்தவினால் திறந்து வைக்கப்பட்டுள்ளது.

இந்நிகழ்வில் ஐக்கிய மக்கள் சுதந்திரக் முன்னணியின் ஆதரவாளர்களும், பொதுமக்களும் பங்கேற்றதோடு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் அங்கத்தவர்களும் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கட்சியில் இணைந்து அங்கத்துவத்தைப் பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது. (40)

# இலக்கிய அணியின் பாரதி விழா

தென்மராட்சி இலக்கிய அணியினர் முன்னெடுத்த பாரதி விழா நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை மாலை சாவகச்சேரி நகரசபை பொன்விழா மண்டபத்தில் இடம்பெற்றது. சாவகச்சேரி இந்துக் கல்லூரி அதிபர் அ.கயிலாயபிள்ளை தலைமையில் இடம் பெற்ற இந்நிகழ்வில் தொழிலதிபர் அ.ஜெயச்சந்திரன் தம்பதியர் மங்கல விளக்கேற்றினர். தென்னிந்தியத் திருச்சபையின் முன்னாள் பேராயர் எஸ்.ஜெபநேசன் தொடக்கவுரை ஆற்றினார். விழாவை சிறப்பிக்கும் வகையில் சான்றோர் கௌரவிப்பு இடம் பெற்றது. இதன்போது பேராதனைப் பல்கலைக்கழக தமிழ்த் துறையின் முன்னாள் தலைவரும் தென்மராட்சி மீசாலையைச் சேர்ந்தவருமாகிய பேராசிரியர் க.அருணாசலம் கௌரவிக்கப் பட்டார். பாரதியாரைப் பற்றிய கவிதைகள் அடங்கிய நெருப்புக் குஞ்சு என்ற நூல் வெளியிடப்பட்டது.



இந்நிகழ்வின்போது முப்பெரும் பாடல்களில் முகிழ்கும் பாரதி என்ற பொருளில் பேராசிரியர் மா.சின்னத்தம்பி தலைமையில் கருத்தரங்கு இடம்பெற்றது. குயில்பாட்டில் பாரதி என்ற பொருளில் இலக்கிய அணியின் அமைப்பாளர் ஆசிரியர் அ.வாசுதேவா, பாஞ்சாலி சபதத்தில் பாரதி என்ற பொருளில் விரிவுரையாளர் ச.லலீசன், கண்ணன் பாட்டில் பாரதி என்ற பொருளில் பேராசிரியர் தி.வேல்நம்பி கருத்துரைகளை வழங்கினர். தொடர்ந்து பாரதி பாடல்களில் பெரிதும் விஞ்சி நிற்பது எது என்ற பொருளில் பேராசிரியர் எஸ்.சிவலிங்கராஜா தலைமையில் பட்டிமண்டபம் இடம் பெற்றது. தேசபக்தியே என ஆசிரியர்களான த.நாகேஸ்வரன், எஸ்.சுதன், அபிவிருத்தி உதவியாளர் ந.ஐங்கரன் ஆகியோரும் தெய்வபக்தியே என வலயக்கல்வி அலுவலக தொழில் வழிகாட்டல் உத்தியோகத்தர் க.ஈஸ்வரன், ஆசிரியர்களான வே.உதயகுமார், சோ.கோகுலன் ஆகியோரும் வாதப் பிரதிவாதங்களை முன் வைத்தனர். ஆசிரியர் க.நடேஸ்வரன் நன்றியுரை வழங்கினார்.

# தேர்தலில் யாரை ஆதரிப்பது குழம்பிப்போயுள்ள முஸ்லிம் காங்கிரஸ்

(கொழும்பு)

**ஜனாதிபதித் தேர்தலில் யாரை ஆதரிப்பது என்பது தொடர்பாக தமது கட்சிக்குள் குழப்பம் ஏற்பட்டுள்ளது என்பதை, சிறிலங்கா முஸ்லிம் காங்கிரசின் தலைவர் அமைச்சர் ரவூப் ஹக்கீம் ஒப்புக்கொண்டுள்ளார்.**

கண்டியில் நேற்று முன்தினம் மாலை நடந்த கூட்டம் ஒன்றில் உரையாற்றிய அவர்,

ஜனாதிபதித் தேர்தலில் யாருக்கு ஆதரவளிப்பது என்பது தொடர்பாக, கட்சிக்குள் ஒருமித்த நிலைப்பாட்டை எடுப்பதற்கு முயற்சித்துக் கொண்டிருக்கிறேன்.



இது ஒரு இலகுவான விடயம் அல்ல. இதுபோன்ற நேர்ங்களில் எல்லா அரசியல் கட்சிகளும் எதிர்கொள்கின்ற சவால் தான்.

பிளவுகள் ஏற்படும். பலர் கட்சி தாவுவர். இதுபோன்றவற்றை நாம் தவிர்க்க வேண்டும். கடவுள் எம்மைக் காப்பாற்றுவார் என்று நம்புகிறேன்

ஜனாதிபதி மகிந்த ராஜபக்சவுக்கு ஆதரவளிக்குமாறு, பிரதமர் டி.எம்.ஜெயரட்ண என்னிடம் கேட்டுக் கொண்டார்.

ஆனால், மகிந்த ராஜபக்ச மற்றும் மைத்திரிபால சிறிசேன ஆகியோரின் தேர்தல் அறிக்கைகளை ஆய்வு செய்த பின்னரே அடுத்த கட்டம் குறித்து முடிவெடுக்க முடியும்.

நல்லாட்சி, போருக்குப் பிந்திய நல்லிணக்க செயன்முறைகள், நீதித்துறை விவகாரங்களை சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் புறக்கணிக்க முடியாது. என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

# தபால் மூல வாக்களிப்பு இன்றைய தினம் ஆரம்பம்

(கொழும்பு)

ஜனாதிபதித் தேர்தல் பணிகளில் ஈடுபடவுள்ள அரச பணியாளர்கள் மற்றும் படையினர் மற்றும் பொலிஸார் இன்று முதல் அஞ்சல் வாக்குகளைப் பதிவு செய்யவுள்ளனர்.

இன்றும் நாளையும் அரச பணியகங்கள் மற்றும், படை முகாம்களிலும், அம்பாந்தோட்டை மாவட்டத்தில் உள்ள பொலிஸ் நிலையங்களிலும் அஞ்சல் வாக்களிப்பு இடம்பெறவுள்ளது.

அம்பாந்தோட்டை மாவட்டம் தவிர்ந்த ஏனைய மாவட்டங்களில் பொலிஸ் நிலையங்களில் எதிர்வரும் 26 ஆம் திகதி பொலிஸார் தமது அஞ்சல் வாக்குகளை அளிக்க முடியும்.

இந்த மூன்று நாட்களிலும் வாக்களிக்கத் தவறுபவர்களுக்கு மாவட்டச் செயலகங்களில், வரும் 30ஆம் திகதி வாக்களிக்க சிறப்பு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

ஜனாதிபதித் தேர்தலில் அஞ்சல் மூலம் வாக்களிப்பதற்கு 5,41,432 வாக்காளர்கள் தகுதி பெற்றுள்ளனர்.

# தேர்தல் பிரச்சாரத்தில் ஈடுபட்டுள்ள இளைஞர் விவகார அமைச்சு அதிகாரிகள்

## மங்கள எம்.பி குற்றச்சாட்டு



இளைஞர் விவகார அமைச்சின் அதிகாரிகள் தேர்தல் பிரச்சாரப் பணிகளில் ஈடுபடுத்தப்பட்டுள்ளதாக ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் மங்கள சமரவீர தெரிவித்துள்ளார்.

இளைஞர் விவகார அமைச்சின் தென் மாகாண அதிகாரிகள் மாத்தறையில் வீடு வீடாகச் சென்று ஜனாதிபதியின் சார்பில் பிரசாரம் செய்ய உள்ளனர்.

தேர்தல் சட்டங்களை முழுக்க முழுக்க மீறி 50 பஸ்களில் இளைஞர் விவகார அமைச்சின் அதிகாரிகள் வீடு வீடாக சென்று வாக்கு சேகரிக்க உள்ளனர்.

இந்த அரசாங்க அதிகாரிகளுக்கு அரசாங்கம் மேலதிக நேரக் கொடுப்பனவை வழங்க உள்ளது.

மாத்தறையில் ஆளும் கட்சியின் சகல தேர்தல் பிரசார நடவடிக்கைகளும் வீழ்ச்சியடைந்துள்ள காரணத்தினால் இவ்வாறான ஓர் நிலைமை ஏற்பட்டுள்ளது.

இந்த அதிகாரிகள் வீட்டுக்கு வந்தால், மஹிந்த சிந்தனையின் ஊடாக அளிக்கப்பட்ட எந்த வாக்குறுதி நிறைவேற்றப்பட்டது என மக்கள், அதிகாரிகளிடம் கேள்வி எழுப்ப வேண்டும் என அவர் கோரியுள்ளார்.

மாத்தறையில் அமைந்துள்ள மங்கள சமரவீரவின் வீட்டில் நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

# கண்டியில் வெளியீடு



மஹிந்த ராஜபாக்ஷவின் தேர்தல் விஞ்ஞாபனமான, மஹிந்த சிந்தனை 03 இம் முறை கண்டி மாநகரிலேயே வெளியிடப்படும் எனத் தெரிவிக்கப்படுகிறது.

கொழும்பு, பண்டாரநாயக்கா சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நேற்று வெளியிடப்படவிருந்த மேற்படி தேர்தல் விஞ்ஞாபனம் பிற்போடப்பட்ட நிலையிலேயே, எதிர்வரும் 26ஆம் திகதி கண்டியில் வெளியிடப்படும் என தெரிவிக்கப்பட்டுள்ளது

# மூன்றரை இலட்சம் கடிகாரம் வீதிநாடகத்தால் பறிபோனது

அம்பாந்தோட்டை பஸ் நிலையத்துக்கு முன்பாக நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை நடித்துக்காட்டப்பட்ட வீதி நாடகத்தை பார்க்கச்சென்ற அம்பாந்தோட்டை நகர சபைத் தலைவர் ஏராஜ் ரவிந்திர, தனது மூன்றரை இலட்சம் ரூபாய் பெறுமதியான கைக்கடிகாரத்தை காணவில்லை என்று தெரிவித்துள்ளார்.

வீதி நாடக குழுவினருக்கும் அங்கிருந்த மற்றுமொரு குழுவினருக்கும் இடையில் கைகலப்பு ஏற்பட்டுள்ளதாக தகவல்கள் கிடைத்தன. அதனையடுத்து, அந்த மோதலை தடுப்பதற்காக அங்கு சென்றேன். அதன்போதே, மூன்றரை இலட்சம் பெறுமதியான என்னுடைய கைக்கடிகாரம் காணாமற் போய்விட்டது என்றார்.

இந்த வீதி நாடகத்தை அம்பாந்தோட்டை பஸ் நிலையத்துக்கு முன்பாக நடத்துவதற்கு எவ்விதமான அனுமதியும் பெறப்பட்டிருக்கவில்லை என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

மோதல்களை தடுத்து நிறுத்துவதற்கு நான் அங்கு சென்றேன். "என்னுடைய கையிலும் காயம் ஏற்பட்டது, கடிகாரமும் காணாமற் போய்விட்டது" என்றும் அவர் கூறினார்.

# மங்களவின் ஆய்வின்படி முன்னணியில் மகிந்த

முன்னாள் இராஜதந்திரியான மங்கள முனசிங்கவின் வன்டெக்ஸ்ட் என்ற அமைப்பு ஜனாதிபதி தேர்தல் தொடர்பில் மேற்கொண்ட ஆய்வின்படி ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ முன்னிலை வகிக்கிறார். ஆய்வின்படி அவருக்கு 57.62 வீத வாக்குகள் கிடைக்கும் என்று கூறப்பட்டுள்ளது. மைத்திரிபால சிறிசேனவுக்கு 40வீத வாக்குகள் கிடைக்கும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஆய்வின்படி 8,658,977 சிங்கள பௌத்த வாக்குகளில் 63 வீதம் மஹிந்தவுக்கும் 36 வீதம் மைத்திரிக்கும் கிடைக்கும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

1,096,217 இலங்கை தமிழர் வாக்குகளில் 44 வீதம் மைத்திரிக்கும் 40 வீதம் மஹிந்தவுக்கும் கிடைக்கும்.

1,124,831 என்ற முஸ்லிம்களின் வாக்குகளில் 64 வீதம் மைத்திரிக்கும் 35வீதம் மஹிந்தவுக்கும் கிடைக்கும்.

493,911 எண்ணிக்கையான சிங்கள கத்தோலிக்கர்களில் 55 வீதத்தினர் மஹிந்தவுக்கும் 44 வீதத்தினர் மைத்திரிக்கும் வாக்களிப்பர்.

463,130 என்ற எண்ணிக்கையான இந்திய வம்சாவளி தமிழர்களில் 56.5 வீதத்தினர் மஹிந்தவுக்கும் 42.5 வீதத்தினர் மைத்திரிக்கும் வாக்களிப்பர் என்று ஆய்வில் கூறப்பட்டுள்ளது.

ஏனையர்கள் வகுதியில் 54 வீதத்தினர் மைத்திரிக்கும் 45 வீதத்தினர் மஹிந்தவுக்கும் வாக்களிப்பர் என்றும் ஆய்வில் தெரிவிக்கப்பட்டுள்ளது.எனினும் இந்த ஆய்வு மேற்கொள்ளப்பட்ட அடிப்படை குறித்து தகவல்கள் வெளியிடப்படவில்லை

# போர் முடிவிற்கு வந்த போதிலும் அபிவிருத்தியில் முன்னேறவில்லை

## என்கிறார் அர்ஜுன எம்.பி



(கொழும்பு)

நாட்டில் போர் முடிவுக்குக் கொண்டு வரப்பட்ட போதிலும் நாடு அபிவிருத்தி அடையவில்லை என ஜனநாயகக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் அர்ஜுன ரணதுங்க தெரிவித்துள்ளார்.

நிட்டம்புவ கல்கெடிஹென குருந்துவத்த பிரதேசத்தில் நடைபெற்ற தேர்தல் பிரசாரக் கூட்டமொன்றில் அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

30 ஆண்டு கால போர் முடிவுக்குக் கொண்டு வரப்பட்டமை வரவேற்கப்பட வேண்டியதாகும். போர் நிறைவின் பின்னர் நாட்டில் பாரிய அபிவிருத்தி எதிர்பார்க்கப்பட்ட போதிலும் அவ்வாறான அபி விருத்தி எதுவும் இடம்பெறவில்லை.

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ச மக்களை ஏமாற்றி தனது பதவிக் காலத்தை நீடித்துக் கொள்ளவே முயற்சிக்கின்றார். அரசாங்கத்தினால் அண்மையில் சமர்ப்பிக்கப்பட்ட வரவு செலவுத் திட்டம் முற்று முழுதாக இலஞ்ச வரவு செலவுத் திட்டமாகும்.

தேர்தல் காலத்திலேயே எரிபொருட்கள் உள்ளிட்ட பொருட்களின் விலைகள் குறைவடையும். பாதைகள் சீரமைக்கப்படுவது நல்ல விடயம் எனினும் பாதைகள் அமைக்கும் பணிகளில் பாரியளவில் ஊழல் மோசடிகள் இடம்பெற்று வருகின்றன.

போர் நிறைவடைந்துள்ள நிலையில் பாதுகாப்பு அமைச்சிற்கான செலவுகள் அதிகரித்துச் செல்கின்றது இந்த நிலையில் மாற்றத்தைக் கொண்டு வர ஆட்சி மாற்ற மொன்று அவசியம் என அர் ஜுன ரணதுங்க தெரிவித்துள்ளார்.

# வழமைக்குத் திரும்பியது யாழ்–கொழும்பு ரயில் சேவை

(கொழும்பு)

வெள்ளம் காரணமாக தடைப்பட்டிருந்த யாழ்-கொழும்பு ரயில் சேவைகள் நேற்று முன்தினம் முதல் வழமைக்குத் திரும்பியுள்ளதாக யாழ். ரயில் நிலைய பிரதம அதிபர் தி. பிரதீபன் தெரிவித்துள்ளார்.

நேற்று முன்தினம் காலை 7.10 மணிக்கு யாழ்தேவி ரயிலும், பகல் 11.00 மணிக்கு நகர்சேர் கடுகதி ரயிலும் யாழ்ப்பாணத்திலிருந்து கொழும்பை நோக்கி புறப்பட்டுச் சென்றன. இதனைத் தொடர்ந்து கொழும்பிலிருந்து அதிகாலை புறப்பட்ட குளிரூட்டப்பட்ட நகர்சேர் கடுகதி ரயில் ஒரு மணி நேரம் தாமதமாக வந்தபோதிலும் பிற்பகல் மணி 1.50இற்கு யாழ்ப்பாணத்திலிருந்து புறப்பட்டுச் சென்றது.

சனிக்கிழமை அதிகாலையில் கண்டியிலிருந்து யாழ்ப்பாணம் புறப்பட்டு வந்த வார இறுதி கடுகதி ரயில் வெள்ளம் காரணமாக இடையில் தரித்து நிற்க வேண்டிய நிலை ஏற்பட்டதால் அதில் வந்த பயணிகளுக்கு பஸ் மூலம் பயணம் செய்வதற்கான மாற்று ஏற்பாடுகள் செய்துகொடுக்கப்பட்டன. அந்த ரயில் பகல் மணி 1.45 இற்கு யாழ் ரயில் நிலையத்தை வந்தடைந்தது. ஏராளமான பயணிகளுடன் அந்த ரயில் பிற்பகல் மணி 3.10க்கு மீண்டும் கண்டிக்குப் புறப் பட்டுச் சென்றது.

வார இறுதியில் இடம்பெற்று வந்த யாழ் - மாத்தறை ரயில் சேவை நேற்று முன்தினம் இடம பெறவில்லை. வழமைபோல இரவு தபால் ரயிலும் அதனைத் தொடர்ந்து இரவு 8.40 மணிக்கு விசேட ரயிலும் கொழும்புக்கு புறப்பட்டுச் செல்வதற்கு தயாராக இருந்ததாக யாழ் ரயில் நிலைய பிரதம அதிபர் தெரிவித்தார்.

# தேசிய நிறுவன கல்வியாண்டு 4 வருடங்களாக அதிகரிப்பு

(கொழும்பு)

நாடுமுழுவதிலும் 19 தேசிய கல்வி நிறுவனங்கள் இயங்குகின்றன. இந்த நிறுவனங்களின் கல்வியாண்டு இதுவரை காலமும் மூன்று வருடங்களாக இருந்தது. இதனை நான்கு வருடங்களாக மேலும் ஒரு வருடம் அதிகரிக்கப்பட்டுள்ளது.



இந்த கல்வி நெறியை வெற்றிகரமாக முடிப்பவர்களுக்கு 2014ஆம் ஆண்டு புலமைப்பரிசில் வழங்கப்படுவதுடன் அவர்களுக்கு பட்டம் வழங்குவதற்கும் கல்வி அமைச்சர் பந்துல குணவர்த்தனவினால் அமைச்சரவைக்கு சமர்பபித்த பிரேரணைக்கு அமைச்சரவையின் அங்கீகாரம் கிடைத்துள்ளது.





கட்டுவன் கரண்டக்குளம் சிறீ ஐயப்பன் கோவில் வேட்டை திருவிழா நிகழ்வின் போது....

## மணிக்கணக்கில் வங்கியில் காத்திருப்பு விசனமடையும் வாடிக்கையாளர்கள்

சுன்னாகம் பகுதிகளில் இயங்கும் அரச வங்கிகளில் கடந்த சில நாட்களாக வாடிக்கையாளர்களின் தொகை அதிகரித்துக் காணப்படுவதுடன், அங்கு தமது தேவைகளை நிறைவேற்றச் செல்வோர் மணிக்கணக்கில் காத்து நிற்க வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

மேலும் அரச வங்கிகளில் சம்பளப்பணம் பெறுவோர், ஓய்வூதியப்பணம் பெறுவோர், கடன் பெறுவோர் மற்றும் வைப்பிலிடுவோர் என பல்வேறு தேவைகளுக்காகச் செல்லும் வாடிக்கையாளர்களின் எண்ணிக்கை கடந்த சில நாட்களாக காலைமுதல் மாலைவரை அதிகரித்துக் காணப்படுவதாகவும், இதனால் பல்வேறு சிரமங்களுக்கு மத்தியில் தமது தேவைகளை நிறைவேற்ற வேண்டியுள்ளதாகவும் வாடிக்கையாளர்கள் தெரிவித்துள்ளனர்.

நத்தார், புதுவருட பண்டிகைகாலமே வாடிக்கையாளர்கள் நீண்ட நேரம் வங்கியில் காத்திருக்க வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டுள்ளது எனவும் தெரிவிக்கப்படுகின்றது. (66)

## ஈசிற்றி ஆங்கில கல்லூரியில் ஒளிவிழா சிறப்புக்கள்



(யாழ்ப்பாணம்)

யாழ்பாணம் ஈசிற்றி ஆங்கிலக் கல்லூரியின் ஒளி விழா மிக விமர்சையாக அண்மையில் கல்லூரி மண்டபத்தில் இடம்பெற்றது. கல்லூரியின் 22 ஆம் அணி மாணவர்களால் ஏற்பாடு செய்யப்பட்ட இந்த நிகழ்வில் செல்வி.பத்மலோஜினி தலைமையில் நிகழ்வுகள் சிறப்பாக இடம்பெற்றன.

இந்நிகழ்வில் வணக்கத்திற்குரிய குரு முதல்வர் பாலா சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டு சிறப்பு பூஜை நடாத்தி ஆசீர்வாதம் வழங்கினார். கல்லூரியின் தலைவர் லயன்.ஜெ.றஜீவன், பணிப்பாளர் லயன்.டாக்டர். க.ஜெயச்சந்திரமூர்த்தி, சர்வதேச ஆங்கிலப் பரீட்சைகள் இணைப்பாளர் லயன்.சீமாட்டி.மயூரிக்கா மற்றும் மாணவர்கள், பெற்றோர்கள், நலன் விரும்பிகளும் கலந்து கொண்டனர்.

அழகான முறையில் பாலன்பிறப்பு குடில், கிறிஸ்மஸ் மரம், தோரணங்கள், நிகழ்வுகள் என சிறப்பாக அமைக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# ஜனாதிபதி மகிந்தவின் வெற்றியில் கிளி.மக்களும் பங்களிக்க வேண்டும்

### சந்திரகுமார் எம்.பி.தெரிவிப்பு



(கிளிநொச்சி)

நடைபெறவுள்ள ஜனாதிபதித தேர்தலில் மகிந்த ராஜபக்சவின் வெற்றி உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. எனவே எமது மக்கள் தமது மேம்பாட்டுக்காக ஜனாதிபதி மகிந்த ராஜபக்சவின் வெற்றியில் பங்காளிகளாக வேண்டும் என நாடாளுமன்ற உறுப்பினரும் நாடாளுமன்றக் குழுக்களின் பிரதித்தலைவருமான மு.சந்திரகுமார் தெரிவித்துள்ளார். நேற்றுமுன்தினம் பளையில் நடைபெற்ற கட்சியின் செயற்பாட்டாளர்களுடனான விசேட கலந்துரையாடலில் உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் உரையாற்றுகையில்.

எமது மக்கள் பல தேர்தல்களை சந்தித்திருக்கின்றனர். ஒவ்வொரு தேர்தலின் பின்னரும் ஏற்படுகின்ற விளைவுகள் மக்களுக்கு படிப்பினைகளாகவும் அனுபவங்களாகவும் அமைந்திருக்கின்றன. எங்கெங்கோ வாழபவர்கள் எல்லாம் தேர்தல்காலத்தில் மட்டும் இங்கு வந்து எமது மக்களின் உணர்வுகளைத தூண்டிவிட்டு அவர்களின் வாக்குகளை சூறையாடிச்சென்ற சம்பவங்களைக்கூட எமது மக்கள் கண்டிருக்கின்றனர். ஆனால் நாங்கள் மக்களோடு இருப்பவர்கள் மக்களுக்காக அர்ப்பணித்து உழைப்பவர்கள் மக்களின் மேம்பாட்டுக்கான பல விடையங்களை நாம் செய்திருக்கின்றோம்.

கடந்த ஐந்து வருடங்களில் கோடிக்கணக்கான நிதியை கிளிநொச்சி மாவட்டத்தின் அபிவிருத்திக்கும் மக்களின் வாழ்நிலை மேம்பாட்டுக்கும் செலவு செய்திருக்கின்றோம்.

இதற்கெல்லாம் மூல காரணமாக செயற்பட்டவர் ஜனாதிபதி மகிந்தராஜபக்ச. ஆகவே எமது மக்களிடம் வாக்கு கேட்கக் கூடிய தகைமை மகிந்த ராஜபக்கசவுக்கு மட்டுமே இருக்கின்றது.

மக்களின் கைகளில் இருக்கின்ற வாக்குகள் விலைமதிப்பற்றவை. ஆனாலும் அவை சரியாகப்பயன்படுத்தப்பட்டால் மட்டுமே அவற்றின பெறுமானம் நன்மை பயக்கும். மாறாக கடந்த தேர்தல்காலங்களைப் போல் வாக்குகள் தவறாக பயன்படுத்துப்பட்டால் அவை வீண்போன வாக்குகளாகவே அமையும் என்பதை மக்கள் நன்கு விளங்கிக் கொள்ள வேண்டும் எனத் தெரிவித்தார்.

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் கிளிநொச்சி மாவட்ட செயற்பாட்டாளர்களுக்கான அமர்வு நேற்றுமுன்தினம் பச்சிலைப்பள்ளிப்பிரதேசத்தில் நடைபெற்றது. இந்நிகழ்வில் முதன்மைவிருந்தினராக கட்சியின் பொதுச்செயலாளரும் அமைச்சருமான சுசில்பிரேமஜெயந்த கலந்துகொண்டிருந்தார். இந்நிகழ்வில் மாகாணசபையின் உறுப்பினர்கள் பிரதேசசபைகளின் உறுப்பினர்கள் மற்றும் கட்சியின் அமைப்பாளர்களும் கலந்துகொண்டிருந்தனர். இவ் அமர்வில் பல நூற்றுக்கணக்கான செயற்பாட்டாளர்கள் பங்கேற்றிருந்தனர்.

## வடிகால் திருத்தப் பணிகள் முடிவடையாததால் சிரமம்

(சுன்னாகம்)

சுன்னாகம் மத்திய சந்தை, பஸ் நிலையம் பகுதி வடிகால்கள் உடைக்கப்பட்டு திருத்தப்பணிகள் நடைபெற்று வருகின்றன. ஆனால் இந்தத் திருத்தப் பணிகள் நீண்ட நாட்களாக நடைபெற்றுவருதாகவும் இதனால் வடிகாலில் நீர் ஓடமுடியாது சில இடங்களில் கழிவுகள் தேங்கிநிற்பதனால் சுன்னாகம் நகரப் பகுதியில் சில இடங்களில் துர்நாற்றம் வீசுவதாகவும் இதனால் பல்வேறு அசௌகரியங்களை எதிர் நோக்குவதாக மக்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.

எனவே சம்பந்தப்பட்ட அதிகாரிகள் நடவடிக்கை எடுத்து வடிகால் புனரமைப்பு பணிகளை விரைவு படுத்தி பொதுமக்களின் நலனில் அக்கறை காட்டவேண்டும் என கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. (66)

## முரசின் இன்றைய பலன்

(23.12.2014 செவ்வாய்க்கிழமை)

ஜய வருஷம் மார்கழி மாதம் 08 ஆம் திகதி.
துதியை/சித்தம்.
பூராட நட்சத்திரம் மு.இ. 07.46 வரை. பின் உத்தராடம்.
இராகு காலம 03.25 - 04.55 வரை. சுபநேரம 10.55 - 12.25 வரை.



ஜோதிர் வித்யா ரத்னா வி.ஏ.சிவராசா அவர்களால் கணிக்கப்பட்டது.

**மேடம்** — மக்களின் முன்னேற்றத்திற்காக அநாவசியக்கருமங்களில் ஈடுபடாமை.

**ரிஷபம்** — நண்பர் மற்றும் பெயர்கள் விடயத்தில் எச்சரிக்கையாக இருத்தல்.

**மிதுனம்** — பணவரவுகளில் ஏற்ற இறக்கமான நிலையிலிருந்தாலும் பாதிப்பின்மை.

**கடகம்** — தம்பதியர் மத்தியில் கருத்து வேற்றுமை நிலவினாலும் ஒற்றுமை குலையாது.

**சிம்மம்** — கௌரவப் பிரச்சினையை முன்னிட்டு அழைத்த நிகழ்வினைக் கைவிடல்.

**கன்னி** — பொருள் கொள்வனவிற்காக திடீர் பயணம் மேற்கொள்ளல்.

**துலாம்** — நம்பியிருந்தவர் கைவிட்டதால் புதிய முயற்சியில் இறங்காது விட்டுவிடுதல்.

**விருச்சிகம்** — குடும்பத்தவர்களுடன் முரண்படாது அனுசரித்துச் செல்வது நலம் பயக்கும்.

**தனுசு** — திருண விடயத்தில் இழுபறி ஏற்பட்டு சுபமுடிவினை எட்டும்.

**மகரம்** — கொடுக்கல் வாங்கலில் வீண் விரயங்கள் ஏற்படும்.

**கும்பம்** — சொத்துப்பிரச்சினை நீதிமன்றுக்குப் பாரப்படுத்த முயற்சி எடுத்தல்.

**மீனம்** — பிறர் கடன்பெற ஆவணங்களில் கையொப்பம் இடுவதை அறவே தவிர்க்கவும்.

# தைப்பொங்கலை முன்னிட்டு வினோத பட்டப் போட்டி

(வல்வை)

தைப் பொங்கல் தினத்தை முன்னிட்டு வல்வை விக்னேஸ்வரா சனசமூக நிலையத்தினால் நடாத்தப்படும் மாபெரும் வினோத (விசித்திர) பட்டம் விடும்போட்டி எதிர்வரும் 15ஆம் திகதி பிற்பகல் 2.30 மணிக்கு வல்வெட்டித்துறை மடத்தடி உதயசூரியன் உல்லாச கடற்கரையில் இடம்பெறவுள்ளது.

போட்டியாளர்களின் கற்பனைத் திறனையும் கைவண்ணத்தையும் வெளிக் கொண்டு வரும் வகையில் இடம்பெறவுள்ள இப்போட்டியில் பெறுமதி மிக்க பரிசில்கள் வழங்கப்படவுள்ளன.

போட்டியில் வயதுக் கட்டுப்பாடு எதுவுமில்லை. பங்குபற்றும் பட்டங்கள் விற்பனையில் வைத்திருக்கப்படாதவையாக இருக்கவேண்டும். பதிவு செய்வதற்கான இறுதி திகதி 12-01-2015 என அறிவிக்கப்பட்டுள்ளது. மேலதிக விபரங்களுக்கு 0754985394, 0777627885 என்ற தொலைபேசி இலக்கங்கள் மூலம் தொடர்பு கொள்ளலாமென அறிவிக்கப்பட்டுள்ளது.



# வல்வெட்டித்துறை பொலிஸ் உதைபந்து இறுதிப் போட்டியில் வல்வை

வல்வெட்டித்துறை பொலிஸ் நிலையத்தின் ஏற்பாட்டில் வடமராட்சி உதைபந்தாட்ட அணிகளுக்கிடையிலான உதைபந்தாட்ட சுற்றுப் போட்டியின் அரையிறுதிப் போட்டிகள் வரையான போட்டிகள் நேற்று முன்தினம் கொற்றாவத்தை மைதானத்தில் நடைபெற்றது.

இதன்படி நேற்று முன்தினம் மாலை கம்பர்மலை யங்கம்பன்ஸ் விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து வல்வை விளையாட்டுக் கழகம் மோதியது. போட்டியின் முடிவில் இரு அணிகளும் தலா 1 கோல்களைப் பெற்ற நிலையில் நடுவர்களால் தண்ட உதை வழங்கப்பெற்றிருந்தது. இதில் வல்வை விளையாட்டுக்கழகம் வெற்றி பெற்று இறுதிக்கு தெரிவாகியுள்ளது.

# மென்பந்து கிரிக்கெட் விண்ணப்பம் கோரல்

(மன்னார்)

இலங்கை கிரிக்கெட் சபையின் ஏற்பாட்டில் மாவட்ட கிரிக்கெட் பயிற்றுவிப்பாளர் மற்றும் மன்னார் மாவட்ட கிரிக்கெட் சங்கத்தினால் நடாத்தப்படும் அணிக்கு ஆறு பேர் கொண்ட மாபெரும் மென்பந்து கிரிக்கெட் சுற்றுப்போட்டியானது எதிர்வரும் 26,27ஆம் திகதிகளில் மன்னாரில் நடைபெறவுள்ளது. இதற்கு 40 அணிகள் மாத்திரமே பங்குபற்ற முடியும். எனவே பங்குபற்ற விரும்பும் கழகங்கள் கீழ்வரும் நிபந்தனைகளுடன் மன்னார் மாவட்ட கிரிக்கெட் சங்க செயலாளர் அமல்ராஜன் தொலைபேசி இலக்கம் 0770686898 என்பவரிடம் தொடர்பு கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

மன்னார் மாவட்டத்திலுள்ள பதிவு செய்யப்பட்ட கழகங்கள் மாத்திரமே பங்குபற்றமுடியும்.

. ஒரு கழகத்திலிருந்து ஒரு அணி மாத்திரமே பங்குபற்ற முடியும்.

. சுற்றுப்போட்டியில் பங்குபற்றும் 40 அணிகளுக்கும் விளையாட்டு உபகரணங்கள் வழங்கப்படும்.

. நுழைவுக்கட்டணம் இல்லை எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# கிளப் அணிகளுக்கான உலக கிண்ணம் சம்பியனானது ரியல் மட்ரிட்



இறுதிப் போட்டியில், சான் லாரன்சோ அணியை தோற்கடித்து கிளப் அணிகளுக்கு இடையிலான பிபா உலக கோப்பை கால்பந்து தொடரில், கிறிஸ்டியானோ ரொனால்டோவின் ரியல் மட்ரிட் அணி சம்பியன் பட்டம் வென்றது.

மொராக்கோவில், கிளப் அணிகளுக்கு இடையிலான 11ஆவது பிபா உலக கோப்பை கால்பந்து தொடர் நடந்தது. இதன் இறுதிப் போட்டியில் ஸ்பெயினின் ரியல் மட்ரிட் அணி, ஆர்ஜென்ரீனாவின் சான் லாரன்சோ அணிகள் மோதின. அபாரமாக ஆடிய ரியல் மட்ரிட் அணி 2-0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது. ரியல் மட்ரிட் அணி சார்பில் ரமோஸ் (37ஆவது நிமிடம்), பாலே (51ஆவது நிமிடம்) தலா ஒரு கோல் அடித்தனர்.

இதன்மூலம் ரியல் மட்ரிட் அணி, கிளப் அணிகளுக்கு இடையிலான உலக கோப்பையில் முதன்முறையாக சம்பியன் பட்டத்தை கைப்பற்றியது. தவிர, இத்தொடரில் கோப்பை வென்ற 9ஆவது அணி என்ற பெருமையையும் பெற்றது. இத்தொடரில் ஸ்பெயினின் பார்சிலோனா (2009, 11), பிரேசிலின் கோரின்தியன்ஸ் (2000, 12) அணிகள் தலா 2 முறை கோப்பை வென்றன. சாவ் பாலோ (2005), இன்டர்னாசியோனல் (2006), மிலன் (2007), மான்செஸ்டர் யுனைடெட் (2008), இன்டர்னாஜியோனல் (2010), பேயர்ன் முனிக் (2013) தலா ஒரு முறை கோப்பை வென்றன.

# ஆஸி. அணியில் புதிய வீரர்




(பிரிஸ்பேன்)

இந்தியாவுக்கு எதிரான மூன்றாவது டெஸ்டில் பங்கேற்கும் அவுஸ்ரேலிய அணியில் அறிமுக வீரராக ஜோ பர்ன்ஸ் தேர்வு செய்யப்பட்டார்.'

அவுஸ்ரேலியாவுக்கு எதிராக அடிலெய்ட், பிரிஸ்பேனில் நடந்த முதலிரண்டு டெஸ்டில் இந்திய அணி தோல்வி அடைந்தது. மூன்றாவது டெஸ்ட், மெல்பேர்னில் வரும் 26இல் தொடங்குகிறது. இப்போட்டிக்கான 13 பேர் கொண்ட வீரர்களை கிரிக்கெட் அவுஸ்ரேலியா (சி.ஏ.,) தேர்வுக் குழு நேற்று முன்தினம் அறிவித்தது.

இதன்படி ஆஸி., அணி விபரம்: ஸ்டீவன் சிமித் (கப்டன்), டேவிட்வோர்னர், கிறிஸ் ரோஜர்ஸ், ஷேன் வட்சன், ஷேன் மார்ஷ், ஜோ பர்ன்ஸ், பிரட் ஹடின், மிட்சல் ஜோன்சன், மிட்சல் ஸ்டார்க், நதன் லியான், ஜோஷ் ஹேசல்வுட், ரியான் ஹரிஸ், பீட்டர் சிடில்.

# கப்டனாக சிமித்தை நியமிக்க வலியுறுத்து



(சிட்னி)

அவுஸ்ரேலிய கிரிக்கெட்டின் அனைத்து நிலைகளிலும் (டெஸ்ட், ஒருநாள் போட்டி, 20 ஓவர்) ஸ்டீவ் சிமித்தை கப்டனாக நியமிக்க வேண்டும் என்று முன்னாள் வீரர் இயன் சப்பல், வேகப்பந்து வீரர் ரியான் ஹரிஸ் வலியுறுத்தியுள்ளனர்.

இயன் சப்பல் இது குறித்து கூறியதாவது: 27 வயதான சிமித் அனுபவம் வாய்ந்தவராக திகழ்கிறார். முதிர்ச்சி பெற்றவராக இருக்கும் அவரை அவுஸ்ரேலிய கிரிக்கெட்டின் அனைத்து நிலைகளுக்கும் கப்டனாக நியமிக்க வேணடும். கிளார்க் அணிக்குத் திரும்பினால் 2011 ஆம் ஆண்டு உலககோப்பை முடிவை பின்பற்ற வேண்டும். இவ்வாறு அவர் கூறியுள்ளார்.

ஹரிஸ் கூறும்போது, அவுஸ்ரேலிய அணியின் அனைத்து நிலைகளுக்கும் சிமித்தை கப்டனாக நியமிக்கலாம். விரைவில் அவர் அந்த நிலையைப் பெறுவார் என்பதில் எந்தவித சந்தேகமும் இல்லை. பெய்லி பணி முடிந்து வருகிறது. இதனால் சிமித் தான் அடுத்த நிலை கப்டன் என்றார்.

# மனைவியுடன் தங்கவே வீரர்களுக்கு அனுமதி

அவுஸ்ரேலியா சென்றுள்ள இந்திய வீரர்கள் தங்கள் மனைவியருடன் தங்கிக் கொள்ள இந்திய கிரிக்கெட் சபை அனுமதி வழங்கியுள்ளது. அதேவேளை வீரர்கள் தங்கள் காதலியுடன் தங்கிக் கொள்வதற்கு தடை விதிக்கப்பட்டுள்ளது.

4 டெஸ்ட் மற்றும் 3 நாடுகள் பங்கேற்கும் ஒருநாள் போட்டியில் விளையாடுவதற்காக கடந்த மாதம் இந்திய அணி அவுஸ்ரேலியா சென்றது. இந்த டெஸ்ட் தொடர் ஜனவரி 10ஆம் திகதியுடன் முடிகிறது.

இதைத் தொடர்ந்து 3 நாடுகள் பங்கேற்கும் ஒருநாள் போட்டி ஜனவரி 16ஆம் திகதி முதல் பெப்ரவரி 1ஆம் திகதி வரை நடக்கிறது.

மேலும் உலகக்கிண்ணப் போட்டி பெப்ரவரி 14ஆம் திகதி முதல் மார்ச் 29ஆம் திகதி வரை அவுஸ்ரேலியா, நியூசிலாந்தில் நடைபெறவுள்ளது. அதனால் உலகக்கிண்ண தொடர் வரை இந்திய அணி அவுஸ்ரேலியாவில் தங்கியிருக்கும்.

இந்திய வீரர்கள் அவுஸ்ரேலியாவில் 4 மாதங்கள் வரை தங்கியிருப்பதால் வீரர்கள் தங்கள் மனைவிகளுடன் தங்கியிருக்க கிரிக்கெட் சபை அனுமதி வழங்கியுள்ளது.

இந்நிலையில் மெல்பேர்னில் நடைபெறும் 3ஆவது டெஸ்ட் போட்டியின் போது வீரர்களின் மனைவிகள் அவுஸ்ரேலியா சென்றடைவார்கள். அதன்படி அணித்தலைவர் டோனி, தவான், புஜாரா, முரளிவிஜய், அஸ்வின், உமேஷ் யாதவ் ஆகிய வீரர்களின் மனைவிகள் அவுஸ்ரேலியா செல்வார்கள் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

# ஒரு நாள் போட்டியிலிருந்து ஓய்வு பெறுகிறார் அப்ரிடி



(இஸ்லாமாபாத்)

பாகிஸ்தான் கிரிக்கெட் அணியின் சகலதுறை வீரர் சாகித் அப்ரிடி உலகக்கோப்பை கிரிக்கெட் போட்டிக்குப் பின்னர் ஒருநாள் போட்டியில் இருந்து ஓய்வு பெறுவதாக அறிவித்துள்ளார்.


இதுகுறித்து அவர் கூறும்போது நல்ல நிலைமையில் இருக்கும்போதே ஒருநாள் கிரிக்கெட் போட்டியில் இருந்து ஓய்வு பெற்றுவிட வேண்டும் என்று விரும்பினேன். அதற்கு இதுதான் சரியான நேரம் என்று நினைக்கிறேன். அதன்பிறகு 20 ஓவர் கிரிக்கெட் போட்டியில் கவனம் செலுத்துவேன் என்றார்.

மேலும் சரியான நேரத்தில் இந்த முடிவை எடுக்கக் கூடிய தைரியம் எனக்கு உண்டானதை எண்ணி நான் மிகழ்ச்சி. அடைகிறேன். ஏனென்றால், கடந்த காலங்களில் என்னை விட பெரிய வீரர்களெல்லாம் சரியான நேரத்தில் இதைப்போன்ற முடிவை எடுக்க முடியாமல் திணறி உள்ளனர்.

அடுத்த 20 ஓவர் உலகக்கோப்பை கிரிக்கெட் போட்டி இந்தியாவில் நடைபெறவுள்ளது. இதில் பாகிஸ்தான் கோப்பை வெல்ல வேண்டும் என்பதுதான் என் ஆசை. உலகக்கோப்பை போட்டிக்குப் பிறகு ஏராளமான 20 ஓவர் போட்டியில் விளையாடுவேன். 2016ஆம் ஆண்டு நடைபெறும் 20 ஓவர் உலகக்கோப்பை போட்டிக்கு வலுமையான பாகிஸ்தான் அணியை உருவாக்க முயற்சி செய்வேன்.

முறையாக ஓய்வு திகதியை அறிவித்துச் செல்லும் முதல் பாகிஸ்தான் வீரர் நானாகத்தான் இருப்பேன். இதுவே எனக்குப் போதும். ஒருநாள் போட்டியில் நான் அதிகளவில் சாதித்து விட்டேன் என்றார்.

# கற்கை நெறியை பூர்த்தி செய்தவர்களுக்கு பாராட்டு



(யாழ்ப்பாணம்)

பொது நிர்வாக முதுமாணி கற்கைநெறியினை பூர்த்தி செய்த வட மாகாண உத்தியோகத்தர்கள் வட மாகாண ஆளுநர் ஜிஏ.சந்திரசிறியைச் சந்தித்து கலந்துரையாடினர்.

இக்கலந்துரையாடல் கடந்த வெள்ளிக்கிழமை யாழ்ப் பாணத்திலுள்ள ஆளுநர் அலுவலகத்தில் நடைபெற்றது. சிறி ஜெயவர்த்தனபுர பல்கலைக் கழகத்தின் முகாமைத்துவ பட்டப்பின் கற்கை நிறுவனத்தில் கற்கைநெறியினை பூர்த்தி செய்த வட மாகாண உத்தியோகத்தர்களுக்கு ஆளுநர் பாராட்டுகளை தெரிவித்தார்.

இதில் வட மாகாண பிரதம செயலாளர் திருமதி. விஜயலட்சுமி ரமேஸ், ஆளுநரின் செயலாளர் இ.இளங்கோவன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

# இளைஞர் உறவு பரிமாற்றம் மன்னாரில் விசேட நிகழ்ச்சி

(மன்னார்)

வடக்கு-தெற்கு கலாசார இளைஞர் உறவு பரிமாற்றம் நல்லிணக்கம் பேணல் நிகழ்ச்சித் திட்டம் கடந்த வெள்ளிக்கிழமை ஆரம்பமாகி நேற்று முன்தினம் வரை மன்னார் மாவட்டச் செயலகத்தில் மிகச்சிறப்பாக நடைபெற்றது. இதில் முதற்கட்ட நிகழ்வாக வடக்கு-தெற்கு இளைஞர் யுவதிகளிடம் கலைகலாசார மற்றும் பாரம்பரிய நல்லிணக்கத்தை பேணும்முகமாக நடனநாட்டியங்கள் மொழிப்பரிமாற்றங்கள் பலவற்றை பரிமாறிக் கொள்ளுதலும் புரிந்துணர்வுமான இளைஞர்களுக்கான நிகழ்வாக நடைபெற்றது.

இந்நிகழ்வில் மன்னார்மாவட்ட அரசாங்க அதிபர் எம்-வை-தேசப்பிரிய ,விளையாட்டு கலைகலாசார இளைஞர் விவகார அமைச்சின் செயளாலரும் மற்றும் மன்னார் மாவட்ட உதவி தேர்தல் ஆணையாளர் டி.சி.அரவிந்தராஜ், பிரதேச செயளாலர் கே-வசந்த குமார், உதவிச்செயளாலர் வி.பபாகரன் மற்றும் வடக்கு-தெற்கு மாகாணங்களின் கலாசார உத்தியோகத்தர்கள் பிரமுகர்களும் கலந்து கொண்டனர்.

# தேர்தலில் முக்கிய கடமைகளில் பெண் சிரேஷ்ட அதிகாரிகள்

(கிளிநொச்சி)

நடைபெறப்போகும் ஜனாதிபதித் தேர்தலில முதன்முறையாக கிளிநொச்சி மாவட்டத்தில் பெண் சிரேஷ்ட தலைமை தாங்கும் அதிகாரிகள் நியமிக்கப்பட உள்ளனர்.

இதுவரை வழமையாக ஆண் அலுவலர்கள் மட்டுமே நியமிக்கப்படுவது வழமையானதாக இருந்து வந்தது.

தற்பொழுது அரச அலுவலகங்களில் பெண் அலுவலர்களின் தொகை அதிகரித்து ஆண் அலுவலர்களின் எண்ணிக்கை குறைந்து வருகிறது.

இந்த நிலையில் பெண் அலுவலர்களை சிரேஷ்ட தெரிவத்தாட்சி அலுவலராக பரீட்சார்த்தமாக நியமிக்க உள்ளனர்.

95 வாக்களிப்பு நிலையங்களைக் கொண்ட கிளிநொச்சி மாவட்டத்தில் மிகச் சிறிய எண்ணிக்கையான பெண் அலுவலர்கள் சிரேஷ்ட தலைமை தாங்கும் அலுவலர்களாக நியமிக்கப்படவுள்ளனர்.

இன்றும் நாளையும் நடைபெறவுள்ள தபால் மூலமான வாக் களிப்பில் அத்தாட்சிப் படுத்தும் கடமையில் 95 பெண் சிரேஷ்ட தலைமை தாங்கும் அலுவலர்களும் ஈடுபடுத்தப்படவுள்ளனர். (90)

# தீவக பிரதேசத்தின் உன்னத அபிவிருத்தி மக்கள் சிந்தித்து செயற்படவேண்டும்

## உதயன் எம்.பி தெரிவிப்பு





(யாழ்ப்பாணம்)

பொருளாதாரத்தில் பின்தங்கியிருந்த தீவகப் பிரதேசத்தையும் மக்களின் வாழ்வாதாரத்தையும் மேம்படுத்துவதற்கு அதிக அக்கறை கொண்டு செயற்பட்டவர் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா என ஈ.பி.டி.பி நாடாளுமன்ற உறுப்பினர் சில்வேஸ்திரி அலென்ரின் (உதயன்) தெரிவித்துள்ளார்.

வேலணை ஐயனார் மண்டபத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் தேர்தல் பிரசார கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், வேலணை, ஊர்காவற்றுறை, நெடுந்தீவு ஆகிய பிரதேசங்கள் உள்ளடங்கிய தீவகம் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவினது சிறந்த வழிகாட்டல்களுக்கு அமைவாக பாரிய முன்னேற்றமும், அபிவிருத்தியும் கண்டு வருகின்றன.

அந்தவகையில், அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவினது ஆலோசனை மற்றும் வழிகாட்டலுக்கு அமைவாக தீவகத்தில் முன்னெடுக்கப்பட்டு வரும் பல்வேறுபட்ட அபிவிருத்தி செயற்திட்டங்களுக்கு ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தமது முழுமையான ஆதரவினை வழங்கி அதற்கான நிதி உதவிகளையும் வழங்கி வருகின்றார்.

எனவே, இவ்வாறான அபிவிருத்திகளை தொடர்வதற்கும் வாழ்வாதாரத்தை மேம்படுத்துவதற்கும் நடைபெறவுள்ள ஜனாதிபதி தேர்தலில் தீவக மக்கள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவுக்கு வாக்களித்து அவரை வெற்றி பெறச் செய்ய வேண்டும் என்றும் கேட்டுக் கொண்டார்.

அத்துடன், பொய்யான பரப்புரைகளை நம்பி மக்கள் ஒரு போதும் ஏமாந்து விடக் கூடாது என்றும் தெரிவித்தார்.

ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் செயலாளரும் அமைச்சருமான சுசில் பிரேம ஜயந்த உரையாற்றும் போது கடந்த ஐந்து வருடங்களுக்குப் பின்னர் வேலணை உள்ளிட்ட தீவகம் மிக அற்புதமான முறையில் அபிவிருத்தியில் பாரிய முன்னேற்றம் கண்டுள்ளது.

எனவே, எதிர்காலத்தில் மக்களின் ஏனைய தேவைப்பாடுகளையும் அபிவிருத்திகளையும் கொண்டு ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவுக்கு தீவக மக்கள் வாக்களிக்க வேண்டுமெனவும் கேட்டுக் கொண்டார்.

இந்நிகழ்வில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா வடக்கு மாகாண சபை எதிர்க் கட்சித் தலைவர் தவராசா, சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் யாழ். மாவட்ட அமைப்பாளரும், வடக்கு மாகாண சபை உறுப்பினருமான அங்கஜன் அமைச்சரின் யாழ்.மாவட்ட ஒருங்கிணைப்பாளர் குகேந்திரன் ஊர்காவற்றுறை பிரதேச சபைதவிசாளர் ஜெயகாந்தன், நெடுந்தீவு பிரதேச சபைத் தவிசாளர் அருளப்பு, வேலணை பிரதேச சபைத் தவிசாளர் சிவராசா ஆகியோர் கலந்து கொண்டனர்.

# டெங்கு ஒழிப்பு நடவடிக்கை

(யாழ்ப்பாணம்)

இடைவிட்டுப் பெய்யும் மழையினைத் தொடர்ந்து யாழ். நகரப் பகுதியில் டெங்கு ஒழிப்பு நடவடிக்கைகளை யாழ். மாநகர சபை சுகாதாரப் பகுதியினர் மேற்கொண்டு வருகின்றனர்.

டெங்கு நோய் பரவுவதற்கு ஏதுவாக அமைந்துள்ள இடங்கள் மற்றும் வீடுகள் குறித்து சுகாதாரப் பகுதியினர் கண்காணிப்பு நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளனர்.

அத்துடன் டெங்கு நுளம்பு பரவாது வீட்டையும் சுற்றுப்புறச் சூழலையும் வைத்திருக்குமாறு சுகாதாரப் பகுதியினர் ஒலிபெருக்கி மூலம் பொதுமக்களுக்கு அறிவுறுத்தல் வழங்கி வருகின்றனர்.

# சிரமதானம்



(அல்லைப்பட்டி)

அல்லைப்பிட்டியில் பொதுமக்களினால், இலகுவேலைத் திட்டத்தின் கீழ் கடந்த சில வாரங்கள் சிரமதானம் மேற்கொள்ளப்பட்டது

இப்பணியில் முதற்கட்டமாக அல்லைப்பிட்டி ஊடாக மண்கும்பான் நோக்கிச் செல்லும் பிரதான வீதியின் இரு பக்கமும் வளர்ந்து நின்ற பற்றைகள்-வடலிகள் வெட்டி அகற்றப்பட்டதுடன்-மேலும் மூன்றுமுடி அம்மன் ஆலயத்திற்கு பின் புறமாக வடக்கு நோக்கிச் செல்லும் வீதியும் முழுமையாக துப்பரவு செய்யப்பட்டது.

# ஏழாலை தெற்கு பகுதிகளிலும் கிணற்று நீரில் ஒயில் கலப்பு

ஏழாலை தெற்கு பகுதியிலுள்ள வீடுகளில் கிணற்று நீரில் ஒயில் கலந்துள்ளதாகவும் இதனால் அப்பகுதி மக்கள் குடிநீருக்காக வேறு இடங்களுக்குச் சென்று நீரைப் பெற்று வருவதாகவும் கவலை தெரிவித்துள்ளனர்.

கிணற்று நீருக்கு பெயர் போன ஏழாலை மக்களே தமது அத்தியாவசிய தேவையான குடிநீருக்காக வேறு இடங்களுக்கு அலைந்து திரிய வேண்டிய துர்ப்பாக்கிய சூழ்நிலை ஏற்பட்டுள்ளதாக அப்பகுதி மக்கள் கவலை தெரிவித்துள்ளனர்.

மேலும் கிணற்று நீரில் ஒயில் கலந்துள்ளதால் அப்பகுதி விவசாயிகள் தாம் விவசாயம் செய்ய முடியாத சூழ்நிலை ஏற்படலாம் என அச்சம் வெளியிட்டுள்ளனர்.

அது மட்டுமன்றி செம்மண் விவசாய பிரதேசமான ஏழாலை, குப்பிளான், கட்டுவன், மல்லாகம் போன்ற பகுதிகளில் உள்ள விவசாயிகள் தமது ஊரிலுள்ள கிணறுகளில் ஒயில் கலந்ததால் விவசாயம் பாதிக்கப்படுவதுடன் விளைச்சல் குறைவடையக்கூடிய வாய்ப்பும் ஏற்படலாம் எனவும் கவலை வெளியிட்டுள்ளனர். (66)


# வருடாந்த மகோற்சவம்

மட்டுவில் பன்றித்தலைச்சி கண்ணகை அம்மன் ஆலய ஜயவருஷ வருடாந்த மகோற்சவம் எதிர்வரும் 27ஆம் திகதி சனிக்கிழமை முற்பகல் 11 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி நடைபெறவுள்ளது.

இதில் 2ஆம் திகதி வெள்ளிக்கிழமை கைலாசவாகன திருவிழாவும் 3ஆம் திகதி நண்பகல் வேட்டைத் திருவிழாவும் பிற்பகல் சப்பறமும், 4ஆம் திகதி முற்பகல் 10 மணிக்கு இரதோற்சவமும் மறுநாள் காலை 10 மணிக்கு தீர்த்தோற்சவமும் மாலை கொடியிறக்கமும் இடம்பெறவுள்ளது.

இதில் அபிஷேகம் விசேட திருவிழாக்களின்போது காலை 7 மணிக்கும் ஏனைய தினங்களில் காலை 9.30 மணிக்கும் மாலை 5 மணிக்கும் ஆரம்பமாகவுள்ளது. இதில் மகோற்சவக் குருவாக கலாநிதி துன்னையூர் சிவசக்திஸ்ரீ ராம் தேவலோகேஸ்வரக் குருக்கள் கிரியைகளை ஆற்றவுள்ளார். (இ)

1



# மகிந்தவை தண்டித்து ரணில் மற்றும் சந்திரிகாவுக்கு வெகுமதி வழங்குவது பற்றி...

- கலாநிதி. தயான் ஜயதிலக -

இரண்டு முகாம்களிலும் உள்ள பிரதான கருதுகோள்களுடனும் எனக்கு உடன்பாடில்லை. ராஜபக்ஸ ஆட்சியை பற்றி விமர்சனம் எதுவுமில்லாத ஆதரவாளர்கள் அரசியல் மாற்றங்களுக்கு எதிர்ப்பு தெரிவிப்பது சரியானது என்று கருதுவது தவறானது. தூய ஸ்திரத்தன்மை மூலம் பாதுகாப்பை சிறந்த முறையில் பெறமுடியும் மற்றும் அந்த ஸ்திரத்தன்மை முற்றான தொடர்ச்சி மூலமே சிறப்பாக உறுதிப்படுத்தப் படுகிறது என்று அவர்கள் சிந்திப்பது தவறு.

சாதாரணமாகச் சொன்னால் ஜனநாயகத்தில் மாற்றத்தை ஏற்படுத்த முயலும் தற்போதைய முயற்சிகள் தோல்வியடையுமானால், அநேகமாக மேற்கு நிச்சயமாக கடுமையான தெரிவுகளை விரிவாக்க முற்படும், அதற்கான அடுத்த எத்தை மார்ச் 2015 அமைப்பதற்கான தயாரெடுப்புகள் ஜெனிவாவில் நடைபெற்று வருகின்றன.

எனினும் என்னைப் பொறுத்தவரை வரும் ஜனாதிபதி தேர்தலில் மாற்றத்தை ஏற்படுத்த வாக்களிக்க முடிவெடுப்பதற்கு இந்த வாதங்கள் போதுமானதாகத் தோன்றவில்லை. எங்களுக்கு தெரிந்த அளவில் இந்தக் கட்டத்தில் எதிரணி பிரகடனப்படுத்தியுள்ள மூலோபாயம் மற்றும் கொள்கைகள் என்பனவற்றை வைத்து மகிந்த ராஜபக்ஸவை வெளியேற்ற நாங்கள் வாக்களிக்க வேண்டும் என்பதில் எனக்கு உடன்பாடில்லை.

மாற்றம் அவசியம், அது கட்டாயமானதும் கூட. ஆனால் எந்த வகையான மாற்றம், எங்கே, எப்போ, மற்றும் யாருக்கு?

சர்வதேச மனித உரிமைகள் தினமான டிசம்பர் 10இல் திரு. சிறிசேன ஒரு சிவில் சமூக கூட்டணியில் உரையாற்றி உறுதிப் படுத்தியது, தான் "ஜனாதிபதி ஆசனத்தை கைப்பற்ற நினைப்பது அதில் தொடர்ந்து நிலைத்திருக்க வேண்டும் என்கிற நோக்கத்துக்காக அல்ல, ஆனால் துல்லியமாக அதன் அதிகாரங்களை அழிக்க வேண்டும் என்ற நோக்கத்துக்காக மற்றும் அதன்பின் நான் வீடு செல்வேன்"

அதே தொலைக்காட்சி தனது செய்தியில், ஜனாதிபதி நாற்காலியின் அதிகாரங்களை அவர் யாருக்கு மாற்றப்போவதாக வாக்குறுதியளித்தாரோ அந்த மனிதர்களின் அதாவது பாராளுமன்ற உறுப்பினர்களின் சுயரூபத்தை தோலுரித்துக் காட்டும் வண்ணம், அவர்கள் கட்சிமாறும் சங்கீதக் கதிரை விளையாட்டில் ஈடுபட்டிருப்பதைக் காட்டியது!

எனவே நாங்கள் திரு.சிறிசேனவின் வாக்குறுதியை நம்ப வேண்டுமானால், ஜனாதிபதி நாற்காலியின் அதிகாரங்கள் இல்லாமல் ஆக்கப்படுவதை நாங்கள் எதிர்பார்க்க முடியும் (மற்றும் அதன் உரிமையாளரான திரு.சிறிசேனவையும்) மற்றும் ஒரு நிறுவனத்தின் அதிகாரம் இந்த சங்கீத நாற்காலி விளையாட்டால் பாதிப்புக்கும் உள்ளாகிறது.

விகிதாச்சார பிரதிநிதித்துவம் என்கிற தேர்தல் முறையை நீக்குவதாலும் மற்றும் கடந்த காலத்தில் இருந்த சௌகரியமான பெரும்பான்மையான தொகுதி முறைத் தேர்வுக்கு திரும்புவதாலும் ஸ்திரத்தன்மை பாதுகாக்கப் படும் என்கிற எதிர்வாதம் முன்வைக்கப்படுகிறது.

சுய நலிவுற்றதும் எஞ்சிய நிறைவேற்று அதிகாரங்களைக் கொண்டதுமான ஒரு தலைவர் ஒரு தொங்கு பாராளுமன்றத்தில் அரிதாகவே முதலிடம் பெறுவார், தமிழ் புலம் பெயர்ந்தவர்களின் பிரிவினைவாத வலையமைப்பினால் கூட்டாக உட்செலுத்தப்படும் பணபலத்தின் காரணமாக அரசாங்கம் அதன் விருப்பப்படி இயங்க இயலாத நிலைக்குத் தள்ளப்பட்டு வடக்கிலிருந்து இராணுவத்தை விலக்கிக் கொள்வதாக வாக்குறுதி வழங்க நேரிடலாம்.

உள்நாட்டிலும் மற்றும் வெளிநாட்டிலும் செயற்படுத்துவதற்காக எதிரணியினால் வடிவமைக்கப் பட்டுள்ள புதிய மூலோபாய கட்டமைப்பில் திரு. சிறிசேனவின் எஞ்சிய தலைமைத்துவம் கட்டமைப்பு ரீதியாக தீர்க்கமான மிகச் சிறந்த அதிகார மையமாக இருக்காது இருக்கவும் முடியாது. பிரதமராலும் மற்றும் அமைச்சரவையினாலும் மட்டுமே அது இயலும். ஈர்ப்பு மேலாதிக்கமுள்ள அரசியல் முனைகளாக திரு.ரணில் விக்கிரமசிங்க மற்றும் திருமதி சந்திரிகா பண்டாரநாயக்கா குமாரதுங்க ஆகியோர் வருவதற்கான வாய்ப்பு அதிகமாக உள்ளது.

தனிப்பட்ட ரீதியில் எனக்கு அவர்களுடன் ஒரு மோதலோ அல்லது பிரச்சினையோ கிடையாது மற்றும் உண்மையில் பல்வேறு சமயங்களில் விமர்சன ரீதியாக என்றாலும் அவர்களை நான் பகிரங்கமாக ஆதரித்துள்ளேன் (ரணிலை 1994 - 1996லும், சந்திரிகாவை 1999 - 2004லும்). ஒரு அரசியல் விஞ்ஞானி என்கிற வகையில் அது எனது தொழில்.

மக்களின் நலன் நோக்கியதான ஒரு அரசாங்கத்தின் முதற்கடமை அதிக

---

# கே.வி. மகாதேவன் 44



- பி.ஜி.எஸ்.மணியன் -

சரஸ்வதி சபதம் படத்தின் ஆரம்பக் காட்சியும் கே.வி. மகாதேவனின் இசையில் அமைந்த பாடலோடுதான் தொடங்குகிறது.

கலைமகளின் அறிமுகக் காட்சி - அன்னை கலைவாணி கோமாதா பூஜை செய்யும் பாடலோடு கண்முன் தோன்றுகிறது.

மங்கல வாழ்த்துக்களோடு ஒரு தொகையறா. அதனைத் தொடர்ந்து வரும் சொற்கட்டுக் கோர்வைகளை முழக்கும் தாளவாத்தியங்களின் தனி ஆவர்த்தனம் காட்சிக்கே ஒரு தனி கம்பீரத்தைச் சேர்க்கிறது.

"தனி" முடிந்ததும் பி.சுசீலாவின் குளுமைக் குரல் "கோமாதா எங்கள் குலமாதா" என்று பீம்ப்ளாஸில் எடுப்பாக ஆரம்பிக்கும் போதே நம்மைக் கட்டிப்போட்டு விடுகிறது.

சரணங்களை இணைக்கும் இணைப்பிசையில் கே.வி.மகாதேவனின் கற்பனைத் திறம் நம்மை பிரமிக்க வைக்கிறது.

மத்யம ஸ்ருதியில் துவங்கும் பாடல் படிப்படியாக மேலேறி உச்சத்தில் முடிகிறது.

பொதுவாக பாடல்களை மத்யம சுருதியிலேயே துவங்குவது கே.வி.மகாதேவனின் வழக்கம். இந்தப் பாடலும் அதற்கு விதிவிலக்கு அல்ல.

இந்தப் பாடல் மட்டும் என்று அல்ல. மகாதேவனின் இசையில் தமிழ், தெலுங்கு ஆகிய இரு மொழிகளிலும் கிட்டத்தட்ட இரண்டாயிரத்து ஐநூறு பாடல்களுக்கு மேல் பாடியிருக்கும் இசை அரசி பி. சுசீலா.

அவருடன் பணியாற்றிய அனுபவங்களாக பி.சுசீலா பகிர்ந்து கொண்ட தகவல்கள்...

"பொதுவா "மாமா" ஹார்மோனியம் உபயோகப் படுத்தவே மாட்டார். பாட்டுக்குத் தான் டியூன் போடுவார். பாட்டு வரிகளைப் பார்த்ததும் புகழேந்தியைப் பார்த்து "புகழேந்தி ராகத்தை பாடிக்காட்டு" என்று சொல்லுவார். புகழேந்தி பல்லவியோட முதல் வரியை பாடுவார். உடனே கடகடன்னு ஆரம்பிச்ச முதல் சரணம், ரெண்டாவது சரணம் வரைக்கும் மாமாவே பாடி முடிச்சுடுவார். புகழேந்தி நொட்டேஷன் எடுக்க முடியாம திணறிடுவார். "திரும்பிச் சொல்லுங்கோ மாமா" என்று கேட்டால் .. "டேய். அதுபாட்டுக்கு தானாவே வந்துது. திருப்பிச் சொல்லச் சொன்னா எப்படிடா" என்பார்". - பி.சுசீலா.

கலைமகளின் அறிமுகம் இந்தப் பாடலுடன் என்றால் திருமகளின் அறிமுகக் காட்சிக்கு "பல்லாண்டு பல்லாண்டு பல்லாயிரத்தாண்டு" என்ற பெரியாழ்வார் பாசுரத்தை ஆலயங்களில் பட்டாச்சாரியார்கள் ஓதுவதைப் போலவே கோரஸ் பாடகியரைப் பாடவைத்திருக்கிறார் கே.வி.மகாதேவன்.

அடுத்து வரும் மலைமகளின்





அறிமுகமோ சக்தி நடனத்துடன்..

தாளவாத்தியங்கள் மட்டுமே ஒலிக்கும் இந்தக் காட்சிக்காக கே.வி.மகாதேவன் மேற்கொண்ட சிரத்தையும் ஈடுபாடும் நம்மை வியக்க வைக்கின்றன. சதுஸ்ர நடை, திஸ்ர நடை, மிஸ்ர நடை, கண்ட நடை ஆகிய நான்கு நடைகளையும் மாற்றி மாற்றி பயன்படுத்தி இந்த நாட்டியக் காட்சிக்கான பின்னணி இசையை அமைத்திருக்கும் லாவகம் அபாரம்.

"கல்வியா செல்வமா வீரமா" - டி.எம். சௌந்தரராஜன் பாடும் இந்தப் பாடலை காம்போதியில் ஆரம்பித்து காபி, பாகேஸ்ரீ, சிவரஞ்சனி ஆகிய ராகங்களில் ஒரு அருமையான ராகமாலிகையாக வடிவமைத்துக் கொடுத்திருக்கிறார்.

தொடர்ந்து பிறவி ஊமை - கலைமகள் அருளால் - பாடும் வல்லமை பெறும் காட்சி.

"அகர முதல எழுத்தெல்லாம் அறியவைத்தாய் தேவி." - ராகம் "நடபைரவி" என்றால்..

"தெய்வம் இருப்பது எங்கே" பாடலுக்கோ சிந்துபைரவி.

அன்றாடம் பிச்சை எடுத்து பிழைக்கும் ஒருத்தியை நாட்டுக்கே ராணியாக ஆக்குகிறாள் திருமகள்.

"தாய் தந்த பிச்சையிலே பிறந்தேனம்மா" - இந்தப் பாடலில் பட்டினத்தாரின் பாடல் கருத்தை சரணத்தில் எளிமையாகக் கொடுத்திருக்கிறார் கவியரசு கண்ணதாசன்.

"மாதாவும் உடல் சலித்தாள்.
வல்வினையோன் கால் சலித்தேன்.
வேதாவும் கைசலித்து விட்டானே. - தாதா.
இருப்பையூர் வாழ் சிவனே.
மீண்டும் ஒரு கருப்பையூர் வாராமல் கா" - இது பட்டினத்தடிகள் வாக்கு.

இதையே சரணத்தில் -

"பெற்றவள் உடல் சலித்தாள்
பேதை நான் கால் சலித்தேன்
படைத்தவன் கை சலித்து ஓய்ந்தானம்மா
மீண்டும் பாவி ஒரு தாய் வயிற்றில்
பிறவேனம்மா" - என்று கண்ணதாசன் பாமர மக்களையும் சென்றடையும் பாடலாக வடித்திருக்கிறார்.

அடுத்து "உருவத்தைக் காட்டிடும் கண்ணாடி" - பாடல்.

ஏற்கெனவே "பாஞ்சாலி" படத்தில் ஏ.எல். ராகவன் பாடிய "ஒருமுறை பார்த்தாலே பேசாதும்" - பாடலின் இன்னொரு இசை வடிவம் தான் என்றாலும் மகாதேவன் காட்டி இருக்கும் வித்தியாசம் பாடலின் வெற்றிக்கு சான்று.

"ராணி மகாராணி" - தெம்மாங்கு மெட்டில் அமைந்த ஒரு பாடல்.

"சரஸ்வதி சபதம்" - படம் மகத்தான வெற்றி பெற்றது.

தொடர்ந்து ஏ.பி.நாகராஜனும், கே.வி. மகாதேவனும் மறுபடியும் இணைந்தார்கள்.

இந்த முறை கண்ணதாசனின் மூத்த சகோதரர் ஏ.எல். சீனிவாசன் தனது ஏ.எல்.எஸ். ப்ரொடக்சன்ஸ் சார்பில் தயாரித்த புராணப் படத்துக்காக.

படம் : "கந்தன் கருணை."

(தொடரும்)

அளவிலான நல்லாட்சி மட்டுமல்ல, அதிக இருத்தியலின் அடிப்படையில் ஒரு வன்முறை மூலமும் உறுதியுடன் இரக்கமின்றி சூறையாடும் எதிரியிடமிருந்து வாழ்வுக்கும் மற்றும் அங்கங்களுக்கும் பாதுகாப்பு வழங்குவதும்தான்.

அந்த முக்கியமான பரீட்சையில் சந்திரிகாவும் ரணிலும் பரிதாபகரமாக தோற்றுப் போனார்கள் அதே வேளை மகிந்த ராஜபக்ஸ சிறந்த பெறுபேற்றுடன் அதில் சித்தியடைந்தார். அவர் இந்த நாட்டையும் அதன் மக்களையும் பாதுகாத்து பயங்கரவாதத்திலிருந்து நம்மை விடுதலை பெற வைத்தார்.

ஆகவே ஒரு அரசியல் மாணவன் என்கிற வகையில் மகிந்த ராஜபக்ஸவை வீட்டுக்கு அனுப்பும் அதே வேளை அதற்குச் சமமாக ரணில் மற்றும் சந்திரிகாவை அதிகாரமும் செல்வாக்குமுள்ள ஒரு முன்னணி நிலைக்கு கொண்டு வரும் ஒரு விளைவை என்னால் பரிந்துரைக்க முடியாது - அதே போல திரு. சிறிசேனவும் அதனை விஞ்சிய அளவில் இல்லை.

நாம் தெரிவு செய்யவேண்டிய மாற்றத்தின் வகை நாம் வாழும் இந்த வரலாற்று காலத்தை பொறுத்ததாக இருக்கவேண்டும். நாம் யுத்தத்தை கடந்து இன்னமும் வெறுமனே ஐந்து ஆண்டுகள்தான் ஆகிறது. நாங்கள் யுத்தத்துக்கு பின்னான ஒரு காலத்தில் இருக்கிறோம். நாங்கள் இனிமேலும் யுத்த கால மங்கல் பார்வைக்குள் அடைபட்டு கிடக்கக் கூடாது என்பதை ராஜபக்ஷக்கள் உணர்ந்து கொள்ளத் தவறி விட்டார்கள்.

கூட்டு எதிரணியும் இது யுத்தத்துக்குப் பிந்திய காலம், இந்த யுத்தம் வரலாற்று மற்றும் உளவியல் திருப்புமுனையை வரையறை செய்யும் ஒன்றாக உள்ளது என்பதை விளங்கிக் கொள்ளத் தவறி விட்டார்கள்.

(மீதி நாளை)

நமக்கு வழங்கப்பட்ட வாழ்நாள் ஒவ்வொன்றுமே, இன்றில்லாவிட்டாலும் நாளையாவது மெய் ஞானம் வருவதற்கான வாய்ப்பே! ஆனால் மனிதர்கள் மேலும் மேலும் வயதாகிற அளவு வாழ விரும்புகிறார்களே ஒழிய, ஞானம் அடைவதை விரும்பவில்லை.

ஒரு ஜென் துறவி, மரத்திலிருந்து சருகு உதிர்வதைக் கண்ட மாத்திரத்தில் சருகுபோல தானும் இலகுவாகி, அசைந்து அசைந்து ஆடியபடியே விழிப்படைந்தார். இத்தகைய விழிப்பு ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு வகையில் ஏற்படுகிறது.

# இந்தப் பாவியை வெளியே தள்ளு!

வேறொரு ஜென் துறவிக்கு, தூக்கிப்போன பானை தெருவில் விழுந்து உடைந்தபோது விழிப்பு கிட்டியது. எல்லைக்குட்பட்ட பானையின் வெளியும் பிரபஞ்ச வெளியும் சங்கமித்த கணத்தில், அவரும் ஆனந்தத்தில் சங்கமம் ஆனார். அவரது உடல் ஜாதி, மதம், இனம், பால் வேறுபாடு என்கிற சகல சிற்றெல்லைகளும் தகர்ந்துபோய் முழுமையில் பிரவேசித்தார்.

உலக வாழ்வில் வெற்றி பெற அகங்காரத்தை மையப்படுத்தி, "நான் தகுதி மிக்கவன்" என்று பிரகடனப்படுத்துவது வழக்கம். ஆனால் ஆன்மிக வாழ்வு இதற்கு முற்றிலும் எதிரானது. "ஐயோ! எதற்கும் தகுதியற்ற என்னைக் கடவுள் எப்படி ஏற்றுக் கொண்டார்? பக்குவமே இல்லாத என்னை எவ்வாறு பக்குவமாக்கி ஏற்றுக் கொண்டார்?" என்று கண்ணீர் விடுவதே அடியவர் சிறப்பு.

என் தகுதிக்கு ஏற்ப எதுவுமே கிடைக்கவில்லை என்று துடிப்பது உலகியல்! தகுதியே அற்ற எனக்குக் கடவுள் செய்த கருணை என்னே என்று வியப்பது அருளியல்!

ஒரு சம்பவம். சிறைச்சாலையை ஆய்வு செய்யப் போனார் ஓர் அரசர். "நான் குற்றமற்றவன். திருடாத என்னைத் திருடன் என்று உள்ளே தள்ளி விட்டார்கள்". "நான் மகா உத்தமன்" என்று எல்லாக் குற்றவாளிகளும் தங்களுக்குத் தாங்களே நன்னடத்தைச் சான்றிதழ் வழங்கிக் கொண்டனர். ஒருவன் மட்டும்,



"அரசே! நான் மகாபாவி. இந்தத் தண்டனைகள் எனக்குப் போதாது. நான் செய்த பாவங்கள் அத்தனை கொடியவை" என்று அழுதான்.

அவனை உற்றுப் பார்த்த அரசர் காவலாளியை அழைத்து, "உடனே இவனை விடுதலை செய்து இங்கிருந்து வெளியே தள்ளு. இத்தனை உத்தமர்கள் இருக்கும் இடத்தில் இந்தப் பாவியும் இருப்பது சரியல்ல" என்று உத்தரவிட்டாராம்!

என்ன அற்புதமான கதை இது! கடவுள் தன்னைத் தாழ்த்தி உணர்பவனையே முதலில் கடைத்தேற்றுகிறார்.

('அபிராமி அந்தாதி உரை விளக்கம்' நூலில் சுகிசிவம்)




தோல்வி வந்தால்
பொறுமை அவசியம்
வெற்றி வந்தால்
பணிவு அவசியம்
எதிர்ப்பு வந்தால்
துணிவு அவசியம்
எது வந்தாலும்
நண்பர்கள் அவசியம்.

தவறை மன்னித்தால்
ஒரு நண்பன் கிடைப்பான்
தவறைக் கண்டித்தால்
ஓர் எதிரி உருவாகுவான்.

வேர்த்தால் துடைப்பது கர்ச்சீப்
கண்ணீரைத் துடைப்பது பிரண்ட்ஷிப்

பொய்யான நண்பனாக இருப்பதை விட,
உண்மையான எதிரியாக இரு.

அதிகமாகச் சிரிக்க வைப்பவனும்
அதிகமாகச் சிரித்துக் கொண்டிருப்பவனும்தான்
-
மனதில் அதிகக் காயத்தை வைத்திருப்பான்.

துன்பம் அனைவருக்கும்
ஒன்றுதான்.
ஆனால் அது
அழுபவனுக்குக் கண்ணீர்
கொடுக்கும்.
எழுபவனுக்குத் தண்ணீர்
கொடுக்கும்.

கால்கள் நனையாமல் கடலைக் கூட
தாண்டலாம்.
கண்ணீரில்லாமல் வாழ்வைக் கடக்க முடியாது.

சிரிக்கும்போது வாழ்க்கையை
அனுபவிக்க முடியும்... ஆனால்
அழும்போது மட்டும்தான்...
வாழ்க்கையை உணர முடியும்

சிரிப்பு என்னும் சாவி தொலைந்தால்...
மகிழ்ச்சி என்னும் வீடு பூட்டியே கிடக்கும்.

அடிக்கடி கோபப்பட்டால்,
கோபத்துக்கு மரியாதையில்லை...
கோபமே படாமலிருந்தால்
உனக்கு மரியாதையில்லை!

சினம் என்ற காற்று வீசும்போது
அறிவு என்ற விளக்கு அணைந்துவிடுகிறது.

மற்றவர் செய்யும் தவறுக்கு
உனக்கு நீயே கொடுத்துக்
கொள்ளும் தண்டனை கோபம்.

முட்டாள் கூட வெற்றி பெறலாம்,
ஆனால்...
முன்கோபி ஒரு நாளும்
வெற்றி பெற முடியாது.

கோபம் என்பது குறுகிய கால பைத்தியம்.

வெளியே காட்டிய கோபம்
மன்னிப்புக்கு வழி தேடும்
உள்ளே அடக்கிய கோபம்,
பழி வாங்க வழி தேடும்.

நேரத்தை வீணாக்கும்போது
கடிகாரத்தைப் பார்...
ஓடுவது முள் அல்ல...
உன் வாழ்க்கை

சோம்பேறிகள் காலத்தை மதிப்பதில்லை
காலம் சோம்பேறிகளை மதிப்பதில்லை

வாழ்க்கை ஒரு பட்டாம்பூச்சி மாதிரி!
லேசா பிடிச்சா பறந்திடும்
இறுக்கிப் பிடிச்சா இறந்திடும்
So handle life with care




- கின்னஸ் புத்தகம் 46 நாடுகளில் 37 மொழிகளில் வெளி வருகிறது.
- கடலுக்கடியில் முதல் புகைப்படம் 1893-இல் எடுக்கப்பட்டது.
- ஞாயிறு விடுமுறை நாளாக ஆரம்பிக்கப்பட்ட ஆண்டு 1843.
- ஐ.நா.சபையின் தலைமையகம் கிறிஸ்மஸ் மற்றும் புத்தாண்டு விடுமுறை தினங்கள் தவிர ஆண்டு முழுவதும் செயற்படும்.
- நோபல் பரிசுக் காசோலையை பரிசு கொடுக்கப்பட்ட அடுத்த ஆண்டு அக்டோபர் முதல் திகதிக்குள் பணமாக்கிக் கொள்ள வேண்டும். இல்லையென்றால் கிடைக்காது.
- உலக மக்களால் அதிகமாக உச்சரிக்கப்படும் வார்த்தை "ஓ.கே."
- ஈர்ப்பு விசை மிகக் குறைவான கிரகம் புதன்.
- ஆங்கிலத்தின் பிறப்பிடமான இங்கிலாந்தில் 600 ஆண்டுகளுக்கு முன்புவரை பிரெஞ்ச் மொழிதான் தேசிய மொழியாக பேசப்பட்டுவந்தது.
- பதவியிலிருந்து ஓய்வு பெறுவோருக்கு முதன் முதலில் ஓய்வு ஊதியம் வழங்கும் முறையை ஜெர்மனியின் பிரபல தலைவரான பிஸ்மார்க் 1889 ஆம் ஆண்டு அறிமுகப்படுத்தினார். ஆனால் அதனைப்பெற அப்போது 70 வயது ஆகியிருக்க வேண்டும்.
- தேநீர்க் கோப்பையைத் தட்டில் (சோஸரில்) வைத்துத் தரும் முறை 1750ஆம் ஆண்டில் அறிமுகப்படுத்தப்பட்டது.
- பலூனில் வானில் பறக்க உரிய முறைப்படி பயிற்சி எடுத்து, லைசென்ஸ் வாங்க வேண்டும் என்பது உலகம் முழுவதிலும் உள்ள நியதி.
- யூதர்களின் வாழ்க்கையிலும் சிந்தனைகளிலும் கூட மரங்களுக்கு முக்கியத்துவம் அளிக்கப்படுகிறது "தோரா" என்ற அவர்களது வேதநூலை அவர்கள் வாழ்க்கையின் மரம் என்கிறார்கள்.
- சமண மதக் கோட்பாட்டின்படி ஒவ்வொரு சமணரும் குருவை ஏற்கும் போது, "நான் பெரிய மரங்களை வெட்ட மாட்டேன்" என்று வாக்குத் தரவேண்டும்.
- ஓர் ஆண்டுக்கு 13 மாதங்கள் கொண்ட நாடு எத்தியோப்பியா.
- ஆபிரிக்காவின் வடகிழக்குப் பகுதியில் ஓடும் நைல் நதிதான் உலகிலேயே நீளமான நதியாகும். இதன் நீளம் 6 ஆயிரத்து 670 கிலோமீற்றராகும்.
- உலகம் முழுவதும் இரவும் பகலும் சமமாக உள்ள இரண்டு நாட்கள் மார்ச் 21 மற்றும் செப்டம்பர் 21.
- ஐஸ்லாந்தில் ரிக்ஜாவிக் என்னுமிடத்தில் குளிர்காலத்தில் ஒருநாள் முழுவதும் வானத்தில் நட்சத்திரங்களைப் பார்க்க முடியும். கோடை காலத்தில் 24 மணி நேரமும் சூரிய வெளிச்சம் இருந்துகொண்டே இருக்கும்.




# சூழ்ச்சி நிலைப்பதில்லை

மகேந்திரபுரம் என்ற நாட்டை கேசவராஜன் என்ற மன்னன் ஆண்டு வந்தான். அவனுக்கு குணசீலன் என்ற மகன் இருந்தான்.

இளவரசன் குணசீலன் அனைத்துக் கலைகளிலும் சிறப்பாகத் தேர்ச்சி பெற்றிருந்தான்.

ஒருமுறை கேசவராஜனின் எதிரியான மாளவமன்னன் மகேந்திரபுரத்தின் மீது படையெடுத்தான் மகேந்திரபுரம் சிறிய நாடாக இருந்ததால் போரில் கேசவராஜன் தோல்வியுற்றான்.

போரில் வென்ற மாளவமன்னன் மகேந்திரபுரத்தைச் சூறையாடினான். கோவில்களிலும், கருவூலத்திலும் இருந்த ஏராளமான நகைகள் கொள்ளையடிக்கப்பட்டன.

கேசவராஜனையும், அவன் உறவினர்களையும் பிடித்துத் தூக்கிலிட்டுக் கொன்றான். மாளவமன்னன் கேவசராஜனின் இந்த முடிவால் நாடே கதிகலங்கிப் போனது.

இந்த நிலையில் இளவரசன் குணசீலன் பாதாளச்சுரங்கத்தின் வழியாக தனது மெய்க்காப்பாளனாகிய வேம்பன் என்பவனின் உதவியுடன் தப்பித்தான்.

"வேம்பன், வேம்பன்..." என்று கத்தினான்.

"என்ன இளவரசரே?" என்றான் வேம்பன்.

"குகையின் வாயிலை ஏன் அடைந்தாய்?, அதைத் திறந்துவிடு எனக்கு மூச்சு முட்டுகிறது"

ஆ.ஆ.ஆ... வசமாக மாட்டிக் கொண்டயா குணசீலா.." எகத்தாளமாகச் சிரித்தான் வேம்பன்."

"ஏன் இப்படிச் செய்தாய்? வாயிலை திற..."

"வாயிலைத்திறக்க வேண்டுமென்றால் ஒரு நிபந்தனையைத் நீ எனக்குச் செய்துதர வேண்டும்."

" என்ன உளறுகிறாய்? நான் உன் இளவரசன் என்னை நீ வா போ என்று மரியாதை இல்லாமல் அழைக்கியாயே..."

"இனிமேல் நீ இளவரசன் அல்ல. நான்தான் இளவரசன்."

"என்ன?" அதிர்ந்தான் குணசீலன்.

"ஆம் உனக்கும் எனக்கும் உருவ ஒற்றுமையை இருக்கிறது. உன் மாமன் சுக்கிரபுர மன்னவனுக்கு உன் முகம் நினைவில் இருக்காது. ஐந்து ஆண்டுகளுக்கு முன்னால் உன்னைப பார்த்தான். இப்போது தம்மிருவரில் யார் போய் நான்தான் இளவரசன் குணசீலன் என்று சொன்னாலும் எளிதில் நம்பி விடுவான் எனவே நீ குகைக்குள் இருந்து வெளியே வர வேண்டுமானால் நான்தான் இளவரசன் என்பதை யாருக்கும் சொல்ல மாட்டேன்" என்று எனக்குச் சத்தியம் செய்து தரவேண்டும்."

"துரோகி.." உனக்கு உயிர்மீது ஆசை இருந்தால் சத்தியம் செய்து கொடு, இல்லையென்றால் இதற்குள மாட்டிக்கொண்டு உயிர்விடு. உனக்கு எப்படி ஆசை?"

தான் வகையாக மாட்டிக் கொண்டோம் என்பதை அப்போது தான் உணர்ந்தான். குணசீலன். அவனுக்கு அப்போது சத்தியம் செய்து கொடுப்பதைத் தவிர வேறுவழி தெரியவில்லை.

"சரி நான்தான் இளவரசன் குணசீலன் என்று சத்தியமாக யாரிடமும் எக்காரணத்தைக் கொண்டும் சொல்ல மாட்டேன்."

"புத்திசாலி... நீ அணிந்திருக்கும் அணிகலன்களையும், உடைகளையும் கழற்றி எனக்குத் தா.." என்றான்.

குணசீலன் தன் உடைகளைக் கழற்றிப் பாறை இடுக்கின் வழியாக வேம்பனிடம் கொடுத்தான்.

வேம்பன் தன்னுடைய சாதாரண உடைகளை இளவரசனுக்கு அணியக் கொடுத்தான்.

பின்னர் குகையின் அடைப்பை நீக்கி விட்டான். அப்போதுதான் குணசீலனுக்கு உயிரே வந்தது போல் இருந்தது.

குணசீலன் குகையிலிருந்து வந்ததும் வென் கன்னத்தில் தன் உடைவாளால் காயம் ஏற்படச் செய்தான் வேம்பன்

அந்தக்காயம் இளவரசனுக்குரிய முகத் தோற்றத்தையே மாற்றிக் கோரம் மாக்கியது.

காயம் பட்ட முகத்துடனும் சாதாரண உடையணிந்து கொண்டு நொந்துபோய் வேம்பனைப் பின் தொடர்ந்தான் குணசீலன்.'

இரண்டு நாட்கள் பயணத்திற்குப்



பின் இருவரும் சுக்கிரபுரத்தை அடைந்தனர்.

சுக்கிரபுர அரண்மனையில் இளவரசன் வேடத்திலிருந்த வேம்பனுக்கு நல்ல மரியாதை கிடைத்தது.

சுக்கிரபுர மன்னன் வேம்பனின் கையில் இருந்த சூரிய குல மோதிரத்தைக் கண்டு அவன்தான் உண்மையான இளவரசன் என நினைத்து வரவேற்றான்.

அப்போது உண்மையான இளவரசன் குணசீலனை சிறையில் அடைக்கும் படி கேட்டுக்கொண்டான். இளவரசன் வேடமிட்டிருந்த வேம்பன்.

"ஏன் இளவரசே இவனைச் சிறையில் அடைக்கச் சொல்கீறீர்கள்?" என்று வினவினான். சுக்கிரபுரமன்னன்

"இவன் என் மெய்க்காப்பாளன் , வரும் வழியில் என்னைக் கொல்லப் பார்த்தான். நல்ல வேளை இவன் சதியிலிருந்து நான் தப்பித்துக் கொண்டேன். எங்கள் இருவருக்கும் சண்டை நடந்தது. அப்போது இவன் முகத்தில் நான் வாளால் கீறி விட்டேன்" என்று தந்திரமாகச் சொனனான். இளவரசன் வேடத்திலிருந்து வேம்பன்.

"ஓ அப்படியா? இவனைப் பிடித்துச் சிறையில் அடையுங்கள்." என உத்தர விட்டான். மன்னன்.

உண்மையான இளவரசன் குணசீலன் உண்மையைச் சொல்ல நினைத்தான். ஆனால் எக் காரணத்தை முன்னிட்டும் தான் ஒரு இளவரசன் என்பதை யாரிடமும் சொல்ல மாட்டேன். என்று சத்தியம் செய்து கொடுத்திருக்கிறானே?

தன் விதியை எண்ணித் தன்னைத் தானே நொந்துகொண்ட குணசீலன் சிறைக்குச் சென்றான். இதன்பின் வேம்பனின் சூழ்ச்சிகள் ஒன்றன்பின் ஒன்றாக நிறைவேறின.

நாட்கள் நகர்ந்தன சுக்கிரபுர மன்னன் தனக்கு வயதாகி விட்டதால் தன ஒரே மகள் யாமினியை இளவரசன் வேடத்திலிருந்த வேம்பனுக்கு திருமணம் செய்து வைத்து தன் நாட்டுக்கு அவனையே அரசனாக்க நினைத்தான்.

திருமண ஏற்பாடுகள் தடபுடலாக நடைபெற்றன.

இளவரசியின் திருமணமாயிற்றே!

நாடெங்கும் கோலகலமாக இருந்தது

நாளை திருமணம்

சிறையில் அடைப்பட்டிருந்த இளவரசன் குணசீலன் தன்னை நொந்து கண்ணீர் வடித்துக்கொண்டிருந்தான்.

இளவரசி யாமினியின் கழுத்தில் தான் மாலையிடாமல் துரோகி மாலையிடப் போகிறானே என்று அவனுக்குக் கவலையாக இருந்தது.

அப்போது சிறைக்குள் ஒரு குடுவை 'டபக் டபக் " என்று ஆடிக்கொண்டிருந்தது.

இதைக்கண்ட குணசீலனுக்கு ஆச்சரியுமாக இருந்தது. "அடடே தன்னந்தனியாக ஒரு குடுவை ஆடுகிறதே?" என்று வியந்தான்.

தயக்கத்துடன் குடுவையின் அருகில் சென்று அதை எடுத்தான். அவன கை பட்டதும் குடுவை ஆடவில்லை குணசீலன் யோசனையுடன் குடுவையின் மூடியைத் திறந்தான். அடுத்த விநாடி குடுவைக்குள் இருந்து ஒரே புகையாக கிளம்பியது. குணசீலனுக்கு கண்கள் இருண்டன.

சிறை முழுவதும் புகை மண்டல மாக்கியது.

சற்றுநேரத்தில் புகை மறைந்தது அவ்விடத்தில் ஒரு பூதம் வந்து நின்றது. பூதத்தைக் கண்டவுடன் குணசீலனுக்குத் தலை சுற்றியது.

"இளவரசே.. என்னை இக்குடுவையிலிருந்து விடுவித்ததற்கு மிகவும நன்றி. நான் தங்கள் அடிமை" என்றது.

"சீ..சீ.." என்று பயத்தில் தடுமாறினான். குணசீலன்

"என் பெயர் சாம்பா என்னை அறுநூறு வருடங்களுக்கு முன்னால் சாந்தோக முனிவர் என்பவர் இக் குடுவைக்குள் அடைந்து என்னைச் சிறை வைத்தார். என்னை தாங்கள் விடுவித்ததால் இன்றிலிரருந்து நான் தங்களுக்கு அடிமை. "என்றது அப்பூதம்"

உண்மைகளை உணர்ந்து கொண்ட குணசீலன் தன் சோக வரலாற்றைப் பூதத்திடம் எடுத்துச் சொன்னார்.

மெய்க்காப்பாளன் வேம்பனின் துரோக செயலை எப்படி முறியடிப்பது என்று பூதத்திடம் வினவினான்.

"கவலைப்படாதீர்கள் இளவரசே... எனக்கு இச்சதிச் செயலை முறிப்பது ஒன்றும் பெரிய காரியமல்ல சூழ்ச்சி என்றுமே நிலைப்பதில்லை வல்லவனுக்கு வல்லவன் வையகத்தில் உண்டு. நாளை நடப்பதைப் பொறுத்திருந்து பாருங்கள்." என்றது.

பின்னர் குணசீலனை ஒரு கொசுவாக மாற்றிக்கொண்டு சிறையிலிருந்து தப்பிக்க வைத்தது பூதம்

மறுநாள்...

அரண்மனையில் இளவரசன் வேடமிட்டிருந்த வேம்பனுக்கும் இளவரசி யாமினிக்கும் திருமண நிகழ்ச்சி விமரிசையாக நடைபெற்றுக் கொண்டிருந்தது,

மணமேடையில் இளவரசி யாமினிக்கு மாலையிட முனையும் போது வேம்பனின் கண்கள் இருண்டன. அவன கண்களுக்கு இளவரசி ஓர் அரக்கியைப் போலத் தெரிந்தாள். இள்வரசியின் கோரத்தோற்றத்தைக் கண்டு "அய்யோ... காப்பாற்றுங்கள்" என்று அலறினான். வேம்பன்

சுற்றியிருந்தவர்களுக்கு ஒரே குழப்பமாக இருந்தது. இளவரசர் ஏன் இப்படிக் கதறுகிறார்...? அவருக்கு என்னவாயிற்று? என்று தங்களுக்குள் முணுமுணுத்துக் கொண்டார்கள்.

அய்யோ ராட்சகி... அரக்கி.. பூ.. பூதம்.." எனப் பிதற்றினான். வேம்பன். இதைக்கேட்ட சுக்கிரபுர மன்னன் அவனருகில் வந்து " என்ன இளவரசே.. தங்களுக்கு என்னவாயிற்று? என்று கேட்டான்.

" உங்களுக்கு ஒன்றுமே தெரியவில்லையா? இதோ மேடையில் உட்கார்ந்திருப்பது இளவரசியல்ல ரா..ட்சகி."

"தன் மகள் யாமினியை அவன் ராட்சகி என்று சொன்னதும் மன்னனுக்குக் கோபம் தலைக்கேறியது.

"என்ன உளறுகிறீர்கள்?" என்றான் ஆத்திரத்துடன்.

"உங்கள் கண்ணுக்கு ஒன்றுமே தெரியவில்லையா?" அனைவரும் யாமினியைப் பார்த்தார்கள். அவள் அழகான மணப்பெண்ணாக நாணத்துடன் அமர்ந்திருந்தாள்.

தங்களுக்கு என்னவோ ஆகி விட்டது. அழகான இளவரிசியைப் பார்த்து ராட்சகி என்கீறிர்களே? என்று பல்லைக்கடித்தான். சுக்கிரபுர மன்னன் இதையெல்லாம் அங்கு நின்று கவனித்துக் கொண்டிருந்தார்கள். இளவரசன் குணசீலனும், பூதமும்

அவர்களுக்கு வேம்பனின் இக்கட்டான நிலைமை கண்டு ஒரே சிரிப்பாக இருந்தது.

பின்னர் பூதம் ஒரு குளவியாக மாறி வேம்பனின் முகத்துக்கு நேரே சென்றது அவன் தலையைச் சுற்றி வலம் வந்து நறுக்நறுக் என்று கொட்டியது.

குளவி கொட்டியதும் வேம்பன் துடிதுடித்துப் போனான்.

"அய்யோ..வலிதாங்க முடிய வில்லையே..." என்று கதறினான்." என்னவாயிற்று?" என்று அருகிலிருந்த மன்னன் விசாரித்தான். "கு.. குளவி ..கருங்குளவி கொட்டிவிட்டது. வலிதாங்க முடியவில்லை.."

"எங்கே குளவி?" என்று சுற்றும் முற்றும் பார்த்தான். அதோ இதோ என்று கையைக் காண்பித்தான். வேம்பன். குளவி அவன் கண்களுக்கு மட்டுமே தெரிந்தது. ஆனால் மற்றவர் கண்களுக்குக் தெரியவில்லை.

இளவரசனுக்குப் பைத்தியம் பிடித்துவிட்டது. என்று அனைவரும் கிசுகிசுத்துக் கொண்டார்கள்.

சுக்கிரபுர மன்னனுக்கு ஒரே கவலையாகி விட்டது.

"திருமணத்தைக் தள்ளி வைக்கலாமா?" என்று அரண்மனை குருவிடம் கேட்டார்.

அப்போது குளவி உருவத்திலிருந்து பூதம் ஒரு வயதான மனிதர் போல உருமாறியது கொசு உருவத்திலிருந்து குணசீலனையும் இளவரசர் தோற்றத்திற்கு வரவழைத்தது.

அரசனிடம் சென்று நடந்த உண்மைகளை ஒன்று விடாமல் சொன்னது வேம்பனின் துரோகச் செயலைக் கேட்ட அரசன் முகம் சிவந்தான். உடனே அவன் வேம்பனுக்கு மரணதண்டணை அளிக்கும்படி கட்டளையிட்டான்.

உண்மையான இளவரசனாகிய குணசீலனுக்கு அதே மணமேடையில் தன் மகள் யாமினியைத் திருமணம் செய்து வைத்தான்.

திருமணக் கோலத்தில் குணசீலனையும் யாமினியையும் கண்ட பூதம் மனநிறைவுடன் அவ்விடத்தை விட்டு மறைந்தது.

"பொய்யும் பித்தலாட்டமும் என்றுமே நிலைப்பதில்லை. அவை ஒருநாள் அம்பலத்திற்கு வந்தே தீரும். 'ஆகவே நம் வாழ்நாளில் மனசாட்சிக்குக் கட்டுப்பட்டு நேர்மையாளர்களாய் வாழ்வோம்."

# சா/த பரீட்சை எழுதிய மாணவர்களுக்கு சிறந்த வழிகாட்டல்களை வழங்கவேண்டும்

க.பொ.த. சாதாரண தரப் பரீட்சை முடிவுற்றுள்ள நிலையில் அம்மாணவர்களுக் கான சிறந்த வழிகாட்டல்களை வழங்கி அவர்களது நேரத்தை பயனுள்ள முறையில் பயன்படுத்த வைப்பது பெற்றோர்களதும், ஆசிரியர்களதும் துறை சார்ந்தோரதும் கடமையாகும் என அகில இலங்கை ஜம்இய்யத்துல் உலமா பொதுச் செயலாளர் அஷ் - ஷைக் எம்.எச்.அஹ்மத்முபாரக் தெரிவித்துள்ளார்.

இக்காலம் மாணவர்கள் தமது கல்வி மற்றும் ஏனைய துறைசார்ந்த தீர்மானங்களை மேற்கொள்ளும் காலப்பிரிவாகும் அவர்களது ஆர்வம், திறமை என்பவற்றிற்கு ஏற்ப சிறந்த முறையில் தீர்மானங்களை மேற்கொள்வதற்கான வழிகாட்டல்கள் கட்டாயம் வழங்கப்படவேண்டும்.

உயர்தரப் பரீட்சைக்கு தகுதி பெறும் மாணவர்களுக்கு அவர்களது துறையை சரியாக தெரிவு செய்து, தொடர்ந்து கற்பதற்கான வழிகாட்டல்களும் ஏனையோருக்கு தகவல் தொழிலநுட்பம் போன்ற துறைகளில் ஈடுபடுவதற்கான வழிகாட்டல்களும் வழங்கப்பட வேண்டும்.

வெறுமனே வழிகாட்டல்களோடு நின்று விடாது மாணவர்கள் தெரிவு செய்யும் துறையில் தொடர்ந்து செல்வதற்கு நிதி மற்றும் ஏனைய உதவிகளை செய்து கொடுக்கவும் எமது சமூகம் முன்வரவேண்டும்.

இன்று பல மாணவர்கள் க.பொ.த. சாதாரண தரப் பரீட்சையோடு தமது கல்வியை நிறுத்திவிட்டு சிறு தொழில்களில் ஈடுபடும் அபாயகரமான நிலை பரவலாக காணப்படுகின்றது.

அதேபோன்று மாணவர்கள் தாம் எந்தத் துறையை தேர்ந்தெடுப்பது என்ற தெளிவற்ற நிலை காணப்படுகின்றது. இவை முற்றாக நீக்கப்பட்டு சிறந்தவொரு சமூகம் உருவாக பெற்றோர்கள், ஆசிரியர்கள், ஊர் முக்கியஸ்தர்கள், மஸ்ஜித் நிர்வாகிகள் எனப் பலதரப்பட்டவர்களும் இணைந்து திட்டமிட்டு செயற்பட வேண்டுமெனவும் ஜம்இய்யாவின் பிரதேசக் கிளைகள் மேற்படி விடயத்தை கவனத்திற்கொண்டு மக்களுக்கு வழிகாட்டவேண்டுமெனவும் அகில இலங்கை ஜம்இய்யத்துல் உலமா கேட்டுக்கொள்கிறது என தெரிவித்துள்ளார்.

## பண்பாட்டுப் பெருவிழா

கோப்பாய் பிரதேச செயலகமும் கோப்பாய் பிரதேச பண்பாட்டுப் பேரவையும் இணைந்து முன்னெடுக்கவுள்ள கலை பண்பாட்டு விழா எதிர்வரும் திங்கட்கிழமை பிற்பகல் 2 மணிக்கு ஆவரங்கால் சிவ சக்தி மண்டபத்தில் கவிஞர் இ.முருகையன் பெயரால் சூட்டபபட்ட அரங்கில் இடம்பெறவுள்ளது.

பிரதேச செயலரும் பேரவைத் தலைவருமாகிய ம.பிரதீபன் தலைமையில் இடம்பெறவுள்ள இந்நிகழ்வில் யாழ். அரச அதிபர் சுந்தரம் அருமைநாயகம் பிரதம விருந்தினராகக் கலந்து சிறப்பிக்கவுள்ளார்.

இந்நிகழ்வில் வலிகாமம் கிழக்குப் பிரதேசத்தைச் சார்ந்த வாழும் கலைஞர்கள் என்ற வகையில் 60 இற்கும் மேற்பட்டவர்களுடைய விபரங்கள் தொகுக்கப்பட்டு கலைஞர் மஞ்சரி என்ற நூல் வெளியிட்டு வைக்கப்படவுள்ளது. (48)

## சனாதனி ஆன்மீக சஞ்சிகை வெளிவந்துள்ளது நீர்வேலியில்



சனாதனி என்ற பெயரில் ஆன்மீகச் சஞ்சிகை ஒன்று நீர்வேலியில் இருந்து வெளிவரத் தொடங்கியிருக்கிறது. நீர்வை தி.மயூரகிரி சர்மாவை ஆசிரியராகக் கொண்டு சனாதன சேவா பீடத்தினரால் இது வெளியீடு செய்யப்படுகின்றது. காலாண்டிதழாக மலரத் தொடங்கியிருக்கும் இச்சஞ்சிகையின் முதலாவது இதழ் ஐயப்பன் வழிபாடு குறித்த சிறப்பிதழாக வெளிவந்துள்ளது. இதன் வெளியீட்டு நிகழ்வு கடந்த சனிக்கிழமை நீர்வேலி செல்லக்கதிர்காம தேவஸ்தானத்தில் இடம்பெற்றது. நீர்வை மணி கு.தியாகராசக் குருக்கள் சஞ்சிகையை வெளியிட்டு வைத்தார். சஞ்சிகையைப் பெறுவதற்கு தி.மயூரகிரி சர்மா, அரசகேசரிப் பிள்ளையார் கோவிலடி நீர்வேலி என்ற விலாசத்தில் தொடர்பு கொள்ளலாம். (90)

## பாடசாலைகளுக்கிடையிலான மாகாணமட்ட தமிழ்த்தின நிகழ்வுகள்



வடக்கு மாகாணப் பாட சாலைகளுக்கிடையிலான மாகாண நிலை தமிழ்த்தினப் போட்டிகள் நேற்று முன்தினம் சாவகச்சேரி இந்துக் கல்லூரி அருணாசலம் மண்டபத்தில் வடமாகாண கல்விப் பணிப்பாளர் ஆ.இராஜேந்திரன் தலைமையில் இடம்பெற்றன.

நிகழ்வுக்கு பிரதம விருந்தினராக வடக்கு மாகாண கல்வி அமைச்சின் செயலாளர். சி.சத்தியசீலன் சிறப்பு விருந்தினர்களாக ஓய்வுநிலை மாகாணக் கல்விப் பணிப்பாளர் வை.செல்வராசா, ஓய்வுநிலை மாகாண கல்விப் பணிப்பாளரும் ஜீரி.இசற் நிறுவன தொழில்நுட்ப ஆலோசகருமான வீ.இராசையா ஆகியோரும், கௌரவ விருந்தினர்களாக மாகாண மேலதிக கல்விப் பணிப்பாளர்களும், வலயக் கல்விப் பணிப்பாளர்களும் கலந்துகொண்டனர்.

இந்த நிகழ்வில் தமிழ்த்தின தேசிய நிலைப் போட்டிகளில் பங்குபற்றி வெற்றியீட்டிய மாணவர்களின் கலை நிகழ்வுகளும் இடம்பெற்றன. அத்துடன் மாகாணக் கல்வித் திணைக்களத்தின் கவின் தமிழ் நூல் வெளியீடும் இடம் பெற்றது. (48)

## பதிவிறக்கப் பெட்டகம்

கட்டப்பொம்மு (வீரபாண்டிய கட்டப் பொம்மன்) தெலுங்கர். அவரை தமிழ்மக்கள் புறக்கணிக்க வேண்டும் என்று ஒருவர் முகநூலில் பதிவு எழுதியுள்ளார். ஒரு மணி நேரத்துக்கு முன்பு பகிரப்பட்டது என்று டைம் லைனில் காட்டுகிறது. ஐந்து நிமிடங்களுக்கு முன்பு ஒருவர் அனுஷ்கா புகைப் படத்தை பகிர்ந்துள்ளார். முன்பு சொன்ன தமிழ் தேசியப் போராளி அனுஷ்கா போட்டோவுக்குலைக் போட்டுள்ளார்.

ஒரு மணிநேரத்தில் தமிழ் தேசியம் பயணம் செல்லும் வேகத்தைக் கண்டு பிரமித்து நிற்கிறேன்.

– விநாயக முருகன

இத்தனை அவலங்களுக்கும் இவ்வளவு துயரங்களுககும் காரணம் என்ன? ஏன் இவ்வளவு உயிர்களைப் பலி கொடுத்தோம்? ஏன் ஊருலகில் எந்த நாடும் கேட்காதிருநதார்கள்? நாங்கள் எங்கே தவறுசெய்தோம் என்பதைத் திரும்பிப் பார்ப்பதற்குக்கூட எமக்கு அவகாசம் கொடுக்கவில்லை.

ஹிட்லர், சுபாஸ்சந்திரபோஸ் வரிசையில் பிரபாகரனினை மரணத்தையும் கேள்விக் குறியாக்கிவிட்டு மீண்டும் பழி தீர்க்கும் அரசியல். பழையபடி மேடைபோட்டு வீரவசனம் பேசி வாக்குக் கறப்பதிலேயே முனைப்பாயிருக்கிறோம்.

– திருமாவளவன்

வெறுப்பரசியல் செய்வதைப்போல எளியது ஏதுமில்லை. எந்தத் தரப்பையும் எடுத்துக்கொண்டு புள்ளி விவரங்களை அள்ளிவைத்து மணிக்கணக்காக வாதிடலாம். வெறுப்பு அளிககும் வேகம் மட்டும் இருந்தால் போதும். தமிழர்நாகரீகம என்கிறோம். பண்பாடு என்கிறோம். நாம் ஒவ்வொரு கணமும் வெளிப்படுத்திக் கொண்டிருக்கும இந்த வெறுப்பின் கீழ்மை நம் பண்பாட்டின் மாபெரும் இழுக்குகளில் ஒன்று என்பதை நாம் உணரவேண்டும். நவீன மனிதன் ஒருநிலை யிலும் ஒரு மக்கள்திரளை ஒட்டுமொத்தமாக வெறுக்க மாட்டான். ஒருவரையும் அவர்களின் அடையாளம் காரண மாக வெறுக்கமாட்டான். கீழ்த்தர இனவெறி, சாதிவெறி தான் இது. இதையே முற்போக்கு என்று எண்ணிக்கொள்ள நம்மை பயிற்றுவித்திருக்கிறார்கள். இக்கீழ்மையை விட்டு வெளியேறாத வரை நாம் நாகரீக மனிதர்களே அல்ல.

– ஜெயமோகன்

சாதி, மதம், மொழி, இனம் மீதான விருப்பு, வெறுப்பு உரையாடல்கள், சார்புகள், காழ்ப்புகள், வெறுப்பு. வன்மங்கள், சுயபெருமைகள், உயர்வு, தாழ்வு மனப்பான்மைகள் ஆகியவற்றைக் கவனிக்கும்போது அவ்வாறான உரையாடல்களில ஈடுபட்டுக் கொண்டிருப்பவர்களிடம் உத்தேசமாக நான் கேட்க விரும்புவது இதுதான்.

இறக்கும் தறுவாயில்தான் உங்களின் பிறப்பு குறித்த ரகசியம் உங்களுக்கு அறிய வருகிறது என்று வைத்துக் கொள்வோம். நீங்கள் தத்து கொடுக்கப்பட்ட குழந்தையாக இருக்கலாம், கவனக்குறைவாக மருத்துவமனையில் கைமாற்றி வைக்கப்பட்ட குழந்தையாக இருக்கலாம். நீஙகள் தாய், தந்தை என்று ஆயுள் பூராவும் நம்பிக் கொண்டிருந்தவரகள், உண்மையில் அவர்களாக இல்லாம லிருக்கலாம்.

இப்படி பல நிச்சயமின்மைகளின் நடுவில் இயங்கிக் கொண்டிருக்கும் நீங்கள், உங்கள் மீது திணிக்கப்பட்ட, கற்றுத்தரப்பட்ட கற்பிதங்களுக்காக ஆயுள் பூராவும் எவரையாவது வெறுத்துக்கொண்டேயிருக்கிறீர்கள், நிந்தித்துககொண்டேயிருக்கிறீர்கள், வன்மத்துடன் உரையாடிக்கொணடேயிருக்கிறீர்கள், கொலைசெய்யவும் தயங்காதிருக்கிறீர்கள்,

நீங்கள் நம்பும் கற்பிதங்களை தொடர்ந்து நிறுவவும், காப்பாற்றிக் கொள்ளவும் உங்கள் எதிரணியினரின் நம்பிக்கைகளை குலைக்கவும் அவதூறு செய்யவும் எந்தவொரு நிலைக்கும் செல்கிறீர்கள்...


இப்படி யாரையெல்லாம் எதிர்த்துக்கொண்டும் வெறுததுக் கொண்டும் இருந்தீர்களோ... அந்த இனக்குழுவில் தான் நீங்கள் பிறந்தவர் என்கிற உண்மை உங்களின் கடைசிக்காலத்தில்தான் தெரியவருவதாக இருந்தால் உங்களின் மனநிலை என்னவாக இருக்கும், அந்தக் கணம் எப்படியொரு மலையளவிற்கான அபத்தத்தைக் கொண்டிருக்கும்?


எந்தவொரு குழந்தையும் பரிசுத்தமான ஆன்மாவாக, ஆடையற்ற நிர்வாணத்தோடுதான் பிறக்கிறது. பிறக்கும் போதே பூணூல் அணிந்த, சுன்னத் செய்யப்பட்ட, சிலுவை யணிந்த, காவி கட்டிய குழந்தை பிறந்ததாக எந்தவொரு வரலாற்று உண்மையோ சம்பவமோ இது வரை நிகழவேயில்லை. நீங்கள் நம்பிக் கொண்டிருக்கும மதஉணர்வும், சாதியுணர்வும் அதன் மீதான பெருமையும் புனிதமும் பெருமிதமும் மிக மிக செயற்கையானவை. மனிதனின் சௌகரியங்களுக்காக உருவானவை.

கண்ணுக்குத் தெரியாத இவ்வகை கற்பிதங்களுக்காக கண்ணெதிரே ரத்தமும் சதையுமாக அமர்ந்து இருக்கும் ஒரு சக மனிதனை வெறுப்பதோ, அவதூறு செய்வதோ, தாழ்வாக நோக்குவதோ, கொல்ல நினைப்பதோ எத்தனை பெரிய மூடத்தனம்?

– சுரேஷ் கண்ணன

# கடலுடன் கலக்கும் இரணைமடு





யாழ்ப்பாண குடாநாட்டு மக்களின் குடிநீர் தேவைக்கு இரணைமடுவிலிருந்து நீரை வழங்கமாட்டோமென அடம்பிடிக்கும் சிறிதரன் எம்.பி மற்றும் வடமாகாண அமைச்சர் ஐங்கரநேசன் நேற்யை தினம் இரணைமடுவிலிருந்து மேலதிக நீரை வெளியேற்றும் வகையில் வான் கதவுகளை திறந்து விடுவதனைக் காணலாம்.

## இரணைஇலுப்பைக்குளம் வீதியை திருத்தித்தருமாறு மக்கள் கோரிக்கை



(மன்னார்)

மன்னார் மாவட்டத்தின் மடு பிரதேச செயலக பிரிவில் அமைந்துள்ள இரணை இலுப்பைக்குளம் கிராமத்திற்கு செல்லும் பிரதான வீதி சேதமடைந்துள்ளதால் தாம் பெரும் அசௌகரியங்களுக்கு உள்ளாகியுள்ளதாக அப்பகுதி மக்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.


வவுனியா பூவரசன்குளத்திலிருந்து மன்னார் மாவட்டத்தின் இரணைஇலுப்பைக்குளம் ஊடாக முல்லைத்தீவின் மல்லாவி வரை ஏ9 வீதிக்கு சமாந்தரமாக இப்பிரதான வீதி அமைந்துள்ளது.

இவ்வீதி பல ஆண்டு காலமாக திருத்தம் செய்யப்படாத நிலையில் காணப்படுவதாகவும் மக்கள் கூறியுள்ளனர்.

சுமார் 26 கிராமங்களைச் சேர்ந்த மக்கள் இப்பாதையை உபயோகிக்கின்றனர். இந்நிலையில் அவர்களின் நன்மை கருதி இலங்கை போக்குவரத்து சபையினால் பேருந்து சேவைகள் இடம்பெற்ற போதிலும் தற்போது வீதி சீரின்மையால் அவை நிறுத்தப்பட்டுள்ளன.

இதனால் மழை காலங்களில் சேறும் சகதியுமாக விளங்கும் வீதியின் வழியே பயணிக்கும் மக்கள் பெரும் இன்னல்களுக்கு ஆளாகியுள்ளனர். அத்துடன், இவ்வீதியில் உள்ள பல பிரதான பாலங்களும் திருத்தப்படாத நிலையில் காணப்படுவதாகவும் மக்கள் தெரிவித்துள்ளனர்.

## வடமராட்சிப் பகுதியில் மீன்பிடித் தொழில் பாதிப்பு



வடகீழ் பருவப்பெயர்ச்சி காலநிலை (North east monsoon) காரணமாகவும் வளிமண்டலத்தில் ஏற்பட்டுள்ள குழப்பம் காரணமாகவும் பலத்த காற்று மற்றும் இதனால் உண்டான கடற்கொந்தளிப்பு காரணாமாக யாழ் குடாநாட்டின் தொண்டைமானாறு தொடக்கம் பருத்தித்துறை வரையான பாக்கு நீரிணையின் கடற்பகுதியில் மீண்பிடித் தொழில கடந்த சில நாட்களாக பெரிதும் பாதிப்படைந்துள்ளது.

யாழின் வடமராட்சியை அண்டிய பாக்கு நீரிணையில் காற்றின் வேகம் மணிக்கு சுமார் 20 கடல் மைல் வேகத்தில் வீசுவதுடன், கடலில் அலை சுமார் 3 மீட்டர் அளவு உயரத்துக்கு மேல் ஏற்படுவதையும் அவதானிக்கக் கூடியதாகவுள்ளது

வழமையாக மீன் பிடித் தொழிலில் ஈடுபடும் நூற்றுக் கணக்கான படகுகள் மற்றும் வள்ளங்களில் கடந்த சில நாட்களில் ஒரு சில படகுகளே கடற் தொழிலில் ஈடுபட்டன. இதனால் கடந்த சில நாட்களாக கடல் உணவுகளின் விலைகளும் அ கரித்துள்ளன.

## மகரஜோதிப் பெருவிழா

காரைநகர் வியாவில் ஐயனார் தேவஸ்தான மகரஜோதிப் பெருவிழா எதிர்வரும் 25 ஆம் திகதி வியாழக்கிழமை நடைபெறவுள்ளது.

அன்றைய தினம் காலை 6 மணிக்கு ஐயப்ப சுவாமிக்கு நடைபெறும் விசேட அபிஷேகத்தை தொடர்ந்து காலை 8 மணிக்கு மகரஜோதி 18 ஆம் படிப்பூசையும் முற்பகல் 10 மணிக்கு சரணகோஷம் பஜனையும் இடம்பெறும்.

சாவகச்சேரி நாதஸ்வர மேதை பஞ்சாபிகேசனின் பேரப்பிள்ளைகளான விக்னேஸ்வரன் சித்தார்த்தன் விக்னேஸ்வரன் பிரத்தன் ஆகியோரது விசேட தவில் நாதஸ்வர கச்சேரியும் இடம்பெறும் (10)

## ஜெனிவாவில் எழுந்துள்ள நெருக்கடியை மைத்திரிபாலவே தீர்த்து வைப்பார்

### கூறுகிறார் விஜயதாச ராஜபக்ஷ



(கொழும்பு)

இலங்கைக்கு ஜெனிவாவில் எழுந்துள்ள நெருக்கடியை, எதிரணியின் பொதுவேட்பாளர் மைத்திரிபால சிறிசேன மூலம் மட்டுமே தீர்க்க முடியும் என்று ஐதேக நாடாளுமன்ற உறுப்பினர் விஜேதாச ராஜபக்ச தெரிவித்துள்ளார்.

எதிரணியின் பொதுவேட்பாளர் மைத்திரிபால சிறிசேனவின் வெற்றி, ஜெனிவாவில் ஐ.நா மனித உரிமைகள் பேரவையில் எழுப்பப்பட்டுள்ள பொறுப்புக்கூறல் மற்றும் போர்க் குற்றச்சாட்டுகள் தொடர்பான பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு உதவும்.

மகிந்த ராஜபக்ச மூன்றாவது தடவையும் அதிபராகத் தெரிவு செய்யப்படுவது இலங்கையின் நலன்களுக்கு விரோதமாக அமையும்.

தேர்தலில் ராஜபக்ச மீண்டும் வெற்றி பெற்றால், நாடு அதன் விளைவுகளை எதிர்கொள்ள வேண்டியிருக்கும்.

மகிந்தவின் ஆட்சிக்கு முடிவு கட்டப்படாமல் போனால், இலங்கை பொருளாதாரத் தடைகளை எதிர்கொள்ளும் நிலை ஏற்படலாம்.

இலங்கைக்கு எதிராகச் செயற்படும் அனைத்துலகச் சக்திகளை தோற்கடிக்க வேண்டுமாயின், புதிய அரசாங் கத்தினால் மட்டுமே அது முடியும்.

அனைத்துலக குற்றவியல் நீதிமன்றத்துக்கு ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச இழுத்துச் செல்லப்படுவதில் இருந்து பாதுகாப்பு அளிக்கும்.

போர் முடிந்த பின்னர், ஜனாதிபதியும் வெளிவிவகார அமைச்சரும தான், பொறுப்புக்கூறல் குறித்து விசாரிக்க ஐ.நாவை அழைத்தனர் என்பதை அவர்கள் இப்போது மறந்து விட்டனர். என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

## வழமைபோல புதுவருட தினமன்று வல்வெட்டித்துறையில் கலைவிழா

(பருத்தித்துறை)

வல்வெட்டித்துறை கலை கலாச்சார இலக்கிய மன்றத்தின் இலக்கிய பெருவிழாவிற்கான ஏற்பாடுகள் தற்பொழுது நடைபெற்று வருகின்றன. கலைவிழா வழமைபோல் எதிர்வரும் புதுவருட தினத்தன்று அதாவது 1 ஆம் திகதி இடம்பெறவுள்ளது.

இதுவரை வல்வெட்டித்துறை நெடியகாட்டு திருச்சிற்றம்பலப் பிள்ளையார் ஆலய முன்றிலில் இடம்பெற்று வந்த விழா, இம்முறை வல்வை அம்மன், சிவன் கோயில்களின் பொது வீதியில் இடம்பெறவுள்ளது.

நெடியகாட்டு திருச்சிற்றம் பலப் பிள்ளையார் கோயிலில் குறித்த தினத்தன்று வீதி உலா இடம்பெறவுள்ளமையே இதற்கு காரணம் எனத் தெரிய வருகின்றது..

வல்வெட்டித்துறை கலை கலாசார இலக்கிய மன்றத்தினால் பொதுமக்களிடமிருந்து திரட்டப்படும் நிதியினைக் கொண்டு கடந்த 4 வருடங்களாக தொடர்ந்து சிறப்பாக இலக்கிய விழா நடாத்தப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

## சவுதிக்கு பணிப்பெண்ணாகச் சென்ற இலங்கையர் தற்கொலை?.

(கொழும்பு)

சவுதி அரேபியாவுக்கு பணிப்பெண்ணாகச் சென்ற இலங்கையர் ஒருவர் தற்கொலை செய்து கொண்டுள்ளார்.


அவர் பணிபுரியும் வீட்டின் குளியலறையில் வைத்து தற்கொலை செய்து கொண்டுள்ளதாக அந்த நாட்டுப் பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர்.

இந்தநிலையில் வீட்டு உரிமையாளர்கள் வழங்கிய தகவலின் அடிப்படையில், அந்த நாட்டு பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருவதாக சவுதி ஊடகச் செய்திகள் தெரிவிக்கின்றன.


எதுஎவ்வாறு இருப்பினும் இவர் எவ்வாறு தற்கொலை செய்து கொண்டார் என்பது குறித்த சரியான தகவல் வெளியாக வில்லை.

பிழையான படத்தின் கீழ் கோடிடுக


25) A B C D



26) A B C D



27) A B C D




28)




(I) (II) (III)

29)



(I) (II) (III)

30)



(I) AC (II) BC (III) BD

### நேற்று பிரசுரமாகிய வினாக்களின் விடைகள்

(01) 1. 3 2. 1 3. 3 4. 2 5. 2 6. 3 7. 1 8. 1 9. 3 10.2 11. 3 12. 2 13. 2
14. 3 15. 1 16. 2 17. 2 18. 1 19. 2 20. 3 (02). 1. 19.00 2. 58.00 3. 65.00 (03). 4. 1027
5. 826 6. 1171 (04). 7. 18 8. 24 9. 27 10. 28 (05). 11. 3 1 12. $\frac{2}{6}$ $\frac{4}{6}$ 13. $\frac{4}{8}$ $\frac{4}{8}$
(06). 14. 15 15. 7 16. 189,191 18. 3000g 19. 907 20. 423 21. 42 22. 7 23. 17
24. 6 25. 22 26.1 27. 2 28. 1 29. 1 30. 3 31. 2 32. 2 33. 1 34. 1

**பயிற்சி வினாக்களின் விடைகள் நாளை வெளியாகும்**



## தரம் - 5 புலமைப் பரிசில் பரீட்சை முன்னோடி- 2015

பகுதி - I
45 நிமிடம்

# கல்வி முரசு




புள்ளிக்கோட்டில் வரும் விடையின் கீழ் கோடிடுக

01) 5675 → 4564 → 3453 → -------
(I) 2464 (II) 2542 (III 2342


02) 3972 → 4083 → 5194 → -------
(I) 6205 (II) 6215 (III 6305

03)




(I) 4 (II) 5 (III 6

04)




(I) 1 (II) 2 (III 3

05)




(I) 50 (II) 52 (III 54

06)




(I) 24 (II) 28 (III 32

07)




(I) 19 (II) 38 (III 16

08)



(I) 13 (II) 11 (III 12

09)




(I) 2,3 (II) 3,4 (III 7,2

முதல் மூன்று படத்துடனும் சேர்ந்து வரககூடிய படம் எது

10)

(I) (II) (III)


11)

(I) (II) (III)


நிறம் தீட்டப்பட்டது முழுவதில் என்ன பங்கு?

12)


(I) $\frac{1}{4}$ (II) $\frac{1}{5}$ (III) $\frac{1}{8}$

கீழே தரப்பட்ட கடதாசி புள்ளிக்கோடு வழியே மடித்து துளையிட்டதை படம் காட்டுகிறது. இதனை பிரித்தால் விடையின் கீழ் கோடிடுக


13)

(I) (II) (III)

14)

(I) (II) (III)

ஒத்த வட்டத்தின் கீழ் கோடிடுக

15)



(i) A, C B, D (ii) A, D B, C (iii) A, D C, D

16)



(i) A, B C, D (ii) B, D A, C (iii) A, D B, C




இதில் எத்தனை சதுரம் உண்டு.


17)

(.........................................)


ஒன்றன் மீது ஒன்று வைக்கும் போது கிடைக்கும் அமைப்பு யாது?

18)

(I) (II) (III)

19)

(I) (II) (III)

ஆரம்பத்திலுள்ள படத்திற்கு பொருத்தமான படம் எது


20)

(I) (II) (III)


21)

(I) (II) (III)

ஒழுங்குபடுத்தினால் வரும் சரியான விடையின் கீழ் கோடிடுக

22)
A B C D E

(I) BDECA (II) BADEC (III) BDCAE

23)
A B C D E

(I) ECABD (II) ECDAB III) EABCD

24)
A B C D E

(I) CEDAB (II) CEADB III) CDEAB



கடந்த சனிக்கிழமை அகில இலங்கை யாழ்ப்பாணம் உரும்பிராய் தெற்கு சாட்டுபத்தூர் சபரிபீடம் அருள்வளர் சிவதர்மசாஸ்த்தா தேவஸ்த்தானம். ஊரெழு பர்வதவர்த்தனி அம்மன் கோவில் தீர்த்தக்கேணியில் உரும்பிராய் ஐயப்பன் தீர்த்த உற்சவம் மிகவும் சிறப்பாக நடைபெற்றது.

# அரசில் இணையவுள்ளார் ஹரின் கட்சிமாறியவர் கூறுகிறார்

(கொழும்பு)

ஊவா மாகாண எதிர்க்கட்சித் தலைவர் ஹரின் பெர்னாண்டோ அடுத்த வாரம் ஜனாதிபதிக்கு ஆதரவு தெரிவித்து அரசாங்கத்தில் இணைய உள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது.

இந்த தகவலை ஐக்கிய தேசியக் கட்சியில் இருந்து அரசாங்கத்தில் இணைந்து கொணட மாகாண சபை உறுப்பினர் திஸ்ஸ குட்டியாராச்சி தெரிவித்துள்ளார்.

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் ஜனாதிபதி வேட்பாளர் மகிந்த ராஜபக்ஷவின் வெற்றியை உறுதிப்படுத்தும் நோக்கில் மொனராகலை பிரதேச சபை மைதானத்தில் நடைபெற்ற பொதுக் கூட்டத்தில் உரையாற்றும் போதே அவர் இதனை கூறியுள்ளார்.

ஜனாதிபதி மகிந்த ராஜபகஷவுக்கு ஆதரவு வழங்குவது குறித்து ஹரின் பெர்னாண்டோவுடன் பேச்சுவார்த்தை நடத்தியதாகவும் அது வெற்றியளித்துள்ளது எனவும் அவர் கூறியுள்ளார்.

நாட்டில் தற்போதுள்ள அரசியல் பயணத்தின்படி மகிந்த ராஜபக்ஷவின் கரங்களை பலப்படுத்துவதே செய்ய வேண்டியது எனவும் பின்னர் தான் அரசாங்கத்தில் இணைந்து கொள்வதாக ஹரின் பெர்னாண்டோ தன்னிடம் கூறியதாகவும் குட்டியாராச்சி குறிப்பிட்டுள்ளார்.

இதனடிப்படையில் முதலில் தன்னை அரசாங்கத்தில் இணையுமாறு ஹரின் கூறியதாகவும் குட்டியாராச்சி கூறியுள்ளார்.

# அரசு பக்கம் தாவுவாரா?

(கொழும்பு)

ஜனாதிபதி தேர்தல் அறிவிக்கப்பட்ட நாளிலிருந்து கட்சித் தாவல்கள் மும்முரமாக இடம் பெற்று வருகின்றன.

ஆளுந்தரப்பிலிருந்து எதிர்த்தரப்புக்கும், எதிர்த்தரப்பிலிருந்து ஆளுந்தரப்புக்கும் அரசியல் வாதிகள் கட்சி தாவி வருவதை கடந்த சில நாட்களாக காணக்கூடியதாக உள்ளது.

இந்நிலையில் ஜனநாயகக் கட்சியின் தலைவர் சரத் பொன்சேகா , எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் ஆளும் கட்சிக்கு தனது ஆதரவினை தெரிவிக்கவுள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

இது தொடர்பில் ஊடகங்கள் சிலவற்றில் வெளியாகியுள்ள செய்தி தொடர்பில் ஜனநாயகக் கட்சியின் தேசிய அமைப்பாளர் கயான் விதானகே தெரிவிக்கையில் எச்சந்தர்ப்பத்திலும் பொன்சேகா அரசுடன் இணையப் போவதில்லை யென தெரிவித்தார்.

மேலும் எக்காலத்திலும் பணத்திற்கு விலைபோகமாட்டோம் எனவும் அவர் சுட்டிக் காட்டினார்.

# நிபுணர்களின் ஆலோசனை பெறப்படாத மைத்திரியின் தேர்தல் விஞ்ஞாபனம்

## உதய கம்பன்பில தெரிவிப்பு

(கொழும்பு)

**பொது எதிரணி வேட்பாளர் மைத்திரிபால சிறிசேனவின் தேர்தல் விஞ்ஞாபனம் பொருளாதாரம் மற்றும் நீதி தொடர்பான நிபுணர்களின் ஆலோசனைகளைக் கூடப்பெற்றுக் கொள்ளாமல் தயாரிக்கப்பட்டிருப்பதாக மேல்மாகாணசபை உறுப்பினர் உதய கம்மன்பில தெரிவித்தார்.**

மைத்திரிபாலவின் தேர்தல் விஞ்ஞாபனத்தின் 17 ஆவது பக்கத்தில் நிறைவேற்று அதிகாரம் முற்றாக ஒழிக்கப்படும் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. அதன் கீழ் அரசியலமைப்பில் கருத்துக் கணிப்பின் ஊடாக மாற்றப்படும் எந்தவொரு விடயத்திலும் கைவைக்கப்போவதில்லை யெனக் குறிப்பிடப்பட்டுள்ளது. இதன் ஊடாக நீதித்துறை சம்பந்தமானவர்களின் கருத்துக்கள் கூட பெறப்படவில்லையென் பது தெளிவாகத் தெரிகிறது.

அதுமட்டுமன்றி தனக்கு ஆதரவு வழங்கும் கட்சிகள் தமக்குப் பொருத்தமானதொன்றைத் தெரிவுசெய்யலாம் என்பதற்காக இவ்வாறு குறிப்பிடப்பட்டிருக்கலாம். இதன்மூலம் ஒவ்வொரு கட்சிக்கும் ஒவ்வொரு உத்தரவாதத்தை வழங்கியுள்ளார் என்பது தெளிவாகிறது என்றும் அவர் குறிப்பிட்டார்.

இலங்கை சுதந்திரக் கட்சியின் தலைமையகத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் இவ்வாறு கூறினார்.



கடந்த காலங்களில் ஆட்சி செய்த ஜனாதிபதிகளும் சரி, ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிட்ட வேட்பாளர்களும் சரி நாம் இதனைச் செய்துள்ளோம், இதனை எம்மால் செய்ய முடியும் எனவே எனக்கு வாக்களியுங்கள் என்றே கூறியுள்ளனர.

ஆனால் மைத்திரிபால சிறிசேன நடத்திய முதலாவது ஊடகவியலாளர் சந்திப்பில் தேசிய மருந்துக்கொள்கையை கொண்டுவர முடியாமல் போனது, மொரக்கஹாகந்த நீர்த்தேக்கத் திட்டத்தை செயற்படுத்த முடியாமல் போனது என தன்னால் முடியாமல் போனவற்றையே கூறினார். இவ் வாறு எதனையும் செய்ய முடியாத ஒருவரே தன்னை ஜனாதிபதியாக்குமாறு கூறுகிறார்.

எரிபொருள் இறக்குமதிக்கு அறவிடப்படும் வரியை நீக்குவதாக மைத்திரிபால சிறிசேனவின் தேர்தல் விஞ்ஞாபனத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. இது பொருளாதாரம் தொடர்பில் அவருக்கு சிறிதளவேனும் தெரியாது என்பதைப் புலப்படுத்தியுள்ளது. பொருளியல் தொடர்பில் அருச்சுவடி கூடத் தெரியாத வர்கள் தான் இவ்வாறான கருத்துக்களைத் தெரிவிப்பார்கள்.

இவ்வாறானதொரு நபரிடம் நாட்டைக் கையளிப்பது பொருத்தமானதா இல்லையா என்பதை மக்களே சிந்திக்க வேண்டும்.

இவருடைய தேர்தல் விஞ்ஞாபனத்தில் இனப்பிரச்சினை தொடர்பில் எதுவும் குறிப்பிடப்படவில்லை. அதே நேரம், தனக்கு ஆதரவு வழங்கும் கட்சிகளின் கோரிக்கைகள் குறித்து கவனம் செலுத்தப்படும் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. எனத் தெரிவித்தார்

# கிளிநொச்சி பொன்னகரில் வீடுகளுக்குள் புகுந்தது வெள்ளம்



(கிளிநொச்சி)

கிளிநொச்சி, கரைச்சி பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட பொன்னகர் கிராமத்தி லுள்ள 10 வீடுகளுக்குள் நேற்று அதிகாலை வெள்ளநீர் புகுந்துள்ளது.

கிளிநொச்சி மாவட்டத்தில் நேற்று அதிகாலை 5 மணி தொடக்கம் பலத்த மழை பெய்து வருகின்றது. இதனால், தாழ் நிலப்பகுதிகளில் வெள்ள நீர் தேங்கியுள்ளது.

பொன்னகர் பகுதியில் மக்கள் பாதிக்கப்பட்டதாக பிரதேச செயலகத்துக்கும் அனர்த்த முகாமைத்துவ பிரிவுக்கும் அறிவிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பாக உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ளவுள்ளதாக மாவட்டச் செயலாளர் ரூபவதி கேதீஸ்வரன் தெரிவித்தார்.

இதேவேளை, தொடர்ந்து மழை பெய்து வருகின்றமையால் இரணைமடுக்குளத்தின் 10 வான் கதவுகளையும் 8 அங்குலம் வரையில் திறந்துவிட்டுள்ளதாக கிளிநொச்சி மாவட்ட பிரதி நீர்ப்பாசன பொறியியலாளர் என்.சுதாகரன் தெரிவித்தார்.

# இராணுவ உதவியாளர்கள் வாக்களிப்பில் கண்காணிப்பு

(கொழும்பு)

இராணுவத்தினருக்கு உதவியாளர்களாக சேர்க்கப்பட்ட தமிழ் ஊழியர்கள் தபால் மூலமாக வாக்களிக்கும்போது சிவில் உத்தியோகத்தர்களே கண்காணிப்பாளர்களாக பணியாற்றுவர் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

எதிர்வரும் 8 ஆம் திகதி இடம்பெறும் ஜனாதிபதித் தேர்தலில் தபால் மூலம் வாக்களிக்கத் தகுதி பெற்றவர்களுக்கான வாக்களிப்பு இன்றும் நாளையும் இடம்பெறுகின்றன.

இம்முறை தபால் மூலம் வாக்களிப்பதற்கு கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களைச் சேர்ந்த சுமார் 4 ஆயிரம் இராணுவ உதவியாளர்கள் தகுதி பெற்றனர்.

ஆனால் இவர்களின் தபால் மூல வாக்களிப்பின் போது முறைகேடுகள் இடம்பெறலாம் எனக் குற்றஞ்சாட்டப்பட்டது. இதனையடுத்தே இவர்களுக்கான தேர்தல் கண்காணிப்பின் போது 10 சிவில் உத்தியோகத்தர்கள் தேர்தல் கண்காணிப்பில் ஈடுபடுவர் என அறிவிக்கப்பட்டது.

# ஜனாதிபதி, மைத்திரிக்கு கம்யூனிஸ்ட் கட்சி ஆதரவு

எதிர்வரும் ஜனாதிபதி தேர்தலில் சிறிலங்கா கம்யூனிஸ்ட் கட்சியின் பிரதான செயலாளர் சிரேஷ்ட அமைச்சர் டியூ குணசேகர, ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுக்கு ஆதரவளிப்பதற்கு தீர்மானித்துள்ளார்.

இதேவேளை, அக்கட்சியில் அங்கம் வகிக்கும் தொழிற்சங்கங்கள் யாவும் பொது எதிரணியின் ஜனாதிபதி வேட்பாளர் மைத்திரிபால சிறிசேனவுக்கு ஆதரவளிப்பதற்கு தீர்மானித்துள்ளன.

கொழும்பில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாட்டிலேயே அக்கட்சியின் தொழிற்சங்க தலைவர்கள் மேற்கண்டவாறு தெரிவித்தனர்.

# இலங்கையில் நீதியான தேர்தல் பிரான்ஸில் இன்று ஆர்ப்பாட்டம்

இலங்கையில் எதிர்வரும் ஜனவரி மாதம் நடைபெறும் ஜனாதிபதித் தேர்தலை நியாயமாகவும் அமைதியாகவும் ஜனநாயக ரீதியாகவும் நடத்துமாறு வலியுறுத்தி பிரான்ஸில் இன்று செவ்வாய்க்கிழமை ஆர்ப்பாட்டம் ஒன்று நடைபெறவுள்ளது.

பிரான்ஸ் வாழ் இலங்கையர்களின் ஒன்றியம் ஏற்பாடு செய்துள்ள இந்த ஆர்ப்பாட்டம் பாரிஸில் உள்ள இலங்கை தூதரகத்திற்கு எதிரில் நடைபெறவுள்ளது.

ஆர்ப்பாட்டத்தின் போது இலங்கையில் மேற்கொள்ளப்படும் தேர்தல் வன்முறைகளுக்கு எதிராக அரசாங்கத்திற்கு கடும் கண்டனம் வெளியிடப்பட உள்ளதாக ஏற்பாட்டாளர்கள் கூறியுள்ளனர்.

# வாழ்க வளமுடன்

சிறாரின் பெயர், :- ..............................

முகவரி :- ..............................


பிறந்த ஆண்டு :- ..............................

கூப்பன் ஐந்தும், புகைப்படமும்

..............................

பெற்றோர் கையொப்பம்

# பயங்கரவாத ஊக்குவிப்பு நாடாக வடகொரியாவை அறிவிக்க பரிசீலனை



பயங்கரவாதத்தை ஊக்குவிக்கும் நாடுகளுக்கான அமெரிக்காவின் பட்டியலில் வடகொரியாவை மீண்டும் சேர்ப்பது பற்றி தனது நிர்வாகம் மறுபரிசீலனை செய்துவருவதாக அமெரிக்க அதிபர் ஒபாமா தெரிவித்துள்ளார்.

அமெரிக்காவின் சோனி திரைப்பட தயாரிப்பு நிறுவனத்தின் மீது சைபர் தாக்குதல் நடத்தப்பட்டதன் பின்னணியில் வடகொரிய அரசு உள்ளது என அமெரிக்கா பழிசுமத்தியிருந்தது.

சோனி நிறுவனத்தின் மீது நடத்தப்பட்ட ஹேக்கிங், மிகப் பெரிய பாதிப்புகளை உண்டாக்கிய இணைய வழி அடாவடித்தனம் பற்றி என்.சி.என்.என் தொலைக் காட்சிக்கு அதிபர் ஒபாமா வழங்கிய பேட்டியில் தெரிவித்துள்ளார்.

இந்த மறுபரிசீலனை முடிந்தவுடன் உரிய பதில் நடவடிக்கை நடைமுறைப்படுத்தப்படும் என அவர் குறிப்பிட்டார்.

ஆனால் தம் மீதான குற்றச்சாட்டு ஆதாரமற்ற வீண்பழி என வடகொரியா கூறுகிறது.

பயங்கரவாதத்தை ஊக்குவிக்கும் நாடுகளின் பட்டியலில் இருபது ஆண்டு காலம் இருந்து வந்த வடகொரியாவை 2008 ஆம் ஆண்டில் அப்போதைய புஷ் நிர்வாகம் நீக்கியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# பெஷாவர் தாக்குதலின் எதிரொலி; 4 தீவிரவாதிகளுக்கு தூக்கு நிறைவேற்றம்




பாகிஸ்தானின் பெஷாவர் நகரில் இராணுவ பள்ளிக்குள் நுழைந்த தலபான் தீவிரவாதிகள் நடாத்திய கோர தாக்குதலின் எதிரொலியாக தூக்குத்தண்டனை விதிக்கப்பட்டிருந்த 4 தீவிரவாதிகளுக்கு நேற்றுமுன்தினம் தண்டனை நிறைவேற்றப்பட்டது.

தூக்கிலிடப்பட்ட நால்வரும், கடந்த 2003 ஆம் ஆண்டு பாகிஸ்தான் நாட்டின் முன்னாள் அதிபர் பர்வேஸ் முஷார்ப்பை கொல்ல முயன்ற சம்பவத்தில் குற்றம்சாட்டப்பட்டு தூக்குத்தண்டனை விதிக்கப்பட்டவர்களாவர்.

பெஷாவர் இராணுவப் பள்ளி தாக்குதலை அடுத்து, பாகிஸ்தானில் பயங்கரவாதிகளுக்கு எதிராக எப்போதும்போல கண் துடைப்புக்காக நடத்தப்படும் நடவடிக்கை போல் அல்லாமல் உணர்வு ரீதியான நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

உலகச் செய்திகள்

# முகப்புத்தகத்தில் சுவாரசியமான அப்ளிகேசன் அறிமுகம்



(நியூயோர்க்)

முகப்புத்தக மெசஞ்சரில் ஒரு புதிய அப்ளிகேசன் உருவாக்கப்பட்டுள்ளது. ஸ்டிக்கர்ட் (stickered) என கூறப்படும் இந்த அப்ளிகேசன் தற்போது கூகுல் ப்ளே ஸ்டோரில் பதிவிறக்கம் செய் யும் வகையில் உள்ளது.

விரைவில் அப்பிள் ஐ ஸ்டாரிலும் வர உள்ளது. இதன் மூலம் இப்போது நண்பர்களின் புகைப்படத்தில் அழகான கார்ட்டூன்கள் வைத்து அனுப்பலாம். இந்த அப்ளிகேசன் நண்பர்களின் முகத்தை சுவார சியமாக்கவும் தனது முகத்தை சுவாரசியமாக காட்டவும் பயன்படுத் தப்படுகிறது. இளைஞர்களிடையே இந்த அப்ளிகேசன் வெகு பிரபலமாகி வருகிறது.

# பாகிஸ்தானில் தீவிரவாதிகள் இராணுவத்தினரால் கைது



பாகிஸ்தானில் 300 இற்கும் மேற்பட்ட தீவிரவாதிகளை இராணுவத்தினர் கைது செய்துள்ளனர்.

பாகிஸ்தானில் பெஷாவர் இராணுவ பள்ளிக்கூடத்தில் 6 தலிபான் தீவிரவாதிகள் கடந்த 16 ஆம் திகதி புகுந்து, 132 குழந்தைகள் உட்பட 148 பேரை சுட்டுக்கொலை செய்தமை, உலகமெங்கும் பரபரப்பை ஏற்படுத்தியது.

இதனையடுத்து தீவிரவாதிகளை பிடிக்கும் நோக்கில் இராணுவத்தினர் நடாத்திய தீவிர தேடுதல் வேட்டையில் 300 இற்கும் மேற்பட்ட தீவிரவாதிகளை பிடிக்க அணி, அணியாக கைது செய்யப்பட்டுள்ளனர்.

இதுகுறித்து இராணுவ அதிகாரி கூறுகையில்,

தீவிரவாதிகளை தூக்கில் போட்டதை தொடர்ந்து, புதிதாக தீவிரவாத தாக்குதல் அச்சுறுத்தல்கள் வந்துள்ளன என்றும் அதை கருத்திற்கொண்டு, உளவுத்தகவல்களின் அடிப்படையில் தீவிரவாதிகள் தேடுதல் வேட்டை நடத்தப்படுகிறது எனவும் தெரிவித்துள்ளார்.

இந்நிலையில் கைது செய்யப்பட்டவர்களிடமிருந்து ஏராளமான ஆயுதங்கள், வெடிபெ[illegible]ட்கள் கைப்பற்றப்பட்டுள்ளன.

மேலும் கல்வி நிறுவனங்களை தீவிரவாதிகள் தாக்குதல் இலக்குகளாக கருதுவதாலும், அச்சுறுத்தல்கள் உள்ளதாலும் இஸ்லாமாபாத்தில் அனைத்து பள்ளிக்கூடங்களும், கல்லூரிகளும் மூடப்படுவதாக கூறப்படுகிறது.

# மூளை இறந்த கர்ப்பிணியின் வயிற்றில் உயிரோடுள்ள நான்கு மாதக் குழந்தை

## அயர்லாந்தில் சம்பவம்

அயர்லாந்தில், மூளைச்சாவு அடைந்த கர்ப்பிணியின் வயிற்றில் உள்ள சிசுவால், மிகப் பெரிய சட்டப் பிரச்சினை எழுந்துள்ளது. மூளையில் திடீரென்று ஏற்பட்ட இரத்த உறைவு காரணமாக, அந்த 20 வயது கர்ப்பிணி, டப்ளினில் உள்ள முல்லிங்கர் அரசு மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டார்.

அவருக்கு, உயிர் வாழும் கருவி மூலம், ஒக்சிஜன் செலுத்தப்பட்டது. ஆனாலும், அந்த கர்ப்பிணி மூளைச்சாவு அடைந்து விட்டார். அதேசமயம், அவரது வயிற்றில் வளர்ந்த 4 மாத குழந்தை உயிரோடு இருக்கிறது. இதனால், உயிர் வாழும் கருவியை மருத்துவர்கள் அகற்றாமல் உள்ளனர்.

ஆனால், அந்தக் கருவியை அகற்றி மகளின் உடலைத் தருமாறு, அவரது பெற்றோர்கள் கேட்கின்றனர். அயர்லாந்தில் கருக்கலைப்பு செய்வது சட்டப்படி குற்றம் என்று இருந்த நிலையில், கடந்த 2013 ஆம் ஆண்டு, அந்த சட்டத்தில் திருத்தம் செய்யப்பட்டது.

இதன்படி, தனது உயிருக்கு பாதிப்பு என ஒரு கர்ப்பிணி கருதும்பட்சத்தில் அது தற்கொலை முயற்சியாக இருந்தாலும் கருக்கலைப்பு செய்ய சட்ட திருத்தம் வகை செய்கிறது.

ஆனால், மருத்துவரீதியில் இறந்துவிட்ட ஒரு பெண்ணின் அனுமதியின்றி, அவரது பெற்றோரின் வற்புறுத்தலுக்காக, சுவாசக் கருவியை அகற்றினால், சிசுவின் உயிருக்கு பாதிப்பு ஏற்படும் என, மருத்துவர்கள் அஞ்சுகின்றனர்.

அப்படி நேர்ந்தால், அது கருக்கலைப்பு சட்ட மீறலாக கருதப்பட்டு, வழக்கு விசாரணையை சந்திக்க நேரும் என்ற அச்சமும், அவர்கள் சுவாசக் கருவியை அகற்ற தடையாக உள்ளது. ஒரு வாரமாக நீடிக்கும் இந்த சிக்கலுக்கு தீர்வு காண, இறந்த பெண்ணின் பெற்றோர், டப்ளின் நீதிமன்றத்தை நாடியுள்ளனர்.

இவ்வழக்கு, இன்று விசாரணைக்கு வருகிறது. கடந்த 2012 ஆம் ஆண்டு, இந்தியாவைச் சேர்ந்த சவீதா என்ற கர்ப்பிணிக்கு, கருக்கலைப்பு செய்ய அயர்லாந்து மருத்துவர்கள் மறுத்ததை அடுத்து, அவர் உயிரிழந்தார். இதனால் எழுந்த சர்ச்சையை தொடர்ந்து, கருக்கலைப்பு சட்டத்தில், அயர்லாந்து அரசு திருத்தம் செய்தது.தற்போது, மீண்டும் அது போன்ற பிரச்சினை அயர்லாந்தில் வெடித்துள்ளது.

# திசையை மாற்றும் துப்பாக்கி ரவை அமெரிக்க இராணுவம் கண்டுபிடிப்பு



இராணுவத்தில் பல புதிய தொழில்நுட்ப வசதிகளைக் கண்டுபிடித்து வரும் அமெரிக்க இராணுவம் தற்போது புத்திசாலி துப்பாக்கி ரவை ஒன்றைக் கண்டுபிடித்துள்ளது. இலக்கை நோக்கி சுட்ட பிறகு காற்றில் பயணிக்கும் நிலையிலேயே புல்லட்டின் திசையை மாற்ற முடியும் என்பதே இதன் சிறப்பம்சம் என அநநாட்டு இராணுவம் தெரிவித்துள்ளது.

அந்நாட்டுப் பாதுகாப்பு மேம்பாட்டு ஆராய்ச்சி பணித்திட்டங்கள் முகாமை, எக்சாக்டோ என்ற திட்டத்தின்படி ஏற்கனவே நேரடியான துப்பாக்கி சுடும் சோதனைகளை நடத்தியுள்ளது. இது போர்வீரர்களுக்கு இலக்கு நகரும் போதும் அதை தாக்கும் உதவியை செய்ய வடிவமைக்கப்பட்ட ஒரு திட்டமாகும்.

கடும் காற்று மற்றும் புழுதிக் காற்று வீசும் போது தற்போது உள்ள ரவைகள் மூலம் இலக்கை நோக்கி குறி வைத்து தாக்க போர்வீரர்களுக்கு சிரமம் ஏற்படுவதாக பாதுகாப்பு மேம்பாட்டு முகாமை பணித்திட்டங்கள் முகாமை தெரிவித்தது.

இதையடுத்து புதிய திட்டம் தீட்டப்பட்டது. அதன்படி இந்த 50 கலிபர் கொண்ட புத்திசாலி ரவை உருவாக்கப்பட்டுள்ளது. இந்த ரவை மூலம் புழுதிக் காற்று வீசும் போது கூட வீரர்களால் துல்லியமாக இலக்கை நோக்கி சுட முடியும். இதற்கான சோதனை முயற்சியில் ரவையானது 1.5 மைல் தூரத்திற்கு நிகரான இலக்கை மூன்றே விநாடிகளில் துல்லியமாக சென்று தாக்கவல்லது.

# யாழ். புகையிரத நிலையத்தில் கண்கவர் ஓவியங்கள்

## கலைஞர்களுக்கு அமைச்சர் டக்ளஸ் பாராட்டு



அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் ஆலோசனைக்கு அமைவாக யாழ்ப்பாணம் புகையிரத நிலையத்தை அழகுபடுத்தும் வகையில் ஓவியங்களை வரையும் ஓவியருக்கு அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா நினைவுப் பரிசில் வழங்கி பாராட்டியுள்ளார்.

யாழ். புகையிரத நிலையத்திற்கு நேற்று அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா நேரில் விஜயம் மேற்கொண்டார்.

இதன்போது ஓவியரால் அங்கு வரையப்பட்ட ஓவியங்களை பார்வையிட்ட அமைச்சர், ஓவியர்களுடன் கலந்துரையாடிய அதேவேளை, தமது வாழ்த்துக்களையும் பாராட்டுக்களையும் தெரிவித்துக் கொண்டார்.

அத்துடன் ஓவியம் வரையப்பட வேண்டிய பகுதிகள் தொடர்பில் ஓவியருடன் அமைச்சர் கலந்துரையாடினார்.

யாழ்ப்பாண புகையிரத நிலையத்தை அழகுபடுத்தும் வகையில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவினது ஆலோசனைக்கும் வழிகாட்டுதல்களுக்கும் அமைவாக பிரான்ஸ் நாட்டைச் சேர்ந்த ரோஸ் என்கின்ற பெண் ஓவியரால் இவ் ஓவியங்கள் வரையப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

இதனிடையே யாழ்ப்பாண புகையிரத நிலையத்தினது அதன் சேவைகள் தொடர்பாக யாழ். புகையிரத நிலைய அதிபர் பிரதீபனிடம் அமைச்சர் கேட்டறிந்து கொண்டார்.

## வடக்கில்...

அபாயமான விடயம் என்றும் விகாரமகாதேவி பூங்காவில் முதலில் வெளியிட்ட கொள்கை விளக்கத்தில் அவ்வாறு எதுவும் இருக்கவில்லை என்றும் கொழும்பில் நேற்று இடம்பெற்ற ஊடக சந்திப்பில் உரையாற்றிய திஸ்ஸ அத்தநாயக்க குறிப்பிட்டார்.

அரசியல் கட்சிகள் மற்றும் அமைப்புக்களுடன் பகிரங்கமாக உடன்படிக்கையில் கைச்சாத்திட்டதோடு இரகசியமாகவும் உடன்படிக்கைகள் கைச்சாத்திடப்பட்டுள்ளதாகவும் ஐக்கிய தேசியக் கட்சியுடன் செய்து கொள்ளப்பட்ட ஒப்பந்தத்தின் பிரதி தன்னிடம் உள்ளதாகவும் திஸ்ஸ அத்தநாயக்க கூறினார்.

எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்ரமசிங்க மற்றும் பொது வேட்பாளர் மைத்திரிபால சிறிசேனவிற்கு இடையில் செய்து கொள்ளப்பட்ட இரகசிய உடன்படிக்கையில் உள்ள சரத்துக்களில் நாட்டுக்கு தீங்கு ஏற்படுத்தும் விடயங்கள் உள்ளதாக அவர் குறிப்பிட்டார்.

உடன்படிக்கையின் 2,6,5 சரத்துக்கள்படி வடக்கில் இராணுவம் 50 வீதம் குறைக்கப்படும் என்றும் 2,7,1 சரத்துக்கள் மூலம் அனைத்து பாதுகாப்பு உயர் வலயங்களும் அகற்றப்படும் என்றும் அந்த இடங்களை முன்னர் இருந்தவர்களுக்கு வழங்க தீர்மானிக்கப்பட்டுள்ளதாகவும் திஸ்ஸ அத்தநாயக்க சுட்டிக்காட்டியுள்ளார்.

2,7,2 சரத்துக்கள்படி தமிழர்களுக்கு 13 ஆம் திருத்தச் சட்டத்திற்கு மேல் சென்று தீர்வு வழங்க வேண்டும் என கூறப்பட்டுள்ளதாகவும் திஸ்ஸ அத்தநாயக்க தெரிவித்துள்ளார்.

## வான்பாய்கிறது...

செல்லும் செக்கனுக்கு ஏக்கருக்கு1132.28 கன அடியாகவும் காணப்பட்டது.

ஆயினும் கிளிநொச்சி மாவட்டத்தில் பெய்த மழைநீருடன் வவுனியா, முல்லைத்தீவு ஆகிய மாவட்டங்களில் பெய்யும் மழைநீரும் இக்குளத்திற்கு வருகின்ற காரணத்தினால் குளத்தின் ஐந்து வான் கதவுகள் திறக்கப்பட்டிருந்த போதும் குளத்தின் நீர்மட்டம் படிப்படியாக அதிகரித்து வந்ததன் காரணமாக குளத்தின் 11 வான் கதவுகளில் இரண்டு கதவுகள் ஒரு அடியாகவும் ஏனைய கதவுகள் இரண்டு அடியாகவும் நேற்று மாலை 6.00 மணியளவில் திறக்கப்பட்டன.

இதன்போது குளத்தின் நீர் மட்டம் 32 அடி 1.5 அங்குலமாகவும் கொள்ளளவு 94 ஆயிரத்து 250 ஏக்கரடியாகவும் நீர் உள்வரும் அளவு செக்கனுக்கு 7524.31 கன அடியாகவும் வெளிச்செல்லும் அளவு செக்கனுக்கு 4499.38 கன அடியாகவும் காணப்பட்டது.

இதேவேளை குளத்திற்கான நீர்வரத்தின் அளவைக்கொண்டு மேலதிக நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுமென நீர்ப்பாசனத் திணைக்கள அதிகாரிகள் தெரிவிக்கின்றனர்.

அதேவேளை, கிளிநொச்சி மாவட்டத்தில் தொடர்ந்து பெய்து வரும் மழை காரணமாக 241 குடும்பங்கள் இடம்பெயர்ந்து தற்காலிக நலன்புரி நிலையங்களில் தங்கவைக்கப்பட்டுள்ளதாக கிளிநொச்சி மாவட்ட செயலாளர் திருமதி ரூபவதி கேதீஸ்வரன், நேற்று தெரிவித்தார்.

கோரக்கண்கட்டு, பன்னங்கட்டி, கிளிநொச்சி நகரத்தின் ஒருபகுதி, ஸ்கந்தபுரம் மணியந்தோப்பு, ஆனைவிழுந்தான் ஆகிய பகுதிகளில் தாழ்நிலப் பகுதிகளில் வசிக்கும் மக்களே இவ்வாறு இடம்பெயர்ந்துள்ளனர்.

பரந்தன் முரசுமோட்டை றோமன் கத்தோலிக்க பாடசாலையில் 92 குடும்பங்களும், கிளிநொச்சி மத்திய கல்லூரியில் 10 குடும்பங்களும், பன்னங்கட்டி அரசினர் தமிழ் கலவன் பாடசாலையில் 13 குடும்பங்களும், கண்ணகிபுரம் அரசினர் தமிழ் கலவன் பாடசாலையில் 45 குடும்பங்களும், ஆனைவிழுந்தான் அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலையில் 73 குடும்பங்களும், ஸ்கந்தபுரம் இல 01 பாடசாலையில் 8 குடும்பங்களும் தங்கவைக்கப்பட்டுள்ளனர்.

இடம்பெயர்ந்த மக்களுக்கான உடனடி சமைத்த உணவுகள் மற்றும் இதர தேவைகள் அனர்த்த முகாமைத்துவ அமைச்சினால் மாவட்ட செயலகத்துக்கு அனுப்பப்பட்ட நிதி மூலம் மேற்கொள்ளப்படுகின்றது.

அத்துடன், அனர்த்த பாதிப்பு, இதர நடவடிக்கைகளில் ஈடுபடுவதற்கு அனைத்து திணைக்களங்களும் தயார் நிலையில் வைக்கப்பட்டுள்ளதாக மாவட்டச் செயலாளர் தெரிவித்தார்.

## அம்பாந்தோட்டை...

ஊடகப் பேச்சாளர் அஜித் ரோஹண தெரிவித்தார்.

அம்பாந்தோட்டையில் கடந்த ஞாயிற்றுக்கிழமை முன்னெடுக்கப்பட்ட ஆர்ப்பாட்டமொன்றின் போது, ஐக்கிய தேசியக் கட்சியின் உறுப்பினர்கள், ஐக்கிய தேசியக் கட்சியின் அம்பாந்தோட்டை மாவட்ட மாநகர சபை தலைவர் அயுப்கான் உட்பட பலர குழுவொன்றினால் தாக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கதாகும்.

## கழிவகற்றல்...

சூழலை பாதிப்பதுடன் பெறுமதியான நிலத்தடி நீர்வளத்தினை துரிதமாக மாசடைய வைக்கிறது.

இக்குறைபாடுகளுக்கு இத்திட்டத்தின் மூலம் நிவாரணமளித்து நகர வதிவிடங்களில் சமூக, பொருளாதார வசதிகளை ஏற்படுத்த முடியும் எனவும், இத்திட்டத்தின் மூலம் முதற்கட்டமாக 80 ஆயிரம் மக்கள் நன்மையடைவார்கள் எனவும் தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு சபையின் திட்டப் பணிப்பாளர் எந்திரி தி.பாரதிதாசன் தெரிவித்துள்ளார். (10)

## புகையிலை...

சிகரெட் விற்பனை தடை செய்யப்பட்டதுடன் 21 வயதுக்கும் குறைவானவர்களுக்கு சிகரெட் விற்பனை செய்வது தடை செய்யப்பட்டது.

முன்னாள் சுகாதார அமைச்சர் சிகரெட் பக்கெட்டுகளில் புகைத்தல் எச்சரிக்கை தொடர்பான புகைப்படத்தை 80 வீதமாக அச்சிடுமாறு உத்தரவிட்டார். அதற்கு அவருக்கு அதிகாரம் உள்ளது. ஆனால், நீதிமன்றத்திற்கு செல்லும் உரிமை நிறுவனத்திற்கு இருப்பதால், நிறுவனம் வழக்கு தாக்கல் செய்தது.

நீதிமன்றம் வழங்கிய தீர்ப்பை கொண்டு அரசாங்கத்தின் மீது குற்றம் சுமத்துவது தவறானது எனவும் ஜனாதிபதி கூறியுள்ளார்.

# சரசாலைக்கு மீண்டும் குடிநீர் விநியோகம்

(சாவகச்சேரி)

சரசாலைப் பகுதிக்கான குடிநீர் விநியோகத்தை மீண்டும் ஆரம்பிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது.

சரசாலை வடக்கு, சரசாலை தெற்கு ஆகிய கிராம அலுவலர் பிரிவுகளுக்கு கடந்த 2011 ஆம் ஆண்டு முதல் ஆரம்பிக்கப்பட்ட மேற்படி குடிநீர் விநியோகம் அண்மைக்காலமாக நிறுத்தப்பட்டிருந்தது.

இவ்விடயம் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் கவனத்திற்கு கொண்டுவரப்பட்டதை தொடர்ந்து மீண்டும் குடிநீர் விநியோகத்தை ஆரம்பிப்பதற்கான ஏற்பாடுகள் இப்போது ஆரம்பிக்கப்பட்டுள்ளது. அத்துடன் நிலுவையாக உள்ள கட்டணத்தை அறவீடு செய்வது தொடர்பாக கால அட்டவணை தொடர்பாக நீரவழங்கல் வடிகாலமைப்பு சபையினர் பரிசீலித்து வருவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

பொதுமக்களை பாதிக்காத வகையில் சலுகை வழங்குவது குறித்து ஆராயப்படுகிறது.

# சுமந்திரன் எம்.பி.தான் தமிழர்களின் சாபக்கேடு

## ஆனந்தசங்கரி சீற்றம்




நாடாளுமன்ற உறுப்பினர் சுமந்திரன் தமிழ் மக்களுக்கு கிடைத்த சாபக்கேடு. புலியில் இருப்பவர்கள் வேலையற்றவர்கள் என தெரிவித்தவர், பின் தமிழ்மக்களின் ஏக பிரதிநிதிகள் புலிகள் என கையொப்பம் இட்டு மக்களை ஏமாற்றியவர் சுமந்திரன் என கடுமையாக சாடினார் ஆனந்தசங்கரி.

நேற்று யாழ். ஊடக அமையத்தில் இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பில் கலந்துகொண்டு செய்தியாளர்களின் கேள்விகளுக்கு பதிலளிக்கையிலேயே அவர் இவ்வாறு சாடினார்.

இறுதி யுத்தகாலமான 5 ஆண்டு காலம் வன்னியில் எம் மக்கள் பட்ட கஷ்டத்திற்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு செய்த துரோகமே காரணம். அது அனைவருக்கும் தெரிந்த விடயம். ஆனால் வெளியில் சொல்ல மாட்டார்கள். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் முடிவுக்காக காத்திருக்காமல் மக்கள் வாக்களிக்க வேண்டும்.

2004 இல் மேடை போட்டு தேர்தலில் வாக்களிக்க வேண்டாம் என பேசியவர்கள் இன்று ரணிலுடன் பேசியுள்ளார்கள். இதனை மறக்க முடியாது.

இப்போது பிரசாரம் செய்கிறார்கள் வடக்கு மாகாணத்திற்கு ஆளுநராக ஒரு இராணுவ அதிகாரி வேண்டாம். ஒரு சிவிலியன்தான் வேண்டும் என்று. ஆனால் கடந்த ஜனாதிபதித் தேர்தலில் இராணுவத் தளபதியான சரத் பொன்சேகாவை ஆதரிப்போம் என்று தெரிவித்து இலங்கையில் ஆட்சி பீடத்தை தீர்மானிப்பது தாமே என தெரிவித்தபோது பெரும்பான்மையினர் இப்படியா சொல்கிறீர்கள் என தெரிவித்து ஒன்றுசேர்ந்து ஜனாதிபதிக்கு வாக்களித்து வெற்றிபெற்றார்கள். அப்போது இத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் இங்கிருந்து ஓடியிருக்க வேண்டும்.

இன்றும் நாளையும் இடம்பெறும் தபால்மூல வாக்களிப்புக்கு இவர்கள் என்ன சொல்லப் போகிறார்கள். சும்மா மக்களை ஏமாற்றுகிறார்கள் என அவர் மேலும் தெரிவித்தார். (இ)

## மனைவி...

10 வயது, 8 வயது குழந்தைகளுடன் வசித்து வரும் இப்பெண் சிற்றூழியர் விவாகரத்து வழக்குத் தாக்கல் செய்து கணவனிடம் குழந்தைகளுக்கான பணத்தொகையும் நீதிமன்றத்தினூடாக பெற்று வரும் நிலையில் பலமுறை இணங்கிப் போவதற்கு கணவனால் வற்புறுத்தப்பட்டு வந்துள்ள நிலையில் நேற்றுக் காலை வழமை போல காலை கடமைக்கு பஸ்ஸில் வந்து வைத்தியசாலை நோக்கி நடந்து சென்றவேளை கணவனினால் மறிக்கப்பட்டதுடன் கணவனினால் கத்தியால் சரமாரியாக வெட்டப்பட்டு வெட்டுக்காயங்களுடன் இரத்தம் தோய்ந்த நிலையில் வைத்தியசாலைக்கு ஓடிச் சென்றுள்ளார்.

படுகாயமடைந்த இப்பெண் யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இதேவேளை மனைவியை வெட்டிய பிரஸ்தாப கணவன் யாழ். பொலிஸ் நிலையத்தில் சரணடைந்ததையடுத்து நேற்று நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்ட நிலையில் அவரை 14 நாட்களுக்கு விளக்கமறியலில் வைக்க நீதவான் உத்தரவிட்டுள்ளார். (இ,25)

## மைத்திரியின்...

சிறிசேன, எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்ரமசிங்க மற்றும் முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க ஆகியோரும் கலந்து கொண்டனர். தமது கட்சியைச் சேர்ந்த 7 மாகாணசபை உறுப்பினர்களும் 69 உள்ளூராட்சி சபை உறுப்பினர்களும் தமது புதிய அரசியல் பயணத்தில் இணைந்து கொண்டுள்ளதாக றிசாத் பதியுதீன் அங்கு தெரிவித்தார்.

அதேவேளை, அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த மற்றுமொரு நாடாளுமன்ற உறுப்பினரான துணையமைச்சர் எம். எல்.ஏ. எம். ஹிஸ்புல்லா ஏற்கனவே ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவிற்கு தனது ஆதரவை வழங்கி வருகின்றார்.

அரசாங்கத் தரப்பினருக்கும் அகில இலங்கை மக்கள் காங்கிரஸுக்குமிடையில் இடம்பெற்ற பேச்சுவார்த்தையின் பலனாகவே, இம்மாத முற்பகுதியில் அரசாங்கக் கூட்டணியின் தேசியப் பட்டியல் நாடாளுமன்ற உறுப்பினரான எச்.எம். அஸ்வர் தனது பதவியை இராஜினமா செய்திருந்தார். அந்த வெற்றிடத்திற்கு எஸ்.எச். அமீர் அலி நியமனம் பெற்றிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# கிளிநொச்சியில் வெள்ள பாதிப்பு அனர்த்தத்தை தணிக்க ஏற்பாடு



(கிளிநொச்சி)

தொடரும் மழையால் கிளிநொச்சி மாவட்டத்தில் தாழ் நிலப்பகுதிகளில் வசிக்கும் மக்கள் கடும் பாதிப்புக்குள்ளாகியுள்ளனர். வீடுகளுக்குள் வெள்ளம் புகுந்ததனால் மக்கள் இடம்பெயர்ந்து பாடசாலைகளிலும் முன்பள்ளிகளிலும் தஞ்சமடைந்துள்ளனர். இவர்களுக்கான சமைத்த உணவுகளை வழங்குவதற்கு நாடாளுமன்ற உறுப்பினர் மு.சந்திரகுமாரின் பணிப்பின்கமைவாக மாவட்ட அனர்த்த முகாமைத்துவப்பிரிவு நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது.

கிளிநொச்சி மாவட்டத்தில் பெய்து வரும் கடும் மழை காரணமாக கரைச்சி, கண்டாவளை, பச்சிலைப்பள்ளி, பூநகரி ஆகிய பிரதேச செயலர் பிரிவுகளில் தாழ் நிலப்பகுதிகளில் வசிக்கும் மக்கள் பாதிப்புக்களை எதிர்கொண்டுள்ளனர். மழை நீர் வீடுகளுக்குள் புகுந்ததாலும் சில தற்காலிக வீடுகள் பாதிப்படைந்ததாலும் மக்கள் இடம்பெயர்ந்து பாடசாலைகளிலும் முன்பள்ளிகளிலும் பொது நோக்கு மண்டபங்களிலும் தஞ்சமடைந்துள்ளனர். இவர்களுக்கான அடிப்படை வசதிகளை ஏற்படுத்திக் கொடுப்பதற்கான நடவடிக்கைகளில் நாடாளுமன்ற உறுப்பினர் மு.சந்திரகுமார் ஈடுபட்டு வருகின்றார். அதன் ஒரு அங்கமாக இடம்பெயர்ந்த மக்கள் வசிக்கும் நலன்புரி நிலையங்களுக்கு நேற்று சென்ற அவர் மக்களின் நிலைமைகளை நேரில் கண்டறிந்தார். அத்தோடு அவர்களுக்கு முதற்கட்டமாக உணவல்லாத பொருட்களையும் வழங்கினார். திருநகர் முன்பள்ளி, ஆனையிறவு (சிவபுரம்) அ.த.க பாடசாலை, பன்னங்கண்டி தமிழ்க்கலவன் பாடசாலை மற்றும் முரசுமோட்டை றோமன் கத்தோலிக்க பாடசாலை ஆகியவற்றில் தங்கியுள்ள மக்களை பார்வையிட்டதோடு அவர்களுக்கான அடுத்த கட்ட உதவிகளை வழங்குவதற்கு நடவடிக்கைகளை மேற்கொள்வதாகவும் தெரிவித்தார்.

இதேவேளை, நேற்று மாலை வரை கிளிநொச்சி மாவட்டத்தில் 48 கிராம அலுவலர் பிரிவுகளில் 2709 குடும்பங்களைச் சேர்ந்த 10781 பேர் மழைவெள்ள அனர்த்தத்தால் பாதிப்படைந்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. இவர்களில் 1007 குடும்பங்களைச் சேர்ந்த 4154 பேர் நலன்புரிநிலையங்களில் தஞ்சமடைந்துள்ளனர். கண்டாவளை பிரதேச செயலர் பிரிவில் 526 குடும்பங்களைச் சேர்ந்த 2072 பேர் பாதிக்கப்பட்ட நிலையில் 253 குடும்பங்களைச்சேர்ந்த 890 பேர் நலன்புரி நிலையங்களில் தங்கியுள்ளனர். பூநகரி பிரதேச செயலர் பிரிவில் 589 குடும்பங்களைச் சேர்ந்த 2567 பேர் பாதிக்கப்பட்ட நிலையில் 499 குடும்பங்களைச் சேர்ந்த 2312 பேர் நலன்புரிநிலையங்களில் தங்கியுள்ளனர்.

அத்தோடு கரைச்சி பிரதேச செயலர்பிரிவில் 1568 குடும்பங்களைச்சேர்ந்த 6041 பேர் பாதிப்புக்களை எதிர்கொண்டுள்ள நிலையில் 255 குடும்பங்களைச் சேர்ந்த 41546 பேர் நலன்புரிநிலையங்களில் தங்கியுள்ளனர்.

பச்சிலைப்பள்ளி பிரதேச செயலர்பிரிவில் 26 குடும்பங்களைச் சேர்ந்த 101 பேர் பாதிக்கப்பட்டுள்ளபோதும் எவரும் இடம்பெயரவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

# வெள்ளம் பாதித்த பகுதிகளில் இராணுவத்தினர் அவசர உதவி

நாச்சிக்குடா அன்னை வேளாங்கன்னி குடியிருப்பில் வெள்ளம் பாதித்த பகுதியில் அவசர உதவி நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளனர்.

இந்தக் குடியிருப்பில் புகுந்த வெள்ள நீர் வழிந்தோட முடியாது காணப்பட்டது. இதனால் 40 வீடுகள் நீரில் மூழ்கிய நிலையில் காணப்படுகிறது.

இதனைத் தொடர்ந்து முழங்காவில் பிரதேச இராணுவப் பொறுப்பதிகாரியின் ஏற்பாட்டில் கனரக இயந்திரங்கள் மூலம் வெள்ளம் வழிந்தோடுவதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

# ஸ்கந்தபுரப் பகுதியில் 37 குடும்பங்கள் இடம்பெயர்வு

(ஸ்கந்தபுரம்)

மழை வெள்ளம் காரணமாக ஸ்கந்தபுரம் இரண்டாம் வாய்க்கால் பகுதியிலுள்ள 37 குடும்பங்களைச் சேர்ந்த 147 பேர் நேற்று இடம்பெயர்ந்துள்ளனர்.

இவர்களில் ஐந்து கர்ப்பிணிகளும், 15 குழந்தைகளும் அடங்குகின்றனர்.

இவர்கள் ஸ்கந்தபுரம் முதலாம் பாடசாலையில் தங்க வைக்கப்பட்டுள்ளனர். இவர்களுக்கான சமைத்த உணவினை அக்கராயன் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தினர் வழங்கியுள்ளனர்.

# புலிகள் தலையெடுக்க அனுமதிக்க மாட்டேன்



## மைத்திரி தெரிவிப்பு

(கொழும்பு)

எதிர்காலத்தில் புலிகள் மீண்டும் தலையெடுக்க ஒருபோதும் நான் அனுமதிக்கப்போவதில்லை என்று பொது எதிரணியின் வேட்பாளர் மைத்திரிபால சிறிசேன தெரிவித்தார்.

நேற்றைய ஊடக மாநாட்டிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

பொது வேட்பாளர் மைத்திரிபால சிறிசேன தொடர்ந்தும் எதிர்வரும் நாட்களில் அரசாங்கத்தின் பிரபல கட்சியொன்று தனக்கு ஆதரவு வழங்கவுள்ளதாகக் கூறினார்.

விடுதலைப் புலிகள் மீண்டும் தலைதூக்காதவாறு தனது வேலைத் திட்டங்களை முன்னெடுக்கவுள்ளதாகவும் தன் மீது நம்பிக்கை வைத்த அனைவருக்கும் நன்றி தெரிவிப்பதாகவும் மைத்திரிபால சிறிசேன குறிப்பிட்டார்.

எதிரணியின் பொதுவேட்பாளர் மைத்திரிபால சிறிசேன யுதீனுக்குமிடையில் விசேட சந்திப்பொன்று எதிர்க் கட்சித் தலைவரின் அலுவலகத்தில் நடைபெற்றது.

இந்தச் சந்திப்பில் எதிர்க் கட்சித் தலைவர் ரணில் விக்ரமசிங்க, நாடாளுமன்ற உறுப்பினர்களான மங்கள சமரவீர, ரவி கருணாநாயக்க ஆகியோரும் கலந்து கொண்டனர்.

# சிரேஷ்ட தேர்தல் அலுவலர்களாக பெண் அதிகாரிகள் நியமனம்

எதிர்வரும் ஜனவரி 8 ஆம் திகதி நடைபெறவுள்ள ஜனாதிபதித் தேர்தலில், கிளிநொச்சி மாவட்டத்தில் முதல்முறையாக தலைமை தாங்கும் பெண் சிரேஷ்ட அதிகாரிகள் நியமிக்கப்படவுள்ளதாக கிளிநொச்சி மாவட்ட செயலாளரும், மாவட்ட தேர்தல் தெரிவத்தாட்சிஅலுவலருமான திருமதி ரூபவதி கேதீஸ்வரன் நேற்று தெரிவித்தார்.

கிளிநொச்சி மாவட்டத்தில் தேர்தல் கடமைகளை ஆண் அலுவலர்கள் மட்டுமே அதிகளவில் நியமிக்கப்படுவது வழமையாகவிருந்தது. இருந்தும், தற்போது அரச அலுவலகங்களில் பெண் அலுவலர்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளமையடுத்து, சிரேஷ்ட தெரிவத்தாட்சி அலுவலராக பெண் அலுவலர்கள் அதிகளவில் நியமிக்கப்படவுள்ளனர்.

கிளிநொச்சி மாவட்டத்திலுள்ள 95 வாக்களிப்பு நிலையங்களில் அதிகளவான நிலையங்களில் பெண்கள், சிரேஷ்ட தெரிவத்தாட்சி அலுவலராக நியமிக்கப்படவுள்ளதாகவும் அவர் தெரிவித்தார். (90)

# தோல்வியுற்றால் ஆட்சி அதிகாரத்தை அமைதியாக ஒப்படைப்பேன்



(கொழும்பு)

ஜனாதிபதித் தேர்தலில் தோல்வியடையும் நிலை ஏற்பட்டால், வெற்றிபெற்ற தரப்பிடம் தனது அரசாங்கம் அமைதியான முறையில் ஆட்சியைக் கையளிக்கும் என்று ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ உறுதியளித்துள்ளார்.

நான் தோல்வியடையப் போவதில்லை, வெற்றியடைவோம் என்ற நம்பிக்கை எனக்கு உள்ளது.

பிரிட்டனிலிருந்து வெளியாகும் ஃபைனான்ஸியல் டைம்ஸ் நாளிதழின் கேள்விகளுக்கு அளித்த பதிலிலேயே ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ இந்த உறுதிமொழியை அளித்துள்ளார்.

எனினும், நான் தோல்வியடைப் போவதில்லை என்றும் நம்பிக்கை தெரிவித்துள்ள மகிந்த ராஜபக்ஷ, முதிர்ச்சியடைந்த, துடிப்புள்ள ஜனநாயகமான இலங்கையில் அமைதியான முறையிலேயே ஆட்சி கைமாற்றங்கள் நடந்துள்ளன என்றும் கூறியுள்ளார்.

ஆனால், மீண்டும் நான் கூறுகின்றேன். நாங்கள் வெற்றியடைவோம் என்று நான் நம்பிக்கையுடன் இருக்கின்றேன் என்றும் மகிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

இலங்கை ஜனாதிபதித் தேர்தலை மேற்குலகம் மிகவும் உன்னிப்பாக அவதானித்து வருவதாகக் கூறியுள்ள ஃபைனான்ஸியல் டைம்ஸ் செய்தியாளர், புதிய அரசாங்கம் உள்நாட்டு யுத்தத்தின்போது நடந்துள்ள போர்க்குற்றங்கள் தொடர்பான குற்றச்சாட்டுக்களை விசாரிக்கும் என்ற நம்பிக்கை மேற்குலகிடம் உள்ளதாகவும் கூறியுள்ளார்.

# இந்திய மீனவர்கள் 28 பேர் விடுதலை

வடகடலில் டிசம்பர் மாதம் 9 ஆம் திகதி அத்துமீறி மீன்பிடித்ததாகக் கூறி கைது செய்யப்பட்ட இந்திய மீனவர்களில் 28 பேரை பருத்தித்துறை நீதிமன்றம் நேற்று விடுதலை செய்திருக்கின்றது.

இதனை உறுதி செய்துள்ள யாழ்ப்பாணத்தில் உள்ள இந்திய துணைத்தூதரக அதிகாரிகள், அவர்களைத் தாங்கள் பொறுப்பேற்றுள்ளதாகத் தெரிவித்திருக்கின்றனர்.

விடுதலை செய்யப்பட்ட மீனவர்கள் தமிழ் நாடு நாகபட்டினத்தைச் சேர்ந்தவர்கள் எனத் தெரிவிக்கப்பட்டிருக்கின்றது.

கடந்த 9ஆம் திகதி 43 இந்திய மீனவர்கள் இலங்கைக் கடற்படையினரால் கைது செய்யப்பட்டிருந்தனர்.

இவர்களில் 28 பேர் தமிழ் நாட்டின் நாகபட்டினத்தைச் சேர்ந்தவர்கள் என்றும் ஏனைய 15 பேரும், புதுச்சேரியைச் சேர்ந்தவர்கள் என்றும் விடுதலை செய்யப்பட்டுள்ள மீனவர்கள் தெரிவித்திருக்கின்றனர்.

இலங்கையின் சட்டமா அதிபருடைய உத்தரவுக்கமைவாக இவர்கள் விடுதலை செய்யப்பட்டுள்ள போதிலும் புதுச்சேரியைச் சேர்ந்த 15 பேரையும் இலங்கை அதிகாரிகள் ஏன் விடுதலை செய்யவில்லை என்பது தங்களுக்குத் தெரியவில்லை என்றும், தங்களோடு கைதுசெய்யப்பட்ட அவர்கள் விடுதலை செய்யப்படாதிருப்பது தங்களுக்குக் கவலையாக இருப்பதாகவும் அவர்கள் தெரிவித்திருக்கின்றனர்.

# கிழக்கு கடலில் மீனவர் மரணம்

திருகோணமலை மாவட்டத்தின் கொட்டியாரக்குடா கடலில் படகு மூழ்கியதால், காணாமல் போன மீனவரான கேணிக்காட்டைச் சேர்ந்த ஹுஸைனின் முஹம்மது பாஹில் (வயது 34) என்பவரின் சடலம் நேற்று காலை சூடைக்குடா கடற்கரையில் மீட்கப்பட்டதாக மூதூர் பொலிஸார் தெரிவித்தனர்.

கடலில் மீன்பிடிப்பதற்கு விடப்பட்டிருந்த வலையை மீண்டும் எடுப்பதற்கு கடந்த சனிக்கிழமை இவர் சென்றதாகவும் இதன்போது இவரது படகு கடலில் மூழ்கியதுடன், இந்த மீனவரும் காணாமல் போனார். இந்த நிலையிலேயே இவரது சடலம் மீட்கப்பட்டதாகவும் பொலிஸார் கூறினர்.


# பக்க வடிவமைப்பாளர் தேவை

தினமுரசு நிறுவனத்தில் பணிபுரிவதற்கு பக்கவடிவமைப்பாளர் தேவை

CorelDraw, Pagemaker, Photoshop, ஆகியவற்றில் முன்னனுபவம் உள்ளவர்கள் விரும்பத்தக்கது.

பயில விரும்புவர்களும் விண்ணப்பிக்கலாம். அலுவலக நேரத்தில் உரிய ஆவணங்களுடன் நேரில் சமூகம் தரவும்.

ஆளணி முகாமையாளர்


இப்பத்திரிகை இல.373 பிரதான வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் அமைந்துள்ள அற்புதன் அச்சகத்தில் 2014 டிசம்பர் 23 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.